உள்ளடக்கம்

	பக்கம்
முன்மொழி	05
இமாம் அபூ ஹனீபா	07
இமாம் மாலிக்	115
இமாம் ஷாபியீ	145
இமாம் ஹன்பல்	237
முடிவுரை	281
உதவிய நூல்கள்	287

பீடிகை

இருலோக இரட்சகர், எம்பெருமான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் அருளினார்கள் : "என் கூட்டத்தாரில் உத்தமர்கள் சிலர் தோன்றுவார்கள். அத்தகைய புனித சீலர்கள் பனீஇஸ்ராயீல் களிடையே கூடத் தோன்றவில்லை. அவர்களுடைய தலையைப் பிளப்பதற்காகத் தலைக்குமேல் வாள் உயர்த்தப்படினும் கூடத் தங்கள் உன்னதமான சன்மார்க்கத்தின் விஷயத்தில் அணுவளவும் விட்டுக் கொடுக்கமாட்டார்கள்" என்று.

நமது மதிப்புக்கும், மரியாதைக்கும் உரிய சட்ட மேதைகள், சத்தியத்துக்காகவே தங்கள் உயிர்களையும் அர்ப்பணித்த சான்றோர்கள், சன்மார்க்கம் சீர்குலையாமல் தடுத்து அதன் கட்டுக்கோப்பைக் காப்பாற்றித் தந்த கண்ணியவான்களாகிய நான்கு 'மத்ஹபு'களின் இமாம்களும், இந்த ஹதீஸில் சுட்டிக் காட்டப்படும் ஆதர்ச புருஷர்களாக நடந்து, அமரத்வ மடைந்தவர்களாவர். உலகை உய்விக்க வந்த உத்தமத் திருநபி (ஸல்) உலகுக்குக் கற்றுத் தந்த உன்னத வழிமுறை, ஒரே நூற்றாண்டுக்குள் சுயநல நோக்கங்கொண்ட தீயவர்களாலும், உள்ளொன்று வைத்துப் புறமொன்றான நயவஞ்சகர்களாலும், இஸ்லாத்தின் எதிரிகளின் கையாட்களாலும் சீர்குலைந்து உருமாறி அழிந்து படலாமோ என்ற அச்சத்துக்கு இடமுண்டாகி இருந்தது. சாதாரண மக்கள் எவ்விதம் செயல்படுவது என்றே தெரியாது குழம்பிய நிலையும் ஏற்பட்டிருந்தது. இச்சமயம்தான் நமது 'மத்ஹபு'களின் இமாம்கள் அடுத்தடுத்து வந்து, நம் பெருமானார் (ஸல்) அவர்களின் சொல் செயல்களின் அடிப்படையிலேயே சன்மார்க்க நெறிமுறைகளுடன் கூடிய வழியை வகுத்துக் காட்டி, இருளில் தத்தளித்த மக்களுக்கு ஒளியை நல்கினார்கள். இந்த வேலையில் அவர்கள் எதிர்நோக்க நேர்ந்த ஆபத்துக்களோ ஒன்றிரண்டல்ல. தமது ஆட்சிக்கு அவர்களால்

ஆபத்து வரலாமோ என்று எண்ணிய ஆட்சியாளர்களின் கையில் அவர்கள் பட்ட அவதிகளோ, படிப்போரை இரத்தக் கண்ணீர் விடச் செய்பவையாகும். ஆனால், பாராட்டையோ, பட்டம் பதவியையோ, போக வாழ்வையோ விரும்பாமல், அல்லாஹ்வை முன்னிறுத்தி, எத்துணையோ தொல்லைகளையும் துயரங்களையும் மகா சகிப்புடன் தாங்கிக் கொண்டு அவர்கள் கடமையாற்றினர். இமாம் அபூ ஹனீபா, இமாம் மாலிக், இமாம் ஷாபியீ, இமாம் அஹ்மதிப்னு ஹன்பல் – இப்படியாக ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் நாம் படிக்கும்போது, ''சன்மார்க்கத்துக்காக இப்படியா கஷ்டங்களைத் தாங்கியிருக்க முடியும்!'' என்று வியப்புறுகிறோம். அவர்கள் அறிவுத் திறனையும், மகா மேதைமையும் காணும்போது இப்படி இஸ்லாத்தின் பெருமையை நிலைநாட்டிய அவர்களின் திரத்தை வியக்கிறோம்.

அன்றையக் குழப்பமான சூழ்நிலையில் இந்த இமாம் கள் தோன்றி வழிகாட்டியிருக்காவிட்டால், அல்லது, இவர்கள் தண்டனைக்கு அஞ்சியோ, சம்மானங்களை ஆசித்தோ ஒரு சிறிதேனும் விட்டுக் கொடுத்திருந்தால் முஸ்லிம்கள் அன்றே பல்லாயிரம் பிரிவுகளாகிச் சிதறுண் டிருப்பர் என்பதை ஒருக்கணம் சிந்தித்தாலும் இவர் களுடைய மகத்தான சேவையை நாம் உணர முடியும்.

இஸ்லாத்தின் கோட்டையைத் தூக்கி நிறுத்திய மகத்தான இரும்புத் தூண்கள் இவர்கள். எனவே, இவர்களைப் பற்றி தமிழகம்–தமிழ் கூறும் நல்லுலகத்து முஸ்லிம்கள் நன்கு அறிந்து கொள்வது அவசியம். 'சுன்னத் வல் ஜமாஅத்'தைப் பின்பற்றும் முஸ்லிம்கள் இந்த நான்கு 'மத்ஹபு'களில் ஒன்றைப் பின்பற்றியே ஆகவேண்டும். இவற்றுக்குப் புறம்பே அவர்கள் இருப்பதென்பதே சாத்தியமல்ல. எனவே, இந்த இமாம்கள் எப்படி வாழ்ந்தார்கள், எப்படி இஸ்லாத்துக்காகப் பாடுபட்டார்கள், எப்படி இந்த 'மத்ஹபு'கள் உருவாக்கப்பட்டன என்ற விபரங்களை நாம் அறிவது மிகவும் அவசியமாகும்.

1. இமாம் அபூ ஹனீபா (ரஹ்)

"உலகிலுள்ள அறிஞர்களில் ஆயிரம் பேருடைய அறிவுத் திறனை ஒரு தட்டிலும், இமாம் அபூ ஹனீபாவின் அறிவுத் திறனை மறு தட்டிலும் வைத்து நிறுத்தாலும் இமாம் அபூ ஹனீபாவின் அறிவுத் திறனுள்ள தட்டே அதிகக் கனமுடையதாக இருக்கும்" என்று இமாமுல் அஃலம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களின் அறிவுத் திறனைப் போற்றுகிறார் ஒரு பெரியார்.

உலகில் பல கோடி முஸ்லிம்கள், அவர்கள் வகுத்த இஸ்லாமிய வழி முறையைப் பின்பற்றியொழுகும் வாரிசுகளாய் உள்ளனர். அவர்கள் ஒரு மாபெரும் ஆலிம்; ஒப்பற்ற ஃபகீஹ்; முஹத்திஸ்; ஈடிணையற்ற மெய்வணக்கவாளி; நபி பெருமான் (ஸல்) அவர்களின் அருமைத் தோழர்கள் பலருடன் பழகும் பாக்கியம் பெற்ற புனிதர் (தாபியிய்யி).

மார்க்கச் சட்டமாம் ஃபிக்ஹின் அடிப்படையினையே முதன் முதலாக விதிப்படி முறைப்படுத்தி உலகுக்கு வழங்கிய மாமேதை; இணையற்ற வர்த்தக வேந்தர்; இடையறாது அள்ளி வழங்கிக் கைசிவந்த வள்ளல்.

எம்பெருமானாரின் குடும்பத்தார் மீது கொண்டிருந்த அன்பாலும், சத்தியத்தை விட்டுச் சறுகாத மாண்பாலும், ஆட்சி பீடத்தாருக்கு அடிவருட மறுத்த அஞ்சா நெஞ்சத்தாலும், இருட் சிறையில் தள்ளப் பெற்றுக் கடுமையாக நடத்தப்பட்டு கடைசியில் வீர மரணமடைந்த சத்தியத் தியாகி. இவர்கள் தாம் இமாமுல் அஃலம் அபூ ஹனீபா (ரஹ்) அவர்களாவர்.

குலமும், பிறப்பும்

இமாம் அபூ ஹனீபாவின் அசல் பெயர் நுஃமான் இப்னு தாபித். எத்தனையோ பெரியார்கள், மகான்கள் எம்பெருமானா ருடையவோ, முக்கிய ஸஹாபாக்களுடையவோ சந்ததியினராக இருக்கக் காண்கிறோம். ஆனால், இஸ்லாத்துக்கு இணையற்ற சேவை செய்த இந்த இமாமவர்கள், தங்கள் பாட்டனாரிலிருந்தே

முஸ்லிமான பாரஸீகக் குடும்பமொன்றைச் சேர்ந்தவர்களாவார்கள். அதனால் என்ன? ஸல்மானுல் பார்ஸியும், நெருப்பை வணங்கும் பார்ஸிக் குலத்தைச் சேர்ந்த வர்களாகத்தான் இருந்தார்கள். ஆனால், எம்பெருமானைத் தேடி அலைந்து, அவர்களுடைய உற்ற தோழர்களில் ஒருவராகி, 'ஸல்மான் என்னிலுள்ளவர், என்னைச் சேர்ந்தவர்' என்று பெருமானாராலேயே பாராட்டப் பெற்ற பெருமை அவர்களுடையதல்லவா! அஃதேபோல், இமாம் அபூ ஹனீபாவும் தங்களுடைய அற்புத சாதனைகளால் இஸ்லாமிய உலகில் இணையற்ற இடத்தை அடைந்துள்ளார்கள்.

"அரபு நாட்டின் சிரசு" என்று சிறப்புப் பெயர் பெற்ற கூபா தான் இமாமவர்களின் பிறப்பிடமாகும். கூபா இஸ்லாமிய ஆட்சி யில் புதிதாகப் பூத்த ஒரு புது நகரமாகும். ஹிஜ்ரி பதினேழில் தான் அது உருவாக்கப்பட்டது. ஹஜ்ரத் உமருல் பாரூக் (ரலி) அவர்களுடைய கிலாபத்தில் அவர்களின் உத்தரவுக்கேற்ப ஸஅதிப்னு அபீ வக்காஸ் (ரலி) அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட நகரம் கூபா. அங்கே முதன் முதலில் யமன்வாசிகள் பன்னிரெண்டாயிரம் பேர்களும், நஸார் வகுப்பினர் எட்டாயிரவர்களும் குடியேற்றப்பட்டனர். பல நாடுகளுக் கும் முதலில் ஹிஜ்ரத் சென்ற குடும்பங்கள் சிலவும் அங்கே வந்து குடி புகுந்தனர். இவர்களுக்கு ஹஜ்ரத் உமர் (ரலி) ஆரம்பத்தில் உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தார்கள். பின்னர் அது தேவை யில்லாது போயிற்று. ஏனெனில், பாரஸீக, ரோம சாம்ராஜ்யங்களை எதிர்த்து நிகழ்த்தப்பட்ட போர்களில் கூபாவைச் சேர்ந்த வீரர்கள் அதிகம் பங்கெடுத்துக் கொண்டனர். அந்த நகரவாசிகள் காட்டிய போரார்வத்தையும், மார்க்க ஞானப் பற்றுதலையும் கண்டு மனமகிழ்ந்து கலீபா ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூபாவை 'இறைவனின் துவஜம்' (கொடி) 'ஈமானின் பொக்கிஷம்' என்றெல் லாம் புகழ்ந்து பாராட்டலானார்கள். ஹஜ்ரத் அலீ (ரலி) அவர் களுடைய ஆட்சியில் அவர்கள் கூபாவிலேயே தங்கி அதைத் தமது ஆட்சியின் தலைமைப் பீடமாகவும் ஆக்கிக் கொண்டார்கள். எனவே, ஸஹாபிப் பெரியார்களில் பலரும் அங்கே வந்து தங்கி யிருந்திருக்கின்றனர். இஸ்லாமியக் கலை ஞானங்கள் பரிணமிக் கும் ஒரு நகரமாக அது அமைந்து விட்டிருந்த மார்க்க ஆராய்ச்சி -

அதிலும் குறிப்பாக 'ஃபிக்ஹு' என்ற இஸ்லாமிய மார்க்கச் சட்டங்கள் பற்றிய ஆராய்ச்சி கூபாவிலிருந்த அறிஞர்களின் விசேஷமான பரிசீலனைக்குள்ளாயிற்று. எனவே, 'ஹஜ்ஜுக்குச் செல்வதற்கு மக்கா, கிராஅத்துக்கு மதீனா, ஃபிக்ஹுவுக்குக் கூபா' என்று பெரியார் ஸுப்யான் பின் ஜனா அவர்களால் போற்றப்பட்டது. அத்துடனின்றி, இமாம் அபூ ஹனீபாவின் காலத்தில் ஹதீஸ் விளக்கத்தில் தேர்ந்த முப்பது பெரியார் (பலர் தாபியீன்)களும் அங்கே இருந்தனர். இத்தகைய நகரம் இமாமுல் அஃலத்தின் பிறப்பிடமாக அமைந்தது விசேஷமன்றோ!

இமாமவர்கள் அரபு வமிசத்தினர்தாம் என்றும், அவர் களுடைய வம்சாவளி நுஃமான் பின் தாபித் பின் ஜௌத்தி பின் யஹ்யா பின் ஜைத் பின் அஸத் பின் ராஷிதுல் அன்ஸாரி என்றும் ஆசிரியர்கள் சிலர் எழுதி வைத்துள்ளனர். இன்னொரு பக்கம், அவர்களுடைய பாட்டனார் ஜௌத்தி ஆப்கனிஸ்தானி லுள்ள காபூலில் கைதியாகச் சிறைப்பிடிக்கப்பட்டு அரபு நாட்டுக்குக் கொண்டு வரப்பட்டவர் என்றும், அங்கே பனீ தைமுல்லா என்ற குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தியால் அவர் விலைக்கு வாங்கப்பட்டார் என்றும், பின்னர் விடுதலையானார் என்றும், எனவேதான், அவர் அடிமையாக இருந்ததைக் காட்டக்கூடிய முறையில் இமாமவர் களுடைய குடும்பத்தார் 'மௌலா' (அடிமை) என்று அழைக்கப் படுகின்றனர் என்றும் நூலாசிரியர்கள் சிலர் கூறுகின்றனர். அடிமை கள் பலர் அரசர்களாகி உலகப் புகழ் பெற்றதை இஸ்லாமிய சரிதை எண்பித்துக் காட்டிக் கொண்டிருக்கிறது. அடிமையாக இருந்த ஹபஷி பிலால் (ரலி) இஸ்லாமிய மக்களுடைய இதயத்தில் எத்தகைய அன்பைப் பெற்று விட்டார்கள்! ஆத்மஞான போதனை புரிந்த, மக்களுக்கு வழிகாட்டிய மகான்கள் பலர்கூட அடிமைகளாக இருந்து விடுதலை பெற்றுள்ளனர். இமாம் ஹஸன் பஸரி, இப்னு ஸீரின், தாவூஸ், அதா பின் யஸார், நாபிஉ, இக்ரிமா, மக்ஹூல் போன்ற பெரியார்கள் அடிமைகளாகவோ, அடிமைகளின் பரம்பரையில் தோன்றியவர்களாகவோ இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆனால், இமாமுல் அஃலம் அபூ ஹனீபா அவர்களோ பாரஸீக நாட்டைச் சார்ந்த பரம்பரை வர்த்தகக் குடும்ப மொன்றிலு தித்தவர்கள். பாரஸீக மொழியைத் தாய்மொழியாகக்

கொண்டவர்கள் என்று ஆதாரப்பூர்வமாகத் தெரியவருகிறது. அவர்களுடைய சரியான வம்சாவளியாவது : நுஃமான் பின் தாபித் பின் ஜௌத்தி பின் மாஹ் என்பதாகும். இப்பெயர்கள் யாவும் பாரஸீகத்தவருடையவையாகும். ,இமாமவர்களின் புத்திரருடைய புத்திரரும் (அவர்கள் பேரரும்) கலீபா மாமூனின் ஆட்சியில் பிரதம நீதிபதியாக இருந்தவருமான இஸ்மாயீல் சொல்கிறார் : "நாங்கள் பாரஸீகப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். எக்காலத்திலும் எங்கள் குடும்பத்தார் யாருக்கும் அடிமைகளாக இருந்ததில்லை. என் பாட்டனார் இமாம் அபூ ஹனீபா ஹிஜ்ரி எண்பதில் பிறந்தார்கள். என் பாட்டனாரின் தந்தையான தாபித், ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய சமூகம் சென்றுள்ளார். அச்சமயம் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் எங்கள் குடும்பத் தாருக்காக நற்பிரார்த்தனை புரிந்துள்ளார்கள்". இந்தக் குடும்பம் மிகவும் பிரபலமானதாக இருந்ததாகவும் இந்த இஸ்மாயீல் கூறுகிறார்.

கூபாவுக்குச் சென்று வர்த்தகம் நடத்தி வந்த ஜௌத்தி, அரபிகளோடு சகஜமாகப் பழகி, அவர்களிடையே நற்பெயர் பெற்று விட்டார். பின்னர் இவர் ஹஜ்ரத் அலீ (ரலி)யின் முன்னிலையில் இஸ்லாத்தை ஏற்று, நுஃமான் என்ற பெயரை அடைந்து கொண்டார். எனவே, இமாமுல் அஃலம் அவர்கள் தமது பாட்டனாரின் இஸ்லாமியப் பெயரான நுஃமான் என்பதையே தங்களுடைய இயற்பெயராகவும் அடையப் பெற்றிருந்தார்கள்.

ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூபாவிலிருந்து ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார்களாதலால், நுஃமான் ஒரு தடவை பாரஸீகத்தவருடைய தேசீயப் பண்டிகையான 'நௌரோஸ்' அன்று ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்குப் 'ஃபாலூதா' என்ற மதுர உணவைக் கொணர்ந்து சமர்ப்பித்தார். அதைப் பெற்ற ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள், 'இங்கே தினமும் நௌரோ ஸாகவே இருக்கிறது' என்று கூறியவர்களாக, நுஃமானின் குடும்பத்தாரின் நலனுக்காகப் பிரார்த்தித்தார்கள். இதன் பின்னர் இமாமுல் அஃலமின் தந்தையாரான தாபித் பிறந்த போதும், அவர்களைத் தந்தை நுஃமான், ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுடைய சமூகத்துக்குக் கொண்டு வந்து அவர்களுடைய நல்லாசியைப் பெற்றுச் சென்றுள்ளார்.

இமாமுல் அஃலமவர்களின் தந்தையார் தாபித் அவர்களுடைய தாயாரை மணந்தது பற்றி ரசமான சம்பவமொன்று கூறப்படுகிறது. அது வருமாறு : அவர் மிகுந்த பேணுதலுள்ள இளைஞராகவும், 'ஹலால்' அல்லாததை விட்டும் ஒதுங்கு பவராகவும் வாழ்ந்த காலத்தில், ஓர் ஆற்றில் மிதந்து வந்த பழத்தை எடுத்துப் பாதியைத் தின்று விட்டார். அப்போது அதன் சொந்தக்காரனிடம் 'ஹலால்' கேட்காமல், அதைத் தின்பது தமக்கு ஆகுமானதல்ல என்ற உதிப்பு உண்டாகவே, அவர் ஆற்றின் எதிர் திசையில் நடந்து போய், ஆற்றங்கரையிலிருந்த தோட்டம் ஒன்றையும், அதிலிருந்த வெகு குரூரமான தோட்டக்காரனை யும் கண்டார். அவனிடம், அந்தப் பழத்தை 'ஹலால்' ஆக்கும்படி கேட்டார். அவனோ அவரிடம் கடுமையாக நடக்கலானான். அவருக்கு அந்தப் பழத்தை 'ஹலால்' ஆக்க வேண்டுமானால் அவர் தன்னுடைய மகளை மணந்து கொள்ள வேண்டும் என்றும், அவளோ குரூபியாயும், கைகால் முடமானவளாயும், கண் பார்வையற்றவளாயும், காது கேளாதவளாயும், வாய் ஊமையானவளாயும் இருப்பதாகவும் வர்ணித்தான். தாபித் சிந்தித்ததில் மறுமையின் நன்மைக்காக இம்மையைத் தியாகம் செய்து விடுவது என்று முடிவுக்கு வந்து, அந்தப் பெண்ணை மணக்கத் தயாரானார். உடனே அவன், அந்தப் பெண்ணை மணமுடித்து வைத்து, அந்தப் பழத்தையும் அவருக்கு 'ஹலாலா'க்கி விட்டான். அன்றிரவு தன் மணமகளைத் தனிமையில் சந்தித்த அவர், அவள் சகல லட்சணங்களும் பொருந்திய ஆரணங்காக இருக்கக் கண்டு, ஒருக்கால் அன்னிய மாதாக இருக்கலாம் என்று எண்ணி, "யார் நீ?" என்று கேட்டார். அந்தப் பெண்மணி 'நான்தான் என் தந்தையார் வர்ணித்த குரூபி' என்றாள். பின் அவர் ஏன் அவளைப் பற்றித் தம்மிடம் படுமோசமாக விவரித்தார் என்று தாபித் கேட்ட போது, அவருடைய மன உறுதியைச் சோதிப்பதற்காகச் சொன்ன சொல் என்றாள் அப்பெண்மணி. எந்த ஆணும் தன்னைப் பார்த்ததில்லையாதலால் தன்னைக் குரூபி என்றும், விலக்கப் பட்ட நடை, செயல், பார்வை, கேள்வி, பேச்சு ஆகியவற்றை விட்டும் தான் அப்பாற்பட்டவளாதலால் தன்னை முடம், குருடு, செவிடு, ஊமை என்றும் அவர் விவரித்துள்ளார் என்று அவள் விளக்கினாள்.

அதன்பின், அன்றிரவில் அவர்களிருவரும் இச்சையை அடக்கி இறைவனுக்கு நன்றி தெரிவிப்பதற்காக நீண்ட நேரம் வணக்கத்தில் மூழ்கியிருந்து, பின்னர் வீடு கூடினர் என்றும், அதில் ஜனித்தவர்கள் தாம் இமாம் அபூ ஹனீபா என்றும் சொல்லப்படுகிறது. ஆனால், இது வெறும் கட்டுக்கதையேயன்றி ஆதாரப்பூர்வமான சொல்லல்ல. இமாமவர்களின் ஆதாரப்பூர்வமான நூல் எதிலும் இது ஒப்புக் கொள்ளப்படவில்லை. மற்றும் பல பெரியார்களுடைய வாழ்க்கையிலும் இதே சம்பவம் நடந்ததாகவும் எழுதி வைக்கப்பட்டுள்ளது. (ஹஜ்ரத் கௌதுல் அஃலமின் பெற்றோரைப் பற்றிக்கூட இதே விஷயம் எழுதப்பட்டுள்ளது.)

இமாமவர்களின் தந்தையார் தாபித், ஜவுளி வர்த்தகத்தில் கைதேர்ந்தவராக இருந்து பெரும் பொருளீட்டிக் கொண்டிருந் தார். அவருடைய நாற்பதாவது வயதில், ஹிஜ்ரி எண்பதில் (கி.பி. எழுநூறில்) நமது இமாமுல் அஃலம் பிறந்தார்கள்.

இமாம் அபூ ஹனீபாவின் இளமைப் பருவம் பற்றி விவரம் எதுவும் கிடைக்கவில்லை. செல்வக் குழந்தையாக அவர்கள் வளர்ந்து வந்த நிலையில், முஸ்லிம் குழந்தைகளுக்குச் சாதாரணமாகக் கற்பிக்கப்படும் ஆரம்ப மார்க்கக் கல்வியை அவர்கள் பயின்றிருக் கிறார்கள். ஆனால், அவர்கள் தம் இளமையிலேயே தந்தையை இழந்துவிட்டதால், தங்கள் ஜவுளிக் கடையின் காரியஸ்தர்களோடு சேர்ந்து வர்த்தகத்தைக் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர் களுக்கு உண்டாகி விட்டது. அதனால், மேல் படிப்பில் கவனம் செலுத்த இயலாது வர்த்தகப் பயிற்சி பெறலானார்கள்.

அன்னையிடம் அன்பு

தந்தையை இழந்த நுஃமான், தமது தாயாருடன் வாழ்ந்து வந்தார்கள். தாயாருடைய சொல்லைத் தட்டாத தனயனாக அவர்கள் பெயரெடுத்தார்கள். தமது தாயாருடைய விருப்பத்தை நிறைவேற்ற எந்தச் சமயத்திலும் அவர்கள் தயங்கியதே இல்லை. பிற்காலத்தில் அவர்கள் உலகப் புகழ்பெற்ற இமாமுல் அஃலமாக, மிக மிகச் சிக்கலான நூற்றுக்கணக்கான பிரச்சினைகளுக்கு வெகு சுலபமாகப் பதில் தந்த மாமேதையாக உலகத்தாரால் போற்றப்

பட்டுக் கொண்டிருந்தபோது கூடத் தமது அன்னையாரின் விருப்பங் களை நிறைவேற்றுவதில் சற்றும் தயங்கியதில்லை. இமாமவர்கள் எவ்வளவுதான் உலகப் புகழ் பெற்றவர்களாக இருப்பினும், தங்கள் அன்னைக்குப் புதல்வர் தாமே! அதனால், தாய் சொல்லை அவர்கள் தட்டுவதில்லை. அந்த மூதாட்டி அம்ரு பின் ஜர்க்கா என்ற ஓர் உபன்னியாசகரிடம் பெருமதிப்பு வைத்திருந்தார். தமக்குத் தோன்றும் சகல பிரச்சினைகளுக்கும் அவரிடமே பதில் கேட்பார். எனவே, இதற்காக அபூ ஹனீபாவையே அவர் ஏவுவதும் உண்டு. அந்தப் பிரச்சினைக்கான பதில் தமக்கே நன்கு தெரிந்திருப்பினும், தமது தாயைத் திருப்திப்படுத்துவதற்காக அவர்கள் அந்த உபன்னி யாசகரிடம் சென்று பதில் கேட்பார்கள். அவர்கள் முன், அவர் பதில் கூறத் தயங்குவார். "நீங்களோ பெரிய இமாம்; உங்கள் முன் நான் என்ன சொல்ல முடியும்?" என்பார். ஆனால், இமாமவர்கள் அவரை விடமாட்டார்கள். "உங்களிடம் கேட்டு விடை பெறவேண்டும் என்று என் தாய் ஆணையிட்டார்கள். ஆகவே, நீங்கள் தான் பதிலளிக்க வேண்டும்" என்று கூறுவார்கள். ஒருக்கால் அவருக்கு விடை தெரியாதிருப்பினும், தாங்களே சொல்லிக் கொடுத்து, அதைத் தங்கள் அன்னையாரிடம் வந்து அவருடைய சொந்த பதிலைப் போல் தெரிவிக்கச் செய்வார்கள்.

அவர்களுடைய மார்க்கத் தீர்ப்புக்காக எத்தனையோ பேர், அவர்களுடைய மன்றத்துக்கு முன்பு காத்திருந்த சமயம், தமது தாயாரைத் திருப்தி செய்வதற்காக அந்தச் சாதாரண உபன்னி யாசகரிடம் அவர்கள் சென்று வருவார்கள்.

இமாம் அபூ ஹனீபாவின் வாழ்க்கையில் எத்தனையோ சோதனைகள் ஏற்பட்டதுண்டு. அப்போதெல்லாம் அவர்கள் மனம் கலங்கியதில்லை. குறிப்பாக, ஒரு சமயம் ஆணவங் கொண்ட ஆட்சியாளரின் உத்தரவால், அவர்கள் கசையடி பெற நேர்ந்தது. அது குறித்தும் அவர்கள் மனம் தளரவில்லையாயினும், அப்போது உயிரோடிருந்த தங்கள் அன்னையை நினைத்தே வருந்தலானார் கள். "இதை நான் ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை; ஆனால், எனக்களிக்கப்படும் இந்தத் தண்டனையைக் கேள்விப்பட்டு என் அன்னை துடி துடிப்பார்களே என்று எண்ணித்தான் வேதனை யடைகிறேன்" என்று கூறினார்கள். அன்னையிடம் அன்பு கொண்ட ஓர் ஆதர்ச மகான் இமாமுல் அஃலம் என்பதில் ஐயமில்லை.

அக்கால அரசியல் நிலை

இமாமவர்களின் காலத்தின் அரசியல் நிலையை ஒரு சிறிதேனும் விளங்கிக் கொள்ள வேண்டுவது அவசியமாகும். ஏனெனில், ஒரு வகையில் அரசியலோடு அவர்களுக்குத் தொடர்பு இருந்திருக்கிறது. யதேச்சாதிகார மன்னர்கள் வருவதும் போவதுமாகப் பலருடைய ஆட்சி நடந்து விட்டது. உமையாக் கலீபாக்கள் அறுவருடையவும், அப்பாஸிய்ய கலீபாக்கள் இருவருடையவுமாக எட்டு கலீபாக்களின் ஆட்சியை அவர்கள் கண்டு விட்டார்கள். ஒரு யதேச்சாதிகாரப் பரம்பரை மறைந்து, இன்னொரு யதேச்சாதிகாரப் பரம்பரை ஆட்சி பீடத்தமர்ந்ததையும், உடனேயே அதைத் தொடர்ந்து நடந்த இன நாசங்களையும், பயங்கரப் படுகொலைகளையும், கொடுங்கோன்மைகளையும் இமாமவர்கள் கண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் இஸ்லாத்துக்கு ஆக்கம் தரும் நற்பணிகள் நடந்து கொண்டிருந்தன; முஸ்லிம்கள் வெற்றி வீரர்களாய் நெடுகிலும் இஸ்லாமியக் கொடியை உயர்த்தி வந்தனர். இஸ்லாமிய மார்க்க வல்லுனர்கள் அற்புதமான ஆராய்ச்சி வேலைகளில், புதிய புதிய நூல்களை ஆக்குவதில் ஈடுபட்டிருந்தனர். மறுபக்கம் பொறாமையும், பதவிப்பித்தும் பிடித்தவர்கள், தமது சுயநலத்துக்காகச் சூழ்ச்சிகளிலும், கொலைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ஆட்சி பீடத்திலிருந்தவர்கள் தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நல்லவர்களையும், நபியின் பரம்பரையினரையும், மகான்களையும் கூடக் கொல்லவும், சிறையிலடைத்துச் சித்திரவதை செய்யவுமாக ஆட்டம் போட்டனர்.

இமாமுல் அஃலம் அபூ ஹனீபா இளமைப் பருவத்தினராக இருந்த போது உமையா கலீபா முதலாம் வலீது ஆட்சி நடத்திக் கொண்டிருந்தார். இராக்கில் அவருடைய பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருந்தவர் தான் உலகப் புகழ் பெற்ற கொடுங்கோன்மையாளர் ஹஜ்ஜாஜ் ஆவார். ஹிஜாஜில் வலீதின் பிரதிநிதியாக உமர் இப்னு அப்துல் அஜீஸ் இருந்து நீதியாட்சி நடத்தினார். ஒரு பக்கம் இமாம்களையும், அறிஞர்களையும், ஹஜ்ஜாஜ் கொன்று தள்ளிக் கொண்டிருந்தார். மறுபக்கம் உமர் இப்னு அப்துல் அஜீஸ் மார்க்கப் பெரியார்களை மதித்து, அவர்கள் அலோசனைப்படி நிர்வாகத்தை

நடத்திக் கொண்டிருந்தார்.

முதலாம் வலீதின் ஆட்சியிலேயே ஸ்பெயின் வெற்றி கொள்ளப்பட்டது. சிந்துவின் மீதும் இஸ்லாமியக் கொடி உயர்த்தப்பட்டது. மத்தியதரைக் கடலிலுள்ள மஜோர்க்கா, மைனார்க்கா, இவிக்கா, கார்ஸிகா, சார்டீனியா, கிரீட், ரோட்ஸ் போன்ற தீவுகள் பலவற்றையும் வென்று முஸ்லிம்கள் வாகை சூடிக் கொண்டிருந்தனர். ஆனால், இந்நாடுகளிலெல்லாம் இஸ்லாமியக் கலாஞானங்கள் செழித்தோங்கி வளர முடியாதவாறு கொலைகார நிர்வாகிகள் பலர் அமர்ந்து கொட்டமடித்துக் கொண்டிருந்தனர். 'ஆட்சி நிர்வாகத்தில் கொடுமை காட்டாத குற்றத்துக்காக' ஹிஜாஜ் நிர்வாக அதிகாரம்கூட உமர் இப்னு அப்துல் அஜீஸிடமிருந்து கை மாறியது. "ஸிரியாவில் கலீபா வலீதும், இராக்கில் ஹஜ்ஜாஜும், ஹிஜாஸில் உதுமானும், எகிப்தில் கர்ராவுமாக உலகம் முழுவதையும் கொடுமையால் நிரப்பிக் கொண்டிருந்தனர்" என்று துறவி அரசர் உமர் இப்னு அப்துல் அஜீஸ் ஒரு சமயம் வர்ணித்தது போன்று அன்றைய நிலைமை ஆகி விட்டிருந்தது. இதற்கிடையிலும், ஆங்காங்கே தன்னலமற்ற பெரியார்கள் ஹதீஸ் மன்றங்கள், மற்றும் ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவிச் சேவை செய்து கொண்டிருந்தனர்.

ஹிஜ்ரி 95-ல் கொடுமைக்கார ஹஜ்ஜாஜும், 99-ல் கலீபா வலீதும் காலமானார்கள். வலீதின் சகோதரர் சுலைமான் இப்னு அப்துல் அஜீஸ் கலீபாவானார். உமையாக் கலீபாக்களிலேயே இவர் சிறந்தவராக விளங்கி நற்பெயர் பெற்றார். இவர் உமர் இப்னு அப்துல் அஜீஸைத் தம்முடைய அரசாங்க ஆலோசகராக நியமித்துக் கொண்டார். அத்துடன் தமக்குப் பின் உமர் இப்னு அப்துல் அஜீஸே கலீபாவாக வேண்டும் என்றும் எழுதி வைத்து விட்டார். எனவே, இவர் ஹிஜ்ரி 99-ல் காலமான சமயம் உமர் இப்னு அப்துல் அஜீஸின் புகழாட்சி தொடங்கிற்று. மக்கள் யாவரும் சமமாக மதித்துச் சமமாக நடத்தப்பட்டனர். அன்பு அரியணை ஏறியது. அறிஞர்கள், மற்றும் நபி பெருமானாரின் குடும்பத்தவர்களும் மதிக்கப்பட்டனர். அநியாயக்காரர்கள் தண்டனை அடைந்தனர். ஹஜ்ரத் அலீ (ரலி)யையும், அவர்களைப் பின் பற்றியவர்களையும்

இதுவரை வெள்ளிக்கிழமை குத்பாக்களில் திட்டி வசைமாரி பாடி வந்தது தடுக்கப்பட்டது. கலைஞான வெள்ளம் பெருக்கெடுத் தோடியது. ஹதீஸ்களைத் திரட்டி ஒழுங்குபடுத்தும்படி இமாம் ஜுஹ்ரிக்கு ஆணையிடப்பட்டது. அவ்விதம் 'ஒழுங்கு 'படுத்தித் தொகுக்கப்பட்ட ஹதீஸ் களஞ்சியத்தின் பிரதிகள் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

கல்வியில் கவனம்

நம்முடைய இமாமுல் அஃலம் அபூ ஹனீபாவும் முதலாம் வலீதின் ஆட்சிக் காலம் முடியுமட்டும் (அதாவது, தங்களுடைய பதினாறாம் பிராயம்வரை) மேல் படிப்புப் படிக்க வாய்ப்பின்றியே வர்த்தகத் துறையில் கவனம் செலுத்திக் கொண்டிருந்து விட்டார்கள். அதற்குத் தூண்டுதல் நல்கும் தந்தையும் உயிரோடில்லை. ஆனால், தாங்கள் படிக்க வேண்டிய அவசியத்தை உணரும் பருவம் வந்த துமே மனம் அதிலேயே திரும்பலாயிற்று. கலீபா சுலைமானின் ஆட்சி ஆரம்பித்ததும், நாட்டில் சற்று அமைதியான சூழ்நிலை உருவாகி, அந்த ஆவலை அதிகப்படுத்திற்று. அச்சமயம் நடந்த ஒரு சிறிய சம்பவம் அந்த ஆவலைச் செயலில் கொண்டு வந்து நிறுத்தி விட்டது.

அபூ ஹனீபா அவசரமாகக் கடைவீதிக்குப் போய்க் கொண்டி ருந்தார்கள். வழியில் இமாம் ஷுஅபி என்ற பெரியாருடைய வீட்டைத் தாண்டித்தான் அவர்கள் போக வேண்டும். அந்தக் காலத்திலிருந்த அறிஞர்களில் ஷுஅபி ஒருவர் ஆவர்; அரசாங்கச் சட்ட ஆலோசகரும் கூட. அப்பெரியார் தமது வீட்டு வாயிலில் நின்று கொண்டிருந்தார். அபூ ஹனீபா அருகில் வரவே, அவர்களை நோக்கி, "தம்பி, நீ எங்கே போகிறாய்?" என வினவினார். அபூ ஹனீபா வர்த்தகர் ஒருவரிடம் போவதாகக் கூறினார்கள். உடனே ஷுஅபி, "நீ எங்கே படிக்கிறாய் என்று கேட்டேன்" எனக் கூறவும் "நான் படிக்கவில்லையே!" என்று அபூ ஹனீபா பதிலளித்தார்கள். "தம்பி, உன் முகத்தில் கல்விக்களை சொட்டுகிறது. நீ நல்ல ஆசானைத் தேடிக் கல்வி பெறு!" என்று ஷுஅபி கூறிவிட்டார். எனவே, அபூ ஹனீபா ஒரே தாகத்தோடு, உடனே கல்வி பயில்வதற்கான ஆயத்தங்களைச் செய்யலானார்கள்.

அக்காலக் கல்வியில் இலக்கியம், அரபு வம்சாவளி, அறியாமைக்கால அரபிகளின் சரிதை, ஃபிக்ஹு, ஹதீஸ், தத்துவ சாஸ்திரம் ஆகியவைதாம் பிரதானமாகக் கற்றுக் கொடுக்கப்பட்ட பாடங்களாகும். இவற்றுள் மாணவன் ஏதேனும் ஒன்றை விசேஷப் பாடமாக எடுத்து அதில் தேர்ச்சி பெறுவது வழக்கம். இந்தப் பாடங்களிலேயே அக்காலையில் ஃபிக்ஹுப் பாடம் பல வகையிலும் சுவையானதாகவும், புதிய புதிய பிரச்சினைகளை உண்டாக்குவ தாகவும் இருந்தது. இஸ்லாம் அரபு நாட்டுக்குள் மட்டும் அடங்கி இருந்தவரை 'ஃபிக்ஹி'ன் முடிவுகள் எளிமையானவையாகவே இருந்தன. ஆனால், பாரஸீகம், எகிப்து, ஸிரியா முதலிய நாடுகள் முஸ்லிம்களின் ஆதிக்கத்துள் வந்ததும் இது பெரிதாக விரிய ஆரம் பித்தது. இதில் பல மாற்றங்களும், சிக்கல்களும் உண்டாகலாயின.

அபூ ஹனீபா அடிப்படைக் கல்வியை ஒரே ஆண்டில் கற்றுக் கொண்டு, தத்துவ சாஸ்திரத்தை (இல்முல் கலாமை) கற்பதில் விசேஷ கவனம் செலுத்தினார்கள். ஆனால், வயது ஆக ஆக, அவர்களுடைய இயல்பில் மாறுதலுண்டாகலாயிற்று. தத்துவ சாஸ்திரம் பயில்வதால் பயனுண்டா என்று ஐயுறலானார்கள். நபி பெருமான் (ஸல்) அவர்களின் நற்றோழர்களெல்லாம் இதை ஒதுக்கிவிட்டு மார்க்கச் சட்டங்கள் பற்றிய கல்வியிலேயே கருத்துக் காட்டியதை இமாமவர்கள் எண்ணிப் பார்த்தார்கள். மேலும், தத்துவ சாஸ்திரத்தில் திளைத்துவிட்ட பலர் குண ஒழுக்கமோ, ஆத்ம வளர்ச்சியோ அற்றவர்களாக ஆகியிருப்பதையும் அவர்கள் சிந்தித்தார்கள். எனவே ஃபிக்ஹுச் சட்டங்களைப் பயிலுவதைப் பற்றி யோசித்தார்கள். இச்சமயம் ஒரு நாள் அவர்கள் ஃபிக்ஹு நிபுண ரான ஹம்மாது அவர்களுடைய சபையில் ஓர் ஓரத்தில் அமர்ந்து, அவர்கள் பாடம் நடத்துவதைக் கவனித்துக் கொண்டிருந் தார்கள். அப்போது பெண்ணொருத்தி அவர்களிடம் வந்து "ஒருவன் சுன்னத் தான முறைப்படி தன் மனைவியை விவாகரத்துச் செய்ய விரும்பி னால் அவன் செய்யவேண்டுவதென்ன?" என்று கேட்டாள். அவர்கள் இதற்கு முறைப்படி பதில் கூற இயலாதவர்களாக, ஹம்மா தைச் சுட்டிக்காட்டி, அவர்களிடம் சென்று, அதற்கு விடை கேட்கும் படியும், அவர்கள் கூறும் பதிலைத் தம்மிடமும் தெரிவித்து விட்டுப் போகும்படியும் கூறி அனுப்பினார்கள். அவள் கேட்டதற்கு ஹம்மாது

அவர்கள், "பெண் சுத்தமான நிலையிலிருக்கும் போது அவளோடு வீடுகூடாது, ஒரு தலாக்கு மட்டும் சொன்னால், பின்னர் இரண்டு தடவை மாதவிடாய் வந்து சுத்தமாகிக் குளித்தபின், அவள் வேறு கணவனை மணந்து கொள்ளலாம். இதுவே சுன்னத்துப்படியான விவாகரத்து" என்று தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் அபூ ஹனீபா தாங்களும் ஹம்மாதிடமே அமர்ந்து ஃபிக்ஹுக்கலை படிக்க முடிவு செய்து, அவர்களுடைய ஃபிக்ஹு வகுப்பில் சேர்ந்து விட்டார்கள்.

இதேபோன்று, "நான் கல்வி பயிலத் தொடங்கியதும் என் முன் பல சாஸ்திரங்கள் காட்சியளித்தன. தத்துவ சாஸ்திரமா, அந்த விதண்டாவாதமே வேண்டாம்! இலக்கியமா, அதற்கு ஆரம்பப் பள்ளியைத் தேடும் நிலைதான் உண்டாகும். கவிதையா, அதில் பழகினால் யாரையாவது புகழ்ந்தோ, இகழ்ந்தோ பாடி, வாணாளை வீணாக்கலாம்; ஹதீஸ் கலை பயில்வதற்கோ நீண்ட காலம் தேவை; அத்துடன் பலருடைய தாக்குதலுக்கும் ஆளாக வேண்டும். எனவே, ஃபிக்ஹுப் பாடத்தைக் கற்பதே எனக்கு உவந்தது என்று விரும்பியே இதை எடுத்துக் கொண்டேன்" என்று இமாம் அபூ ஹனீபா தெரிவித்துள்ளதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால், இவை யாவும் உண்மைக்கு முரணான கூற்றுக்களாகவே உள்ளன. ஏனெனில், இமாமவர்கள் முதலில் பற்பல பாடங்களிலும் ஓரளவு பயிற்சி பெற்றுப் பின்னரே தத்துவ சாஸ்திரத்தைப் பயிலத் தொடங்கினார்கள். அதன் பின்னரே ஃபிக்ஹுப் பாடத்துக்குள் புகுந்தார்கள். எனவே, சாதாரணமான பிரச்சினைகளுக்குக்கூட அவர்கள் பதில் சொல்ல இயலாதவர்களாக இருந்திருப்பார்கள் என்று சொல்வதும் சரியன்று. அவர்கள் இவ்விதம் மற்றப் பாடங்களை ஒதுக்கிவிட்டு, ஃபிக்ஹுவிலேயே மூழ்கிவிட்டார்கள் என்பதும் சரியல்ல. குறிப்பாக, ஹதீஸ் விஷயத்தில், அதைக் கற்பதில் அவர்கள் காட்டிய கருத்து எத்தகையது என்பதை இனி வரும் பக்கங்களில் படிக்கவிருக்கிறோம்.

ஃபிக்ஹுப் பாடத்தில் இமாமவர்களின் குருவாக வாய்த்த பெரியார் ஹம்மாது, தமது காலத்தில் கூபாவின் இமாம் ஆக விளங்கினார்கள். எம்பெருமான் (ஸல்) அவர்களுடைய பணியாளாக நெடுங்காலமிருந்து தொண்டாற்றிய ஹஜ்ரத் அனஸ் (ரலி)

அவர்களைச் சந்தித்து, அவர்களிடமிருந்து பல ஹதீஸ்களை இப்பெரியார் கேட்டுள்ளார்கள். மேலும், தாபியீன்கள் பலரிடமும் அமர்ந்து பல்வேறு பாடங்களையும் கற்றிருந்தார்கள். இதனால், கூபாவிலேயே இமாம் ஹம்மாது அவர்களின் போதனைச்சாலை தான் புகழ் பெற்றதாகவும், பெரியதாகவும் விளங்கி வந்தது. இமாம் அபூ ஹனீபாவைப் படிக்குமாறு தூண்டிய பெரியார் ஷுஅபி கூட இந்த ஹம்மாதின் சீடர்தாம் என்றால் அவர்களின் பெருமையை ஒருவாறாக உணரலா மல்லவா!

இமாம் ஹம்மாது தமது வாழ்க்கைக்காக யாரையும் நாட வேண்டிய அவசியமற்ற அளவு பொருள் படைத்தவர்கள். எனவே, அவர்கள் அந்தக் கவலையற்று நிம்மதியாகப் பாட போதனையில் கவனம் செலுத்தினார்கள். அவர்கள் ஃபிக்ஹு என்ற இஸ்லாமியச் சட்டங்களைப் பற்றி வெகு நன்றாக அறிந்த நிபுணராக இருந்தார்கள். ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊது (ரலி) அவர்களிடமிருந்து முதன் முதலில் வெளிப்பட்ட ஃபிக்ஹுப் பாடத்தை, அதே அடிப்படையிலேயே இமாம் ஹம்மாதும் போதித்து வந்தார்கள். இத்தகைய பெரியாரிடம் பாடம் கேட்ட இமாமுல் அஃலம், விரைவிலேயே ஆசானை மிஞ்சிய மாணவராக ஆகிவிட்டார்கள்.

ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட பிரச்சினை பற்றிய விளக்கத்தை வாய்மொழியாகக் கூறுவார். மாணவர்கள் அதை மனனம் செய்து கொள்வார்கள். சில சமயம் எழுதி வைத்துக் கொள்வார்கள். இது தான் கூபாவில் நிலவிய அக்காலக் கல்வி முறையாகும். இவ்விதம் தான் ஹம்மாதும் பாடபோதனை செய்தார்கள். ஆரம்ப மாணவர்கள் ஆசிரியருடைய இடப்பக்கம் அமர்ந்திருக்க வேண்டும். அவ்விதமே அபூ ஹனிபாவும் அமர்ந்து தாங்கள் ஆரம்ப மாணவர் என்பதைக் காட்டிக் கொண்டார்கள். ஆனால், சில நாட்களுக்குள் பாடங்களைப் புரிந்து கொள்ளும் திறமையிலோ, ஞாபக சக்தியிலோ அபூ ஹனீபாவுக்கு நிகர் யாருமில்லை என்ற நிலையுண்டாயிற்று. அபூ ஹனீபா தமது ஆசிரியரின் முன்பாக வந்து அமர்ந்தார்கள்.

இமாமுல் அஃலம் அபூ ஹனீபா சொல்கிறார்கள் : "நான் இரண்டாண்டுகள் பெரியார் ஹம்மாதிடம் பாடம் கேட்டேன். பின்னர் நானே ஒரு மதரஸாவை நடத்திப் போதிக்கலாம் என்ற

எண்ணமுண்டாகி விட்டது. ஆனால், என் ஆசானுக்கு அது அவமரியாதை செய்வதாகும் என்ற எண்ணத்தால், அதற்குத் துணிவு வராமல் போய் விட்டது. அப்போது ஒரு நாள், என் குருநாதரின் உறவினர் ஒருவர் பஸராவில் காலமாகிவிட்டார். அவருக்கு என் குருநாதரையன்றி வேறு வாரிசில்லை. அதனால், அவர்கள் என்னை ஆசிரியனாக அமர்த்திவிட்டுப் பஸ்ரா சென்றார்கள். அவர்கள் வேலையை நான் இரண்டு மாதங்கள் செய்தேன். இச்சமயம், அதுவரை நான் கேட்டறியாத பல புதுப் பிரச்சினைகளெல்லாம் என்னிடம் தீர்ப்புக்காக வந்தன. என்னால் இயன்ற அளவு அவற்றுக்குப் பதிலளித்தேன். இவ்விதம் நான் கொடுத்த அறுபது தீர்ப்புகளுக்கும் நகல் எடுத்து வைத்திருந்தேன். என் குருநாதர் இரண்டு மாதங்களுக்குப் பின்னர் திரும்பியதும், என் தீர்ப்புகளை அவர்களிடம் காட்டினேன். அவைகளில் இருபதில் மட்டுமே தவறு இருந்தது. மற்றவை முற்றும் சரியாக இருந்தன. இந்த அனுபவம் உண்டான பின்னர், குருநாதர் ஹம்மாது உயிரோடிருக்கும் வரை அவர்களோடு எனக்குள்ள குரு-சீடன் உறவை அகற்றிக் கொள்ளக் கூடாது என்று உறுதி செய்து கொண்டேன்". என்று கூறிய இமாம் அபூ ஹனீபா அவர்கள் இவ்வாறே தங்கள் நாற்பதாவது வயதில் (ஹிஜ்ரி 120-ல்) தங்கள் குருநாதர் காலமாகும் வரை அவர்களைத் தங்கள் ஆசானாகவே கருதி மதித்து வந்தார்கள். இமாமவர்கள் தங்களுடைய குருநாதரான ஹம்மாது அவர்களிடம் ஃபிக்ஹுப் பாடம் கற்றுக் கொண்டிருந்த வேளையில் அவர்களுடைய சமயோசிதமான திறமையைக் காட்டும் இந்தச் சிறு சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது : ஹம்மாது அவர்கள் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் போது, முரட்டுத் தோற்றமுள்ள மனிதன் ஒருவன் அங்கே வந்தான். அவர்கள் அவனை நிமிர்ந்து பார்த்ததும், ஒரு பிரச்சினைக்கு அவர்கள் தீர்ப்பை நாடி வந்ததாகக் கூறினான். என்ன பிரச்சினை என்று வினவினார்கள். அவன் கூறினான் : "நான் ஒரு குதிரை வைத்திருந்தேன். அதன் மீது சவாரி செய்கிறேன். அதன் குட்டியையும் நானே பராமரித்து வருகிறேன். அந்தக் குட்டி மீதும் சவாரி செய்யலாமா?" என்று. ஹம்மாது அவர்கள் இந்தச் சின்ன விஷயத்துக்குத் தங்கள் தீர்ப்பை ஏன் கேட்கிறான் என்று யோசித்த

வர்களாகத் தாராளமாகச் சவாரி செய்யலாம் என்று பதிலளித்து விட்டார்கள். அவன் மிகுந்த மகிழ்ச்சியோடு புறப்பட்டான். அப்போது மாணவராக வகுப்பில் அமர்ந்திருந்த அபூ ஹனீபா அவனை சமிக்ஞை செய்து அருகிலழைத்து "ஆனால், அதற்கு நான்கு கால்களும், ஒரு வாலும் இருக்க வேண்டும். அப்படியானால்தான் சவாரி செய்யலாம்" என்று அவனிடம் கூறி அனுப்பி விட்டார்கள். அவன் போன பின்னர் ஹம்மாது தம் சீடரை நோக்கி அவனிடம் அவர்கள் இப்படிச் சொன்னதன் கருத்தென்ன என்று வினவினார்கள். இமாம் அபூ ஹனீபா பணிவோடு சொன்னார்கள். "காலம் தலைபுரண்டு கொண்டு போகிறது. நமது தீர்ப்புகளை இத்தகையவர்கள் துஷ்பிரயோகம் செய்துவிடக் கூடும் என்று நான் அனுமானித்தேன். எனவேதான், நான் இப்படி மரியாதைக் குறைவாக இந்தத் திருத்தத்தைச் சேர்க்க நேர்ந்தது" என்று கூறினார்கள். இது கேட்ட ஹம்மாது தம் சீடரின் திறமையை மெச்சிப் பெரிதும் மகிழ்ந்தார்கள்.

ஹதீஸ் பாடம் தேடல்

ஹம்மாதையன்றி இமாமவர்கள் மற்றும் பல ஃபிக்ஹு ஆசான்களிடமும் பாடம் கேட்டுள்ளார்கள். அத்துடன் ஹதீஸ் களைப் பற்றிய பாடங்களையும் அவர்கள் விரிவாகப் படிக்க வேண்டிய அவசியம் உண்டாயிற்று. 'ஃபிக்ஹு' (மஸ்அலாக்கள் என்னும்) பிரச்சினைகளில் முடிவு காண்பதற்கு, ஹதீஸ்களின் ஆராய்ச்சி அவசியமானதாகும். அதனால் ஹம்மாதிடம் 'ஃபிக்ஹு' பாட போதனை பெறுகையிலேயே, இமாம் அபூ ஹனீபா ஹதீஸ் பாட போதனைகளையும் வேறு பல ஆசான்களிடமிருந்தும் பெறலானார்கள். அந்தச் சமயத்தில் மக்கா, மதீனா, யமன், பஸரா, கூபா போன்ற இடங்களில் சுமார் பதினாறாயிரம் ஸஹாபாக்கள் பரவி வசித்து வந்தனர். அவர்கள் ஹதீஸ் போதனைகளையும், ஃபிக்ஹு விளக்கங்களையும் எடுத்துக் கூறிக் கொண்டிருந்தனர். 'ஹதீஸைக் காத்தவர்கள்' என்று அல்லாமா தஹபியால் விவரிக்கப்பட்ட எத்தனையோ பெரியோர்கள் அவ்விடங்களில் வாழ்ந்து மார்க்கச் சேவை செய்து வந்தனர். இவர்களைப் பற்றிக் கேள்விப்படும் பெரியார்களும், மாணவர்களும் நூற்றுக்கணக்கான மைல்கள்

பிரயாணம் செய்து, இவர்கள் காலடியில் அமர்ந்து பாடம் கே:பதுண்டு. இதனால் இவ்விடங்கள் யாவும் 'கலா நிலையங்கள்' (தாருல் உலூம்) என்று போற்றப்பட்டு வந்தன.

இமாம் அபூ ஹனீபா அவர்கள் 'பிக்ஹு'ப் பாடங்களுக்காக ஹம்மாதின் பாடபோதனையை நம்பியிருந்தாலும், ஹதீஸ் பயிற்சிக்கு அவர்கள் வேறு ஆசான்களையும் நாட வேண்டிய தாக இருந்தது. ஏனெனில், 'ஃபிக்ஹு'க்கு, விளக்கும் சக்தியும், சுயமான முடிவை எய்தும் திறனும் போதுமானவையாகும். ஹதீஸுக்கோ ஆராய்ச்சித் திறன் (திராயத்) வேண்டும்; அது வந்த வகையை (ரிவாயத்தை)ப் பரிசீலிக்கும் திறனும் வேண்டும். இவை தமக்கு அவசியம் என்று உணர்ந்ததாலேயே இமாமவர்கள் தமது ஊரில் ஓரளவு அது பற்றிப் பயிற்சி பெற்றுக் கொண்டு மக்காவுக்கே, புறப்பட்டு விட்டார்கள்.

அவர்கள் சொல்கிறார்கள் : "நான் முதன் முதலாக ஹஜ் ஜுக்குச் சென்றிருந்த சமயம் சவரம் செய்து கொள்வதற்காக நாவிதர் ஒருவரை அணுகினேன். அவர் என்னிடம் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். ஹஜ்ஜின்போது நீங்கள் மௌன மாக நடக்கக்கூடாது, தக்பீர் கூறிக் கொண்டே செல்லுங்கள்" என்றார். சவரம் முடிந்து நான் வெளியில் புறப்படவிருந்த சமயம், "இரண்டு ரக்அத் தொழுதுவிட்டுப் பிறகு எங்காவது போகலாம்" என்றார். இது கேட்டு வியப்படைந்த நான், "இந்த விளக்கங்களை நீர் யாரிடம் கற்றீர்?" என்று கேட்டேன். அதற்கு அவர் "அத்தாரிப்னு அபீ ரிபாஹ் இடம்" என்று பதிலளித்தார்.

உடனே இமாம் அபூ ஹனீபா மக்காவிலிருந்த அத்தாரிப்னு அபீ ரிபாஹ் என்ற பெரியாரிடம் சென்றார்கள். இவர்களுடைய மன இயல்பை அறிவதற்காக அந்தப் பெரியார் அத்தார் இவர்களிடம் சில கேள்விகள் கேட்டார். இமாமவர்கள், "நான் முன்னோர்களான பெரியார்களைப் பற்றி குறை கூறிக் கொண்டிருப்பதில்லை. பாவ காரியம் புரிபவர்களைக் 'காபிர்' என்று கூறுவதுமில்லை. இறைவனின் தீர்ப்பையும், முடிவையும் (கலா, கத்ரை) ஒப்புக் கொண்டுள்ளேன்" என்று கூறினார்கள். இது கேட்ட அத்தார், தாம்

நடத்தும் ஹதீஸ் வகுப்புகளில் அவர்கள் அமர்ந்து கொள்ள அனுமதியளித்து விட்டார்கள். சில நாட்களிலேயே அபூ ஹனீபாவின் அபாரமான அறிவுத் திறமையை அத்தார் கண்டு கொண்டு, அவர்களைத் தங்கள் அருகிலேயே அமர்த்திக் கொண்டார்கள்.

இவ்விதம் அத்தாரிடம் ஹதீஸ் பாடம் கேட்ட பின்னர், இமாமவர்கள் மதீனாவிலுள்ள பெரியார்களிடம் சென்று, அங்கே யும் ஹதீஸ் பாடங்களைக் கற்பதில் கவனம் செலுத்தினார்கள். எனினும், அவர்கள் அத்தாரோடு கொண்டிருந்த தொடர்பு ஹிஜ்ரி 115-ல் அந்தப் பெரியார் காலமாகும் வரை நீடித்திருந்தது. அவர்கள் மக்கா செல்லும்போதெல்லாம், அந்தப் பெரியாரைப் போய்ப் பார்ப்பதும், அவர்களோடு அளவளாவுவதுமாக இருந்திருக்கிறார்கள். இதேபோல் ஹஜ்ஜுக்காக மக்கா, மதீனா செல்லும் போதெல்லாம், அங்கே வந்து குழுமும் பிரபல மேதைகளிடமிருந்தெல்லாம், தங்களுக்குத் தேவைப்பட்ட விளக்கங்களை ஏராளமாகப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

அபூ ஹனீபாவாக ஆனது

இமாமவர்களின் இயற்பெயர் நுஃமான் என்பதல்லவா! அவர்கள் அபூ ஹனீபா என்ற பட்டப்பெயரை - அவர்களுடைய பெயராக உலகம் அறிந்துள்ள இப்பெயரை - எப்படி அடைந்தார்கள் என்பது பற்றி ஒரு கதையுண்டு. இமாமவர்களுக்குப் புத்தி சாதுர்யமுள்ள புத்திரியொருவரிருந்தார். அவர் பெயர் ஹனீபா. அவரிடம் இமாமவர்களுக்கு மிகுந்த அன்புமிருந்தது. எனினும் அவருடைய சாதுரியத்தைச் சோதிக்க எண்ணினார்கள். அப்போது அவர்களிடம் கூபாவிலுள்ள பெண்கள் சிலர் வந்து, "ஓர் ஆண் பல பெண்களை மணக்க இஸ்லாத்தில் அனுமதியிருக்கும்போது, ஒரு பெண் பல கணவரை மணக்க மட்டும் அனுமதியில்லாத காரணம் யாது?" என்ற வினவினர். மகா மேதையான இமாமவர்கள் தமக்கு இந்தக் கேள்விக்குப் பதில் தெரியாதது போல் திணறினார்கள். உடனே தங்கள் மகளிடம் இதைக் கூறினார்கள். அந்த ஹனீபா என்ற மகளார் பதில் கூறும் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொண்டு, பெண்களை மறுநாள் ஆளுக்கு ஒரு பாத்திரத்தில் கொஞ்சம் பால் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார். அவ்விதமே அவர்கள்

மறுநாள் கொண்டு வந்த பாலை ஒரே பாத்திரத்தில் ஊற்றச் செய்தார். அதன்பின் அந்தப் பெண்களோடு சிறிது நேரம் பொதுப்படையாகப் பேசிக் கொண்டிருந்தார். பெண்கள் வீட்டுக்குப் புறப்பட்டபோது அவரவர்கள் கொண்டு வந்த பாலை மட்டும் அவரவர்கள் பிரித்தெடுத்துப் போகுமாறு கூறினார். உடனே அந்தப் பெண்கள், "அது எப்படிச் சாத்தியமாகும்! நாங்கள் கொண்டு வந்த பால் எது என்று, இதில் கண்டுபிடிப்பது முடியக் கூடிய காரியமா?" என்று திகைத்து நின்றனர். உடனே, ஹனீபா என்ற அந்தப் பெண், "இதுபோல்தான் ஒரு பெண் பல கணவரை மணந்தாலும், பிறக்கும் குழந்தை யாருடையது என்று கண்டு பிடிக்க முடியாது" என்று விளக்கினார். தமது புதல்வியின் சாதுரியத்தைக் கண்ட இமாமவர்கள் உடனே ஹனீபா வின் சாதுரியத்தை மெச்சி, அவர் தந்தைதான் தாங்கள் என்று காட்டும் முறையில் அபூ ஹனீபா என்ற பெயரைச் சூட்டிக் கொண்டார்களாம்.

"இல்லை. இமாமவர்களுக்கு ஹனீபா என்ற ஆண் குழந்தை ஒன்றிருந்தது; அதனாலேயே, அவர்கள் அபூ ஹனீபா என்று அழைக்கப்பட்டார்கள்" என்பாருமுண்டு.

இமாம் அபூ ஹனீபாவுக்கு அவர்களுடைய ஆசான் பெயரிடப்பட்ட ஹம்மாது என்ற ஒரு புத்திரனையன்றி வேறு குழந்தைகளே இருக்கவில்லை என்ற ஆதாரப்பூர்வமான தகவல்களிலிருந்து தெரியவருகிறது. எனவே, ஹனீபா என்ற தங்கள் புத்திரியின் பெயராலோ, புத்திரரின் பெயராலோ அவர்கள் இப்படிப் பெயர் மாற்றிக் கொண்டிருப்பார்கள் என்பது சாத்தியமாகப்படவில்லை. அவர்கள் ஃபிக்ஹுச் சட்டத்தில் மகா நிபுணராகித் தீர்ப்பு வழங்கத் தொடங்கிய சமயம் நுஃமான் என்ற இயற்பெயருடன் சிறப்புப் பெயராக வைத்துக் கொண்டது தான் அபூ ஹனீபா என்ற பெயராகும் என்று தெரியவருகிறது. திருக் குர்ஆனில் ஆல இம்ரான் என்ற அத்தியாயத்திலுள்ள பத்தாம் வசனத்தில் "வத்தபவூ மில்லத்த இப்ராஹீம ஹனீபா" (மிகத் தூய்மையான-ஹனீப் ஆன இப்ராஹீம் நபியின் மார்க்கத்தைப் பின்பற்றி நடவுங்கள்) என்று கூறப்பட்டுள்ளதில் வரும் 'ஹனீப்' என்ற பதத்திலிருந்துதான், இவ்விதம் இமாமவர்கள் பெயர் சூடிக் கொண்டார்கள் என்று ஆதாரப்பூர்வமான நூல்கள் தெரிவிக்கின்றன.

ஆசான்கள் காட்டிய மரியாதை

இமாம் அபூ ஹனீபா அவர்கள் ஃபிக்ஹுப் பாடங்களில் நல்ல தேர்ச்சியடைந்த பின்னரும், பல ஆசான்கள் நடத்திய வகுப்புக்களில் அமர்ந்து பாடம் கேட்டுள்ளார்கள். அந்த வகையில் அவர்கள் கூச்சப்பட்டதில்லை. அவர்கள் வகுப்பில் அமர்ந்ததும், அந்த ஆசான்களும் அவர்களுக்கு மரியாதை வழங்கினார்கள். மக்காவிலிருந்த பிரபல ஹதீஸ் விரிவுரையாளரான அம்ருப்னு தீனார், தங்கள் வகுப்புக்களில் அபூ ஹனீபா அமர்ந்திருந்தால், வேறு யாரையும் முன்னோக்கிப் பேசாது, அவர்களை முன்னோக்கியே பாடபோதனை செய்வார்கள். ஒரு சமயம் தீக்கோழி முட்டை சம்பந்தமான ஹதீஸ் பற்றி விளக்கம் தேடி இமாமவர்கள் கலீப் என்ற பெரியாரிடம் சென்றார்கள். அவர்கள் வருவதைக் கண்ட அந்தப் பெரியார், எழுந்து நின்று அவர்களுக்கு மரியாதை காட்டி, அவர்களை வரவேற்றார்கள். தங்களுக்குச் சமமாக அவர்களை அமரச் செய்து, இமாமவர்கள் கேட்ட விளக்கத்தைக் கூறினார்கள் பெரியார்.

இமாம் மாலிக், இமாம் அபூ ஹனீபாவைவிடப் பதிமூன்று வயது சிறியவர்கள். எனினும் அவர்கள் நடத்திய வகுப்பிலும் சென்றமர்ந்து இமாம் அபூ ஹனீபா பாடம் கேட்டுள்ளார்கள். "இமாம் மாலிக்கின் எதிரே, இமாம் அபூ ஹனீபா ஒரு மாணவரைப் போன்றே பணிவுடன் அமர்ந்து பாடம் கேட்பார்கள்" என்று அல்லாமா தஹபி தெரிவிக்கிறார்கள்.

அப்துல்லாஹிப்னு முபாரக் என்ற பெரியார் கூறுவதாவது : "நான் ஒரு சமயம் இமாம் மாலிக்கோடு அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தேன். அப்போது அங்கே ஒருவர் வந்தார். மாலிக் அவர்கள், வந்தவரை மிகவும் மரியாதையாக வரவேற்றுச் சரியாசனத்திலமர்த்தி, அளவளாவினார்கள். அவர் போனபின், வந்தவர் யார் தெரியுமா? என்று என்னிடம் வினவிக் கொண்டு, 'இவர்தான் அபூ ஹனீபா. இந்தக் கல்தூணைக்கூட இவர் விரும்பினால் தம் பேச்சுத் திறனால் தங்கம் என்று நிரூபிக்க இவரால் முடியும்' என்று இமாம் மாலிக் அவர்கள் அறிமுகப் படுத்தினார்கள். பின்னர், அங்கே இன்னொருவர் வந்தார். அவரையும் இமாம் மாலிக் மரியாதையோடுதான் வரவேற்றார்

களாயினும், அபூ ஹனீபாவிடம் காட்டிய பணிவையும் ஆர்வத்தையும் இவர் விஷயத்தில் காட்டவில்லை. இவர் சென்ற பின்னர், 'இவர்தான் ஸுப்யானுத் தௌரி' என்று அவர்கள் என்னிடம் தெரிவித்தார்கள்".

இவ்விதமாக இமாமவர்கள் ஹதீஸ் கலை பயின்ற பலருள் இமாம் ஷுஅபி, சல்மா பின் குயைல், மஹாரிப், அபூ இஸ்ஹாக் ஸப்யி, ஔன், சம்மாக், உமர் பின் மர்ரா, மன்தருல் அம்ரு, அஃமஷ், இப்ராஹீம் பின் முஹம்மது, அதீ, அத்தாரிப்னு ஸாயிப், மூஸா, அல்கமா, ஹிஷாம், சுலைமான், கதாதா, அத்தாரிப்னு அபீ ரியாஹ், இக்ரிமா, மக்ஹூல் ஆகியோர் முக்கியமானவர்களாவர். இவர்களில் பலரிடம் இமாம் அபூ ஹனீபா ஹதீஸ் பாடங்களில் தேர்ச்சி பெற்றதற்கான 'ஸனது'ம் பெற்றிருக்கிறார்கள்.

ஆசிரியர் அபூ ஹனீபா

நாற்பது வயதுவரை தங்கள் கல்வி ஞானத்தைப் பலப் படுத்துவதிலேயே இமாமவர்கள் ஈடுபட்டிருந்தார்கள். இதற்கு முன்பே சுயமாகத் தீர்ப்பளிக்கும் திறமை உண்டாகிவிட்டதெனினும், அதில் அவர்கள் ஈடுபடவில்லை. இந்த ஃபிக்ஹு பாடபோதனை செய்வதற்கும் அவர்கள் துணியவில்லை. "என் குருநாதர் ஹம்மாது அவர்கள் உயிரோடிருக்கும்வரை, அவர்கள் வீடு இருந்த திசையை நோக்கிக் கூட நான் கால் நீட்டியதில்லை" என்று இமாமவர்கள் பின்னர் தெரிவித்தது போல, அவர்கள் ஜீவித்திருந்த வரை இமாமவர்கள் தனியாக ஃபிக்ஹு பாடப் போதனை நடத்தத் தயாராயில்லை. கூபாவில் இப்ராஹீம் நக்கயி என்ற பெரியார் ஃபிக்ஹுப் பாடத்தில் பெரிய நிபுணராக இருந்தார்கள். அவர்களுக்குப் பின்னர் ஹம்மாது தான் அந்தத் திறமையை அடையப் பெற்றிருந்தார்கள். ஹிஜ்ரி 120-ல் ஹம்மாது காலமாகிவிடவே, கூபா நகரம் இருண்டு போயிற்று. ஹம்மாதின் புதல்வரும் இதற்கான கல்வியைப் பெறாது வேறு வழியில் திரும்பி விட்டார். இதனால், வயது முதிர்ந்த மூஸா பின் கஸீர் என்ற பெரியார் அந்த ஸ்தானத்தில் அமர்த்தப்பட்டார்கள். இவர்கள் பாடபோதனையில் அதிக ஆற்றலில்லாவிடினும், போதிய அனுபவமுடையவர்களாக இருந்ததால் சில மாதங்கள் ஃபிக்ஹுப் பாடங்களை நடத்தினார்கள். கடைசியில் இவர்கள் ஹஜ்ஜுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

இச்சமயம் பொதுமக்கள் அந்த ஆசிரியப் பதவியிலமருமாறு இமாம் அபூ ஹனீபாவை வற்புறுத்தினர். இமாமவர்களும் துணிவோடு அதை ஏற்கத் தயாராயில்லை. ஆனால், ஜனங்களின் நிர்ப்பந்தம் அதிகரிக்கவே, வேறு வழியின்றி அந்தப் பதவியை ஏற்றுக் கொண்டார்கள். அப்படியும் அவர்களுக்கு மனநிம்மதியே உண்டாகவில்லை. இந்த நிலையில் நடந்த சம்பவத்தை அவர்களே இவ்வாறு சொல்கிறார்கள் : "ஒரு நாள் இரவு என் கனவில் எம்பெருமான் (ஸல்) அவர்களுடைய அடக்கஸ்தலத்தை யாரோ தோண்டிக் கொண்டிருப்பதாகக் கண்டேன். பதற்றத்தோடு விழித்துக் கொண்டேன். நான் ஏற்றுக் கொண்ட ஆசிரியப் பணிக்கு, நான் அருகதையில்லை என்பதைக் காட்டத்தான் இந்தக் கனவு உண்டாயிற்றோ என்று நான் யோசிக்கலானேன். அச்சமயம் கனவு பலன் கூறுவதில் நிபுணரான இப்னு ஸீரீன் என்னிடம் வந்தார். அவரிடம் என் கனவைக் கூறினேன். அதைக் கேட்ட அவர், 'மரித்துப் போன ஒரு கலையை உயிர்ப்பிப்பதே இதன் பொருள்' என்று விளக்கினார். பின்னரே நான் மனநிம்மதியடைந்தேன்".

இவ்வாறு அறிவுச் சுடர் கொளுத்தத் தொடங்கிய அவர்களுடைய போதனா மன்றம், நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து கூபாவிலிருந்த பல மன்றங்கள் அதனுள் ஐக்கியமாகி விடும் நிலையை அடைந்தது. எண்ணற்றோர் அங்கே வந்து பாடம் கேட்கலாயினர். இமாமவர்களுக்குப் பாடபோதம் செய்த இஸ்யிர், அஃமஷ் போன்ற பெரியார்கள் கூட அங்கே வந்தமர்ந்து நல்விருந்து பெற்றனர்.

உலகெங்கணும் இமாமவர்களின் கலா நிலையம் புகழ் பரப்பலாயிற்று. அன்றைய முஸ்லிம் உலகில் ஸ்பெயினைத் தவிர உள்ள சகல இடங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து இமாமவர்களின் வகுப்பில் அமர்ந்து பாடம் கேட்டனர். குறிப்பாக மக்கா, மதீனா, தமாஸ்கஸ், பஸரா, வாஸித், மவ்ஸில், ஜஸீரா, ரிகா, நஸீபைன், ரம்லா, கெய்ரோ, யமன், யமாமா, பஹ்ரைன், பக்தாத், அஹ்வாஜ், கிர்மான், இஸ்பஹான், ஹுல்வான், அஸ்தராபாத், ஹமதான், நஹாவந்த், ரைய், கௌமஸ், தபரிஸ்தான், ஜுர்ஜான், நைஷாபூர், ஸர்கீஸ், நிஸா, புகாரா, சமர்கந்த், கெஸ், ஸன்ஆன், திர்மத், ஹிரத், நஹஸ்தார், அல்ஜம், கார்ஜம், சீஸ்தான், மதாயின், மஸீஸா, ஹிம்ஸ் போன்ற இடங்களிலிருந்தெல்லாம் மாணவர்கள்

வந்து இமாமவர்களிடம் பாடம் கேட்டுள்ளனர். நாளடைவில் இமாம் அவர்கள் நாட்டிலேயே தனியான செல்வாக்குப் பெற்ற அறிஞராக ஆகிவிட்டார்கள்.

அவர்கள் எங்கு சென்றாலும் 'இராக்கின் ஃபக்கீஹ்' என்று போற்றப்பட்டார்கள். அவர்கள் நிகழ்த்திய விளக்க உரைகளைக் கேட்கப் பல்லாயிரவர் கூடலாயினர். ஏராளமான சிக்கலான மார்க்கப் பிரச்சினைகள் அவர்களுடைய பரிசீலனைக்கு வர லாயின. அவற்றுக்கு அவர்கள் உடனுக்குடன் வெகு பொருத்த மாகப் பதில் கூறும் முறை யாவரையும் வியப்பிலாழ்த்திற்று.

ஒரு சமயம் இமாமவர்கள் தங்கள் பிரயாணத்திடை ஓரிடத்தில் தங்கினார்கள். அவர்களுடைய தீர்ப்புகளைக் கேட்கப் பெருங் கூட்டம் கூடி விட்டது. இதைக் கண்ட இமாமவர்களே மகிழ்ந்தவர் களாக, "யாராவது என் சமையல்காரரிடம் போய் இவர்கள் அனைவருக்கும் என் ஜாகையில் உணவு தயாரிக்கச் சொன்னால் நலமாகுமே!" என்றார்கள். அப்போது வினா ஒன்று விடுக்க அருகில் வந்து நின்ற அபூ ஆஸிம் என்பவர், "நான் போகிறேன்" என்றார். ஆனால், அவர் உடனேயே தாம் விளக்கம் தேடிய வினாவையும் அவர்களிடம் விடுத்தார். அவர் கள் பதிலளிக்கத் தொடங்கினார்கள். பல கேள்விகளை அவர் கேட்டார். யாவுக்கும் அவர்கள் விடையிறுத்த பின்னர் ஒருவர் எழுந்து சில கேள்விகளைக் கேட்டார். அவற்றுக்கும் இமாமவர்கள் பதிலளிக்கலானார்கள். இமாமவர்களின் விளக்கத்தைக் கேட்டுக் கொண்டே இருந்துவிட்ட அபூ ஆஸிம் சமையல்காரரிடம் போகவில்லை. விடையிறுத்த வந்த இமாமவர்கள் இடையில் அந்த நினைவு வந்ததும், "யாரையோ சமையல்காரரிடம் போகச் சொன்னேனே, போனாரா?" என்று வினவினார்கள். அபூ ஆஸிம் எழுந்து நின்று, "நான்தான் போவதாகச் சொன்னேன்" என்றார். "சொல்லி விட்டீர்களா?" என்று இமாமவர்கள் கேட்டதற்கு, "நான் போவதாகச் சொன்னேனேயன்றி உடனடியாகவா போவதாகச் சொன்னேன்!" என்று பதில் கேள்வி கேட்டார். அதைக் கேட்ட இமாமவர்கள் புன்னகையுடன், "உங்கள் வார்த்தை பொது மக்களால் நீங்கள் கூறும் அர்த்தத்தில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது. ஆனாலும், இதுவும் "ஃபிக்ஹு சம்பந்தமான ஒரு பிரச்சினைதான்" என்று கூறினார்கள்.

பொறாமைக்காரர்கள்

இமாமவர்களின் அறிவு நுட்பமும், திறமையும் எண்ணற்ற வர்களை இன்புறச் செய்ததுபோல, பொறாமைக்காரர்கள் சிலரைப் புழுங்கவும் வைத்தது. அறிஞர்கள் புகழ் பெறுகிறார்கள் என்றாலே, அற்ப புத்தி படைத்த சிலருக்கு அது ஆத்திரத்தை உண்டாக்கும். அவர்கள் பெயரை மாசுபடுத்த இத்தகையவர்கள் ஒல்லும் வகையாலெல்லாம் முயலுவார்கள். இதுபோன்றே இமாம் அபூ ஹனீபாவைப் பற்றியும் வதந்திகள் பரப்பப்படலாயின. அவர்கள் மார்க்கத்தை விட்டுவிட்டுத் தங்கள் மனம் போன போக்கில் தீர்ப்புகள் வழங்குவதாகக் கூறப்பட்டது. பெரியார்கள் சிலர்கூட இதை நம்பி ஏமாற்றமடைந்திருக்கின்றனர்.

இமாமவர்களின் முக்கியமான சீடர்களில் ஒருவரான அப்துல்லாஹிப்னு முபாரக் ஒரு சமயம் பைரூத் சென்றிருந்தார். அவர் அங்கே ஹதீஸ் கலையின் நிபுணரான ஒளஜாயி என்ற பெரியாரைச் சந்தித்தார். பெரியார் ஒளஜாயி அப்துல்லாஹ்வை நோக்கி, "நீர் வசிக்கும் கூபா நகரில் அபூ ஹனீபா என்று ஒருவர் தலையெடுத்திருக்கிறாராமே, அவர் யார்? அவர் மார்க்கத்தில் புதிய புதிய (பித்அத்தான) விஷயங்களைக் கூறுகிறாராமே?" என்று வினவினார். அப்துல்லாஹ் எந்தப் பதிலும் கூறாது மௌனமாக இருந்துவிட்டார். அதன்பின் இரண்டொரு நாட்கள் கழித்து, தம் கையோடு கையேட்டுப் பிரதிகள் சிலவற்றை எடுத்துக் கொண்டு ஒளஜாயியைச் சந்திக்கச் சென்றார். ஒளஜாயி அதனை வாங்கித் தலைப்பில் "கால நுஃமான்" (நுஃமான் சொல்கிறார்) என்று இருப்பதைப் பார்த்ததும், அதிலிருந்த வாசகத்தை மிகவும் கவனமாகக் கடைசிவரை படித்து முடித்தார். அதன்பின் அவர் அப்துல்லாஹ்வை நோக்கி, "இந்த நுஃமான் என்ற பெரியார் யார்?" என வினவினார். "இராக்கில் இவர் ஓர் அறிஞர். இவரிடம்தான் நான் கல்வி பயின்றேன்" என்று அப்துல்லாஹ் தெரிவித்தார். "இந்த நுஃமான் மாபெரும் மேதை யாகத் தெரிகிறதே!" எனப் பெரியார் ஒளஜாயி விசாரித்தார். "ஆம், இவர்தான் மார்க்கத்தில் புதிய புதிய விஷயங்களை யெல்லாம் கூறுகிறார் என்று தங்களால் குறை கூறப்பட்ட அபூ ஹனீபா" என்று அப்துல்லாஹ் கூறியதும், அந்தப்

பெரியார் மிகவும் மனம் வருந்தலானார். "நான் கேள்விப்பட்டதை வைத்துக் கொண்டு பெரிய தவறிழைத்துவிட்டேன், அப்துல்லாஹ்!" என்று நாத் தழுதழுக்கக் கூறினார்.

அதே வருடம் இமாம் அபூ ஹனீபா அவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தார்கள். அங்கே இந்தப் பெரியார் ஔஜாயியும் வந்திருந்தார். அப்துல்லாஹிப்னு முபாரக் அப்போது அங்கிருந்தார். ஒரு மார்க்கப் பிரச்சினை பற்றி இமாமவர்கள் அற்புதமான விளக்கம் நல்கிக் கொண்டிருந்தார்கள். அந்த விளக்கத்தைக் கேட்டு மனம் நெகிழ்ந்த ஔஜாயி, அப்துல்லாஹ்வை நோக்கி, "அப்துல்லாஹ், இவரிடமுள்ள அறிவாற்றலும், திறமையும்தான் மக்கள் இவர் மீது பொறாமைப்படும்படி செய்துள்ளது. அவரைப் பற்றி நான் நினைத்தது எவ்வளவு பெரிய தவறு என்பதையும் இப்போது தான் உணருகிறேன். அதற்காக மிக மிக வருந்துகிறேன்" என்று கூறினார்.

இதேவிதம்தான் நபி பெருமானாரின் நேரடி வாரிசாக அக் காலையில் மதீனாவில் வாழ்ந்து கொண்டிருந்த இமாம் ஜஃபருஸ் ஸாதிக் (ரலி) * அவர்களிடமும் இமாமவர்களைப் பற்றி மோசமான அபிப்பிராயம் உண்டாக்கப்பட்டிருந்தது. மேலே குறித்த சம்பவம் நடந்த ஆண்டுக்கு அடுத்த ஆண்டிலும், இமாமவர்கள் ஹஜ்ஜுக்குப் போய், ஹஜ்ஜை முடித்துவிட்டு மதீனா சென்றார்கள். அங்கே அவர்கள் இமாம் ஜஃபருஸ் ஸாதிக் (ரலி)கைச் சந்தித் தார்கள். அவர்களோடிருந்த நண்பரொருவர், "இவர்தான் அபூ ஹனீபா!"

* *இது இமாம் ஜஃபருஸ் ஸாதிகின் தந்தையாரான இமாம் முஹம்மது பாக்கிர் (ரலி) அவர்கள் என்று சில நூல்களில் காணப்படுகிறது. ஆனால், ஹிஜ்ரி 113ல் (அதாவது, இமாமவர்களின் முப்பத்து மூன்றாம் வயதில்) இமாம் பாக்கிர் (ரலி) காலமாகி விட்டார்கள். இச்சம்பவமோ இமாம் அபூ ஹனீபா தங்கள் மார்க்கத் தீர்ப்புகள் மூலம் பிரசித்தியடைந்த பின் நடந்துள்ளது. எனினும், இமாம் அபூ ஹனீபா அவர்கள் ஏற்கனவே இமாம் பாக்கிர் (ரலி) அவர்களைப் போய்க் கண்டு அவர்களிடம் ஹதீஸ்களைக் கேட்டிருக்கக்கூடும் என்று மட்டும் நம்ப இடமிருக்கிறது.*

என்று அவர்களிடம் அறிமுகப் படுத்தினார். உடனேயே அவர்கள், "அபூ ஹனீபா, நீங்கள் என் திருப்பாட்டனார் எம்பெருமான் (ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களுக்கெல்லாம் உங்கள் சொந்த அனுமானத்தின் மீது, அவற்றுக்கு மாற்றமான கருத்துக்களைச் சொல்கிறீர்களாமே!" என்று இமாமவர்களை நோக்கி வினவினார் கள். இது கேட்ட இமாம் அபூ ஹனீபா மிகவும் பணிவோடு, "எம்பெருமான் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களுக்கு நான் மாற்றமான கருத்துக்களைக் கூறுவதா? அவ்வாறு நான் தவறாமலிருக்க அல்லாஹ் என்னைக் காப்பாற்றுவானாக! தயவுசெய்து சற்று அனுமதியளித்தால் தங்களிடம் மூன்று விஷயங்களைக் குறித்து மட்டும் நான் வினவுவதற்குத் தாங்கள் பதிலளிக்கவேண்டும்" என்று வேண்டினார்கள்.

இமாம் ஜஃபருஸ் ஸாதிக் அதற்கு அனுமதியளித்ததும், இமாம் அபூ ஹனீபா கேட்டார்கள் : "விந்து, மூத்திரம் இவை இரண்டில் எது அதிக அசுத்தமானது?" என்று.

"மூத்திரம்" என்று இமாம் ஜஃபருஸ் ஸாதிக் பதிலளித்தார்கள். "ஆனால், மார்க்கச் சட்டப்படி மூத்திரம் வெளிப்பட்டால் அந்தத் தலத்தை மட்டும் கழுவினால் - சுத்தமாக்கிக் கொண்டால் - போதும் என்றும், விந்து வெளிப்பட்டால் அந்தத் தலத்துடன் மட்டும் நில்லாது, உடல் முழுவதையுமே கழுவவேண்டும் என்றல்லவா இருக்கிறது! நான் என் சுய அனுமானப்படி தீர்ப்புக் கூறுவதானால் அதிக அசுத்த மானதன் விஷயத்திலல்லவா அதிகச் சுத்தம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியிருப்பேன். நான் அவ்வாறு செய்யாமல், மார்க்கச் சட்டத்தை வற்புறுத்தியல்லவா தீர்ப்பளித்துள்ளேன்!" என்று விளக்கிய இமாம் அபூ ஹனீபா, அடுத்து வினவினார்கள் : "ஆண், பெண்களில் அதிகப் பலஹீனமானவர்கள் யார்?"

"பெண்கள் தாம்" என்று இமாம் ஜஃபருஸ் ஸாதிக் பதிலளித்தார்கள்.

"பாகப்பிரிவினையில் ஆண், பெண்களில் யாருக்கு அதிகப் பங்கு கொடுக்கப்படுகிறது?"

"ஆண்களுக்குத்தான்"

"நான் மட்டும் என் சுய அனுமானப்படி தீர்ப்புக் கூறுவ தானால், பெண்கள் பலஹீனமானவர்களானதால் அவர்களுக்கு இரண்டு பங்கும், ஆண்களுக்கு ஒரு பங்கு வீதம் என சொத்து பாகம் பிரிக்கப்படவேண்டும் என்றல்லவா தீர்ப்பளித்திருப்பேன்! ஏனெனில், பல மற்றவர்களுக்குச் சற்று அதிகம் கொடுப்பதையே நம் சாமான்ய அறிவு ஆதரிக்கிறது. ஆனால், நான் மார்க்கச் சட்டப்படி தானே தீர்ப்பளித்துள்ளேன்?" என்று அபூ ஹனீபா விளக்கினார்கள்.

கடைசியாக, இமாம் அபூஹனீபா கேட்டார்கள் : "தொழுகை, நோன்பு ஆகிய இரண்டிலும் அதிகம் ஏற்றமானது எது?" என்று.

"தொழுகைதான்" என்று இமாம் ஜஃபருஸ் ஸாதிக் (ரலி) பதிலளித்தார்கள்.

"அப்படியானால், மாதவிலக்கான பெண் நோன்பை 'கலா' (திரும்பவும் எடுத்து முடித்தல்) செய்யாமல், தொழுகையைத் தானே 'கலா' செய்யவேண்டும்! நானோ அப்படிக் கூறாமல், மார்க்கச் சட்டத்தை ஒட்டி நோன்பைக் 'கலா'ச் செய்யும்படிதான் தீர்ப்பளித் திருக்கிறேன்" என்று இமாம் அபூ ஹனீபா விளக்கினார்கள். உடனே, இமாமவர்களின் நேர்மையை உணர்ந்த இமாம் ஜஃபருஸ் ஸாதிக் (ரலி) மகிழ்ச்சியடைந்து, அவர்களைக் கட்டித் தழுவி நெற்றியில் முத்தமிட்டார்கள்.

இமாம் அபூ ஹனீபா, இமாம் ஜஃபருஸ் ஸாதிக் (ரலி) அவர்களிடமிருந்தும் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டிருக் கிறார்கள்.

சரித்திரப் பின்னணி

இமாமவர்களுடைய தீர்ப்புகள் மக்களிடையே அதிக மதிப்புப் பெற்றதுமே, இமாமவர்களின் பெயரும் அரசியலோடு சம்பந்தப் படுத்தப்பட்டது. புரட்சிகளில் கூட அவர்களுடைய கூட்டு இருக்கலாமோ என்று ஐயமுண்டாகலாயிற்று. இதை விளங்கிக் கொள்ள, அச்சமயம் நிலவிய அரசியல் நிலையை ஓரளவாவது தெரிந்து கொள்ள வேண்டுவது அவசியமாகும். இமாமவர்கள் கல்வி பயின்றது பற்றிக் குறிப்பிடுமுன், அதுவரை நிலவிய ஆட்சி முறை பற்றியும், அரசஞானி உமர் இப்னு அப்துல் அஜீஸ் ஆட்சி செய்தது

பற்றியும் பார்த்தோம். ஹிஜ்ரி 101ல் அந்த மகா புருஷர் விஷமிடப் பட்டுக் கொல்லப்பட்டார். அவருக்குப்பின் இரண்டாம் யஜீது என்பவர் கலீபாவானார். அக்காலையில் இரண்டு பெரும் கட்சியினர் இருந்து வந்தனர். இவர்கள் எமனியர்கள், மதாரியர்கள் எனப்படுபவர்கள். கலீபா எமனியருக்கு ஆதரவு தந்தால், மதாரியர்கள் அந்தக் கலீபாவை எதிர்க்கத் துணிவர். கலீபா மதாரியர்களை ஆதரித்தால், எமனியர்களுக்கு ஆத்திரம் வந்துவிடும். இப்படியாக இவர்களால் ஆட்சியாளர்கள் அதிக கவலைக்கும் தொல்லைக்கும் உள்ளாகி வந்தனர். உமர் இப்னு அப்துல் அஜீஸ்தான் இவ்விரு கட்சி யாரிடையேயும் நிலையாக நீதி வழங்கி வந்தார். அவர் மறைந்த பின் இரண்டாம் யஜீது மதாரியர்களை ஆதரித்து எமனியர்களைக் கொடுமைப் படுத்தலானார். இதனால், எமனியர்கள் யஜீது இப்னு முஹல்லப் என்பவருடைய தலைமையில் பெருத்த படை திரட்டிக் கொண்டு ஆட்சியாளரை எதிர்க்கத் தயாரானார்கள். அச்சமயம் பஸராவிலிருந்த இமாம் ஹஸன் பஸரி தம் கூட்டத்தார்கள், இவர்களில் எந்தக் கோஷ்டி யாரோடும் சேரவேண்டாம் என்று உத்தர விட்டார்கள். ஆனால், எமனியக் கோஷங்களால் உணர்ச்சி வசமான பஸராக்காரர்களும், இராக்கியர்களும், எமனியப் படையுடன் சேர்ந்து யூப்ரட்டீஸ் நதிக்கரையிலுள்ள அக்ரா என்ற இடத்தில் நின்றனர். கலீபா யஜீது அனுப்பிய பெரும்படை இந்த எமனியப் பட்டாளத்தை நசுக்கி விட்டது. ஆனால், இதன் எதிரொலியாக முஸ்லிம் உலகம் முழுமையிலும் ஸ்பெயினில், ஆப்பிரிக்காவில், கிழக்கில் எல்லாத் திசைகளிலும் எமனிய-மதாரியப் பிணக்கு தலைவிரித்தாடி எத்தனையோ படுநாசங்களை உண்டாக்கிக் கொண்டிருந்தது. இந்நிலையில் கலீபா யஜீது ஹிஜ்ரி 105ல் காலமானார்.

மதாரிய - எமனியக் கோஷ்டிகள் பதவி ஆதிக்கத்துக்காகப் போட்டியிட்டனராயினும், தாங்கள் ஆட்சிக்கு உரியவர்கள் என்று கோரி அவர்கள் போராடவில்லை. ஆட்சியாளர்கள் தங்களை மதித்துச் சலுகை தரவேண்டும் என்று தான் அவர்கள் விரும்பி னார்கள். ஆனால், அப்போது நடந்து வந்த முஆவியா (ரலி) உண்டாக்கிவிட்டிருந்த உமைய்யா வமிசத்தாருக்குப் போட்டியாக, ஆட்சி தமக்குத்தான் சேரவேண்டும் என்று போராடி வந்த இரண்டு

கூட்டங்களும் இருந்தன. இவற்றுள் ஒன்று ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களின் வமிசத்தவர்கள். மற்றொன்று பனூ அப்பாஸிய்யாக்கள் என்ற கூட்டத்தவர்கள். இமாம் அபூ ஹனீபாவின் காலத்தில் இந்தப் பாத்தியதை கொண்டாடியவர் இமாம் ஹுஸைனின் பேரப்பிள்ளைகளில் ஒருவரான ஜைது என்பவராவார். இவரை ஆதரித்தவர்கள் ஜைதிகள் எனப் பட்டனர். அப்பாஸியாக்கள் என்பவர்களின் உரிமை சற்று விசித்திரமானது. அவர்கள் நபி பெருமானாரின் சிறிய தகப்பனார் ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் வமிசத்தவர்களாவர். ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி)யின் நான்கு புத்திரர்களில் மூத்தவர்களான ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களின் புத்திரர் பெயர் அலீ என்பது. அவர் ஹிஜ்ரி 117ல் காலமானார். அவருடைய புத்திரர் முஹம்மது என்ற பெயருடையார். இவர் ஆட்சி உரிமை தமக்குத்தான் உண்டு என்று வாதாடினார். அதற்கு இவர் சொன்ன காரணமாவது : கர்பலாப் படுகொலைக்குப் பின்னர் இஸ்லாத்தின் ஆத்மீகத் தலைமைப் பதவி (கிலாபத்) இமாம் ஹுஸைனுடைய புத்திரரான ஹஜ்ரத் அலீ என்ற ஜைனுல் ஆபிதீனுக்குப் போகவில்லை. அதற்குப் பதிலாக அது ஹஜ்ரத் அலீயின் வீரப் புதல்வராக நாம் கதைகளில் படித்துள்ள முஹம்மது ஹனீபாவுக்குத்தான் போய்ச் சேர்ந்ததாம். அவர்கள் காலமான பின்னர் அவர்களுடைய புதல்வர் அபூ ஹாஷிம் என்பவரிடம் அந்தத் தலைமைப் பதவி போய்ச் சேர்ந்ததாம். அவர் தம் மரணத்தருவாயில் ஹஜ்ரத் அப்பாஸ் (ரலி)யின் பௌத்திரரான-நாம் மேலே குறித்துள்ள - முஹம்மது (இப்னு அலீ, இப்னு அப்துல்லாஹ், இப்னு அப்பாஸ்) என்பவரிடம் அந்தக் கிலாபத்தை ஒப்படைத்தார்களாம். எனவே, இந்த முஹம்மதும், இவரைச் சேர்ந்தவர்களும், தாங்கள் தாம் இஸ்லாமியக் கிலாபத்துக்கு அதிபதிகளாக இருக்க உரிமையுடையவர்கள் என்று போராடிக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு வெகு திறமையுடன் வேலை பார்த்து, நெடுகிலும் ஆதரவு தேடுவதில் அபூ முஸ்லிம் என்ற இஸ்பஹானியர் மிகுந்த வெற்றி கண்டு கொண்டிருந்தனர்.

தமாஸ்கஸில் கலீபா ஹிஷாம் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்த நேரத்தில், இராக்கில் யூஸுப் இப்னு உமர் என்பவர் நிர்வாக அதிகாரியாக இருந்தார். இவர் நயவஞ்சக இயல்பும், அடிக்கடி மாறும் மனநிலையும், கொடூரமான தன்மையும் உடையவர். இவர் ஹாஷிமிய்யாக்களையும் கொடுமைப்படுத்திச் சித்திரவதை செய்யலானார். இதனால், இமாம் ஹுஸைனின் பேரரும், ஹஜ்ரத் அலீயிலிருந்து கிலாபத்தை உரிமை கொண்டாடியவரும், நாம் மேலே பிரஸ்தாபித்துள்ள வருமான ஜைது என்பார் இந்த யூஸுபிடம் அது பற்றி முறையிடுவதற்காகச் சென்றார். அவரை யூஸுப் மிகவும் அவ மரியாதைப்படுத்தி, இழிவாகப் பேசி விரட்டிவிட்டார். எனவே, அவர் வெகு ஆத்திரமாகக் கூபா வந்து ஹிஜ்ரி 120ல் ஒரு படையைத் திரட்டிக் கொண்டு ஆட்சியாளரை எதிர்த்துப் போராடத் தயாரானார். கலீபா ஹிஷாம் அனுப்பிய படை இந்த ஜைதைக் கொன்று, அவருடைய படைகளையும் அழித்து, அவருடைய பிரேதத்துக்கு அநாகரீகமான 'தண்டனை' கொடுத்தது.

ஏற்கனவே, தமது குடும்பத்தாருக்காக ஹஜ்ரத் அலீ (ரலி) நற்பிரார்த்தனை செய்ததையும், தமது தந்தையாரை ஆசிர்வதித்ததையும் எண்ணி ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களின் குடும்பத்தார் மீது இமாம் அபூ ஹனீபா அனுதாபம் கொண்டிருந்தார்கள். எனவே, இமாமவர்களின் ஊரான கூபாவில் அந்த வமிசத்தைச் சேர்ந்த ஜைது கிளப்பிய கலவரத்துக்கும் இமாம வர்களின் ஆதரவு இருந்திருக்கலாம் என்று ஊகிக்க இடமுண்டு. இதுபற்றி நாம் திட்டமாக எதுவும் முடிவுகட்ட இயலாவிடினும், அந்தக் கால ஆட்சியாளர்கள் அப்படித்தான் நினைத்தனர். ஆட்டங் கண்டு, எந்த நிமிடமும் விழுந்து விடலாம் என்ற நிலையிலிருந்த பனூ உமைய்யா ஆட்சி முற்றாக இமாம் அபூ ஹனீபா மீது சந்தேகம் கொண்டது. ஆனால், உலகப் புகழ் பெற்றுவிட்ட மாமேதையான அவர்களை மற்றவர்களைச் செய்ததுபோல் தலையைச் சீவவும் இயலவில்லை. சந்தேகக் கண்ணோடே ஆட்சிபீடம் அவர்களை நோக்கிக் கொண்டு வந்தது.

இமாமவர்கள் பகிரங்கமாக இந்தப் போராட்டங்களைப் பற்றி அபிப்பிராயம் கூறவே மறுத்து விட்டார்கள். ஒரு சமயம் ஒருவர் அவர்களை அணுகி, "ஹஜ்ரத் அலீ - முஆவியா ஆகிய இருவரிடையேயும் நடந்த சண்டையைப் பற்றி உங்கள் கருத்து யாது?" என்று வினவினார். இமாமவர்கள், நாளை மறுமையில் அல்லாஹ் என்னிடம் எது குறித்து வினவுவானோ அது குறித்து

மட்டுமே நான் அஞ்சுகிறேன்; எனவே, ஹஜ்ரத் அலீ-முஆவியா தகராறு குறித்து அல்லாஹ் என்னிடம் கேட்கமாட்டான். நானும் அதற்காகப் பாவமன்னிப்புத் தேட வேண்டியதில்லை என்று பதிலளித்து விட்டார்கள். இவ்விதம் அவர்கள் தங்களை அரசிய லோடு பிணைத்துவிடக் கூடிய பேச்சுக்களைக் கூடியவரை தவிர்த்து எச்சரிக்கையோடு நடந்து கொண்டார்கள்.

ஆனால், "பிக்ஹுக் கலை சம்பந்தப்பட்டவரை, ஹஜ்ரத் அலீ-முஆவியா தகராறு ஒரு சிறந்த முன்மாதிரியைத் தந்துள்ளதாக" வேறொரு சந்தர்ப்பத்தில் அவர்கள் கூறியுள்ளார்கள். "இதில் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை மட்டும் நம் முன் முன்மாதிரியாக இல்லாதுபோயின், அரசியல் புரட்சிக்காரர்கள் விஷயத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கை என்ன என்பதை நாம் அறியாமலேயே இருந்திருப்போம்" என்று தெரிவித்தார்கள்.

கலிபா ஹிஷாம் ஹிஜ்ரி 125ல் காலமானார். அவருடைய மருமகன் இரண்டாவது வலீது கலீபாவாகித் தம் குடிமக்கள் கையாலேயே கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். (ஹிஜ்ரி 126). அதன்பின் மூன்றாம் யஜீது ஆறு மாதமும், அவர் சகோதரர் இப்ராஹீம் இரண்டு மாதமும் அரசாட்சி நடத்தினர். பின்னர், ஹிஜ்ரி 127 முதல் 132 வரை இரண்டாவது மர்வான் கலீபாவாகி ஆட்சி நடத்தினார். இவருடைய காலத்தில் யஜீது இப்னு உமர் என்பவர் கூபாவின் நிர்வாகியாக நியமிக்கப்பட்டிருந்தார். இவர் வெகு திறமையான நிர்வாகம் நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. இவர்தான் இமாம் அபூ ஹனீபா அவர்களைக் கூபாவில் அரசாங்க நீதிபதியாக நியமித்து, அந்தப் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி மிகவும் வற்புறுத்தினார். ஆனால், நேர்மையற்ற இந்த ஆட்சியாளரின் கீழ் தாம் வேலை பார்க்க இயலாது என்று உணர்ந்த இமாமவர்கள் அதை ஏற்க மறுத்துவிட்டார்கள். பிரபலஸ்தர்கள் பலரை அவர் அவர்களிடம் தூதனுப்பினார், "யஜீத் இந்த மஸ்ஜிதின் தூண்களை எண்ணும்படி உத்தரவிட்டால் நான் கீழ்படிய வேண்டுமா? அல்லது ஒரு முஸ்லிமுக்கு அநியாயமாகத் தூக்கு தண்டனை விதித்து, அந்த உத்தரவில் என்னைக் கையெழுத்திடச் சொன்னால் நான் கையெழுத்திடத்தான் வேண்டுமா?" என்று வினவியவர்களாகத் தாங்கள் அந்தப் பதவியை ஏற்க முடியாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார்கள்.

இந்த மறுப்பு யஜீதின் ஆத்திரத்தைத் தூண்டிவிட்டது. இமாம் அபூ ஹனீபாவைக் கைது செய்து தினமும் பத்துக் கசையடிகள் கொடுக்கச் செய்தார். ஆனால், இமாமவர்களின் உறுதி இதனாலெல்லாம் அதிகப்பட்டதேயன்றி குறையவில்லை. சில நாட்களில் தன் தோல்வியை உணர்ந்த யஜீது இமாமவர்களை விடுதலை செய்யும்படி உத்தரவிட்டார். விடுதலையான இமாமவர்கள் உடனே மக்கா புறப்பட்டுப் போனார்கள். ஹிஜ்ரி 136 வரை அவர்கள் அங்கேயே தங்கிவிட்டார்கள்.

இதற்கிடையே இஸ்லாமிய உலகமே அரசியலில் ஒரு சிறிய பிரளயத்தைக் கண்டுவிட்டது. ஹஜ்ரத் அலீ (ரலி)யின் வாரிசாகக் கிலாபத்துக்கு உரிமை கொண்டாடிய ஜைது கொல்லப்பட்டதும், அவர் மகனான யஹ்யா என்பவர் கூரஸானுக்கு ஓடிப்போனார். அங்கே ஒரு கலகத்தில் கொல்லப்பட்டுப் போனார். இதனால் அப்பாஸியாக் களுக்குக் களையெடுத்தது போலாயிற்று; போட்டியில்லாது போயிற்று. ஆட்டங்கண்டு கலகலத்து நின்ற உமைய்யா ஆட்சியை ஒரே நொடியில் வீழ்த்தி விட்டனர். அப்பாஸிய வாரிசான முஹம்மது என்பவர் ஹிஜ்ரி 115ல் காலமாகும் தருவாயில், அவருடைய நான்கு புதல்வர்களான இப்ராஹீம், அப்துல்லாஹ், அபுல் அப்பாஸ், அபூ ஜஃபர் என்பவர்கள் ஒருவர் பின் ஒருவராக வாரிசாக வேண்டும் என்று வசியத் செய்திருந்தார். உமையாக்களிடம் சிக்கிய இப்ராஹீம் கொல்லப்படவே, அவர் சகோதரர் அப்துல்லாஹ், அப்பாஸியாக் கிலாபத்தின் வாரிசாக ஆனார். பக்தாதில் உமையாக் கலீபா இரண்டாவது மர்வான் ஆட்டங்கண்ட நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது, இமாம் அபூ ஹனீபாவின் ஊரான கூபாவில் ஹிஜ்ரி 132 ரபீயுல் ஆகிர் கடைசி வெள்ளிக்கிழமையன்று அப்துல்லாஹ் அபுல் அப்பாஸ் இஸ்லாமிய உலகின் கலீபாவாகத் தம்மைப் பிரகடனம் செய்து கொண்டார். அதிலிருந்து ஐந்தாவது மாதம் (ரமலானில்) இவர் தமாஸ்கஸ் நகரையும் கைப்பற்றி இஸ்லாமிய உலகின் கலீபாவாகப் பட்டமேற்றார். உமையாக்களின் கடைசிக் கலீபா இரண்டாம் மர்வான் தப்பியோடியும், கடைசியில்

எகிப்தில் கண்டுப்பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டார். உமையாக்களின் ஆட்சி தொண்ணூற்றொரு வருடங்கள் நடந்து முடிந்துவிட்டது. கலீபா அப்துல்லாஹ் அபுல் அப்பாஸ் முதலாவது அப்பாஸியாக் கலீபாவாக ஆனார்.

பனூ உமையாக்களிடம் நியாயம் கிடைக்கப்பெறாத குடி மக்கள், ஆட்சி மாறுதலால் அமைதியும், நிம்மதியும் உண்டாகும் என்று எதிர்பார்த்தனர். மகான்களையும், பெரியார்களையும் முன்னவர்கள் அவமரியாதை செய்து கொடுமைப்படுத்தியதால், நபிபெருமானின் வாரிசுகளை முன்னவர்கள் அவமரியாதை செய்து கொடுமைப் படுத்தியதால், நபிபெருமானின் வாரிசுகளை இழிவாக நடத்தியதால் ஆத்திரமடைந்திருந்த யாவரும், அவர்களெல்லாம் அப்பாஸியாக் களின் ஆட்சியில் நன்கு நடத்தப்படுவர் என்று எதிர்ப்பார்த்தனர். எனவே தான் அவர்கள் ஆட்சிக்கு வருவதற்கு மிகுந்த ஒத்துழைப்பு நல்கினர். ஆனால், அப்பாஸியாக்களின் போக்கு, ஒரு எதேச்சாதிகாரம் ஒழிந்து மறு எதேச்சாதிகாரம் தொடங்கிய கதையாகவே முடிந்தது. ஆட்சிக்கு வந்த அப்பாஸியாக்கள் உமைய்யாப் பூண்டே இல்லாதபடி அழித்து ஒழிக்கலானார்கள். உமைய்யாக்களில் என்றே செத்துப் புதைக்கப்பட்டுப் போனவர்களுடைய புதை குழிகளையும் கூடத் தோண்டி உள்ளே இருந்த எலும்புகளைப் பொறுக்கிச் சேர்த்துச் சுட்டுச் சாம்பலாக்கி நெடுகிலும் தூவினர். ஆட்சி கிடைத்துவிட்ட வெறியால், அதை நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கில் பயங்கரமான அடக்குமுறைகளைக் கையாண்டனர். முதலாவது அப்பாஸியாகக் கலீபா தன் எதிரிகளைக் கருவறுத்த பயங்கர முறையால் "ஸப்பாஹ்" என்ற பட்டப் பெயர் பெற்றார். இவர் ஆட்சிபீடத்தை சிரியாவிலுள்ள தமாசுகசைவிட்டும், இராக்கிலுள்ள பக்தாதுக்கு மாற்றினார். இவ்விதம் பரம்பரை மாறியதுடன், தலைநகரமும் மாறிற்று. இவர் (அப்துல்லாஹ் அபுல் அப்பாஸ்) ஹிஜிரி 136 துல்ஹஜ்ஜில் காலமானார். உடனேயே இவருடைய தந்தையார் முஹம்மதின் வசியத்துப்படி இவருடைய சகோதரரான அபூ ஜஃபர், அல் மன்சூர் என்ற பட்டத்தோடு கலீபாவானார். இவர்தான் பின்னர் புகழ்பெற்ற பக்தாத் நகரையே ஒரு தலைமையான பட்டணமாகத் திட்டமிட்டு நிர்மாணித்தார். இவர் நல்லியல்பும், தீய தன்மையும் கலந்த ஒரு மனிதராக விளங்கினார்.

இவர் வெற்றிகள் பல கண்டார். தம் எதிரிகளை யெல்லாம் திட்டமிட்டுத் கொன்று தொலைத்தார். தமது ஆட்சிக்கு இடைஞ்சலாக இருந்தவர் களையெல்லாம் அப்புறப் படுத்தினார். தமது குடும்பத்தார்கள் ஆட்சிக்கு வருவதற்காகத் தன் தந்தையின் காலத்திலிருந்தே தீவிரப் பிரசாரம் செய்து மக்களிடையே ஆதரவு தேடியதுடன், சகலவிதமான சூழ்ச்சிகளையும் கையாண்டு கடைசியில் அப்பாஸியாக்களை அரியணையிலேற்றிய அபூ முஸ்லிம் என்ற இஸ்பஹானியரைத் தன் அவையிலேயே வைத்துக் கொலை செய்யும்படி செய்தார்.

இந்தக் கலீபா செய்த அட்டூழியங்களில் மிகவும் மோசமானது, நபிபெருமானாரின் குடும்பத்தாரை இவர் கொன்றொழித்ததுதான். இமாம் ஹுஸைனின் பேரப் பிள்ளைகளில் ஒருவரான ஜைது என்பவர் உமைய்யாக்களோடு மோதி மாண்டது பற்றியும், அவர்களுடைய புத்திரர் யஹ்யா குராஸானுக்கு ஓடிச் சென்று அங்கே ஒரு போரில் கொல்லப்பட்டது பற்றியும் முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். இவர்களையன்றி இமாம் ஹஸனின் வமிசத்தார்கள் (அதாவது, இமாம் ஜெய்னுலாபிதீனின் பேரப்பிள்ளைகள்) இதுவரை எந்த அரசியல் இயக்கத்திலும் கலக்காமல் ஒதுங்கியே வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஆட்சியாளர்கள் தந்த தொல்லைகளிடையிலும் அவர்கள் மிகுந்த சகிப்புடன் இருந்து வந்தனர். இந்த இரண்டு கூட்டத்தாரும் மதீனாவிலேயே வாழ்ந்தனர். இவர்களுக்கு அங்கே மக்களிடையே மதிப்பும் மரியாதையும் கிடைத்து வந்தது.

உமைய்யா ஆட்சி ஆட்டங்கண்டு விழவிருந்த தருணத்தில் தான், நபி பெருமானாரின் குடும்பத்தினரான இவர்கள், அப்போது தாங்கள் சும்மா இருக்க இயலாது என்று எண்ணி, மதீனாவில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர். அதில் மற்ற பனூ ஹாஷிம் குடும்பத்தாரும் கலந்து கொண்டனர். அப்போது அபூ ஜஃபர் (பின்னர் கலீபா மன்சூர் ஆன இதே நபர்தான் பனூ ஹாஷிம் ஆனதால்) அந்தக் கூட்டத்துக்கு வந்தார். அங்கே இமாம் ஹஸனின் பௌத்திரர்களில் ஒருவரான முஹம்மது என்ற இளைஞர் கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருடைய அப்பழுக்கற்ற ஒழுக்கம் காரணமாக அவர் 'நப்சுஸ் ஜகிய்யாஹ்' (பரிசுத்த ஆத்மா) என்று பட்டம் பெற்றிருந்தார். அவருக்கு விசுவாசப் பிரமாணம் செய்தவர்களுள், இந்த மன்சூரும் ஒருவர். ஆனால், கடைசியில் கிலாபத்தே இவர் சகோதரர் கையில் சிக்கி

அப்பாஸியா ஆட்சி ஆரம்பித்து விட்டது. எனவே, மன்சூர் கலீபாவானதும், இந்த முஹம்மதையும், இவர் சகோதரர் இப்ராஹீம் என்பவரையும் பிடித்துத் தொலைத்துவிடத் திட்டமிட்டார். அவர்கள் தப்பிவிடவே, அவர்களுடைய குடும்பத்தார்கள் அனைவரையும், இப்ராஹீ முக்குப் பெண் கொடுத்த மாமனார் ஆன முஹம்மதுல் உதுமானி (இவர் கலீபா ஹஜ்ரத் உதுமானின் பௌத்திர ராவார்.)யையும் கைது செய்து விலங்கிட்டுக் கூபாவுக்குக் கொண்டு போகச் செய்து அங்கே ஹுபைரா என்ற கோட்டையுள் சிறை வைத்தார். அங்கே அவர்கள் பலவிதமாகச் சித்திரவதை செய்யப்பட்டனர், முஹம்மதுல் உதுமானி கொல்லவும்பட்டார். இதற்கிடையே முஹம்மது மதீனாவில் ஒரு படையுடன் தோன்றி, அங்கே தம்மைக் கலீபாவாகப் பிரகடனம் செய்தார். அச்சமயம் மக்காவில் வாழ்ந்திருந்த இமாம் மாலிக்கும், கூபாவிலிருந்த இமாம் அபூ ஹனீபாவும் இவரை இஸ்லாமிய உலகின் கலீபாவாக ஏற்றுக் கொண்டனர். ஆனால், மன்சூர் அனுப்பிய பெரும்படை விரைவிலேயே முஹம்மதுடன் மோதி அவரைக் கொன்று அவர் ஆதரவாளர்களையும் நாசம் செய்தது. அதன்பின் முஹம்மதின் சகோதரர் இப்ராஹீம் ஒரு பெரும்படையுடன் கூபாவைக் கைப்பற்றி அங்கே தம்மைக் கலீபாவாகப் பிரகடனப்படுத்தினார். இவரை எதிர்க்கவும் மன்சூர் ஒரு பெரும்படையை அனுப்பினார். அந்தப் படை யூப்ரடீஸ் ஆற்றுக்கரையில் இப்ராஹீமின் படையைச் சந்தித்தது. இப்ராஹீம் ஒரு ஆலிமாகவும், இனிய சுபாவம் படைத்தராகவு மிருந்ததால் கூபாவிலுள்ள ஆலிம்கள் யாவரும் அவருக்கு ஆதரவு நல்கினர். அவருடைய படையில் பல்வேறிடங்களிலுமிருந்து வந்த பல்லாயிரம் ஆலிம்கள் இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

இமாம் அபூ ஹனீபா, மன்சூரின் கொடுமையையும், முஹம்மது நசுக்கப்பட்ட விதத்தையும் கண்டு மிகுந்த வேதனை அடைந்திருந்தார்கள். அவர்களுக்கு இப்ராஹீம் இப்னு மைமூன் என்றொரு நண்பருண்டு. அவரும் பயபக்திமிக்க ஆலிமாக இருந்தார். அவர் ஒருநாள் இமாமவர்களைக்கண்டு "நாம் இந்தக் கொடுமைகளைக் கண்டும் பேசாமல்தான் இருக்கவேண்டுமா!" என்று ஆத்திரத்தோடு கேட்டார். இமாமவர்கள், "நண்பரே , ஆத்திரப்பட்டுப் பயனென்ன?" தடுக்கத்தான் வேண்டும். ஆனால், அதற்கான சந்தர்ப்பமும், சாதனங்களும் வேண்டாமா?" என்று கூறி அவரைச் சமாதானப்படுத்தினார்கள். ஆனால், சில நாட்களுக்கெல்லாம் மன்சூரின் கையாட்கள் (மன்சூராலேயே பின்னால் கொலை செய்யப்பட்ட அபூ முஸ்லிம்தான் என்றும் சொல்லப்படுகிறது) இந்த இப்ராஹீம் இப்னு மைமூன் என்ற முதியவரைக் கொலை செய்து விட்டனர். இதைக் கேள்வியுற்ற இமாமவர்கள் மிகுந்த மனவேதனை அடைந்தார்கள். எனவே, முஹம்மதின் சகோதரர் இப்ராஹீம் கூபாவில் புரட்சிக்கொடி தூக்கியதும், அதை ஆதரித்த உலமாக்களுள் இமாம் அபூ ஹனீபாவும் ஒருவராவார்கள். மற்ற ஆலிம்களைப் போல அவர்கள் துடி துடித்தார்கள் என்றும், தங்களிடம் மக்கள் கொடுத்த அமானிதப் பொருள்கள் இருந்தமையால், அவர்கள் போக முடியவில்லை என்றும் சொல்லப்படுகிறது. இப்ராஹீமுக்கு அவர்கள் நாலாயிரம் திர்ஹம் அன்பளிப்பாக அனுப்பினார்கள் என்றும், தாங்கள் அவருக்கு எழுதிய கடிதத்தில், "உங்களுக்கு வெற்றி கிட்டிவிட்டால் உங்கள் தந்தையார் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஸிப்பீன் போரில் எதிரிகளிடம் நடந்து கொண்ட முன்மாதிரிப்படி நீங்களும் நடந்து கொள்ள வேண்டும். அதாவது, புறமுதுகு காட்டி ஓடுபவர்களையும், காயப்பட்டுக் கிடப்பவர்களையும் கொன்று விடுவதுடன், உங்கள் தந்தையார் ஜமல் (ஒட்டகை) போரில் செய்த்துபோல் செய்து விடாதீர்கள்!" என்று யோசனை கூறினார்களென்றும் சொல்லப் படுகிறது. ஆனால், இவ்விதம் அவர்கள் கடிதம் எழுதினார்களா என்பதற்கு ஆதாரம் காண இயலவில்லை என்று நூலாசிரியர்கள் பலர் கூறுகின்றனர்.

ஒன்று மட்டும் நடந்தது உண்மை. இதில் கண்ட வாசகப்படி, இப்ராஹீம் நடந்து கண்டிப்பான முறையில் யூப்ரடீஸ் ஆற்றங்கரையில் போராடியிருப்பின் சரித்திரத்தின் போக்கே மாறிவிட்டிருக்கும்; ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களின் வமிசத்தார் கிலாபத்தை ஏற்றிருப்பர்; அப்பஸியாக்களின் ஆட்சி அற்பாயுளுள்ளதாக அழிந்துபட்டிருக்கும். அப்பாஸியாப் படையை எதிர்த்து நின்று போராடி முதலில் வெற்றி கண்டது. அப்பாஸிகள் புறமுதுகு காட்டி ஓடலாயினர். அவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் காயமுற்றுக் கீழே விழுந்துவிட்டனர். இந்த இடத்தில் இப்ராஹீம் இமாம் அபூ ஹனீபா பிரஸ்தாபக் கடிதத்தில் சுட்டிகாட்டியுள்ள போர்முறையைப் பின்பற்றி புறமுதுகு

காட்டியவர்களையும், கீழே விழுந்தவர்களையும் மூர்க்கத்தோடு வெட்டி வீசியிருந்தால் அவரே வெற்றிக்கொடி நாட்டியிருப்பார். ஆனால் அவர் அவ்விதம் செய்யாது அனுதாபத்துடன் தமது படையைத் தடுத்து நிறுத்தினார். இதைக் கவனித்த அப்பாஸியாப் படைகள் திடீரெனத் திரும்பி வந்து இப்ராஹீமின் படையைத் தாக்கலாயினர். அற்ப சொற்பமாகக் காயம்பட்டு உயிர் தப்புவதற்காகக் கீழே விழுந்து கிடந்த அவர்களுடைய ஆட்களும் ஆயிரக்கணக்கில் எழுந்து விட்டனர். இந்தத் திடீர் தாக்குதலைச் சமாளிக்க இயலாது இப்ராஹீமின் படை திணறியது. இப்ராஹீமின் மீது ஓர் அம்பு பாய்ந்து அவர் இறந்து விட்டார். உடனே அவருடைய படையினர் நாசமாக்கப்பட்டனர். இது நடந்தது ஹிஜ்ரி 145 துல்கஃதா இருபத்தி நான்காம் நாளிலாகும்.

இதைத் தொடர்ந்து இப்ராஹீமுக்கு ஆதரவளித்த சிரியர்களெல்லாம் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர். பஸராவைச் சேர்ந்த பெரியார்கள் பலர் இவ்விதம் தலை சீவப்பட்டனர். அவர்களுடைய பேரீச்சம் தோப்புகளும் பொட்டலாக்கப்பட்டன. மதீனாவில் வாழ்ந்த இமாம் ஹஸன்-இமாம் ஹுஸைன் வமிசத்தினர் அனைவரும், தங்கள் சொத்து சுகங்களை இழந்தனர். அவர்களுக்கு எகிப்திலிருந்து மாமூலாக வரும் உணவுப் பொருள்களும் தடுக்கப்பட்டன. அவர்களுள் மதிப்புக்குரிய இமாம் ஜஃபர் சாதிக்கும் ஒருவராவார்கள். அவர்களுடைய உடைமைகளும் பறிமுதலாயின. அவற்றை அவர்கள் தமக்குத் திருப்பித் தரும்படி கேட்டபோது, அந்த மகனையே கொன்று விடுவதாக கலீபா மன்சூர் மிரட்டலானார். இமாம் மாலிக்கும் இதனால் பாதிக்கப்பட்டார்கள். கூபாவிலுள்ள ஹுபைராக் கோட்டையில் அடைப்பட்டிருந்த நபி பெருமானார் வமிசத்தவரில் பலர் தலைசீவப்பட்டும், மற்றவர்கள் நஞ்சூட்டப் பட்டும் மாண்டனர். யூப்ரடீஸ் நதிக்கரையில் வீரமரண மடைந்த இப்ராஹீமின் தலையைக் கொய்து, அப்போது மதீனாவில் உயிரோடு ஜீவித்திருந்த அவருடைய முதிய தந்தை அப்துல்லாஹ்வுக்கு மன்சூர் அனுப்பி வைத்தார். அந்த முதியவர் தமது துயரைத் தாங்கிக் கொண்டு, "நமக்கிடையில் நியாயம் வழங்கவிருக்கும் நிரந்தரநீதிபதிமுன் நாம் சென்று நிற்கப்போகும் நாள் தூரத்திலில்லை என்பதை உன் எஜமானனிடம் கூறு" என்று தமது புத்திரன் தலையைக் கொணர்ந்த மன்சூரின் பணியாளிடம் கூறி அனுப்பினார்.

பதவி மறுப்பும், சிறைவாசமும்

இந்தத் தொல்லைகள் யாவும் இமாம் அபூ ஹனீபாவின் வாழ்க்கையிலும் பயங்கரமாக எதிரொலித்ததால், தான் இதுப்பற்றி இங்கே இவ்வளவு விரிவாக எழுத நேர்ந்தது. இமாம் அபூ ஹனீபா முதலில் முஹம்மதையும், பின்னர் அவர் சகோதரர் இப்ராஹீமையும் ஆதரித்துள்ளதால் கலீபா, அவர்களைத் தண்டிக்க நாடினார். ஆனால் மற்றவர்கள் விஷயத்தில் கையாண்ட விஷயத்தில் கையாளமல் வேறொரு நடைமுறையைக் கையாண்டார். உமையாக்களின் ஆட்சியில் இரண்டாவது மார்வானின் பிரதிநிதி யஜீது இப்னு உமர் இமாமவர்களை நீதிபதியாக நியமித்ததையும், அதை அவர்கள் ஏற்க மறுத்ததையும், அதற்காகச் சிறை சென்று, கசையடி கொடுக்கப்பட்டதையும் கலீபா மன்சூர் அறிவார். எனவே, இமாமவர்களை அழைத்துவந்து அது போன்றே தமது ஆட்சியில் பிரதம நீதிபதிப் பதவியை ஏற்குமாறு கேட்க வேண்டும், அவர்கள் அதற்கு இணங்கமாட்டார்கள், அதனால், அவர்கள் தம்மை அவமதித்த குற்றத்துக்காகச் சிறை செய்யப்பட்டார்கள் என்று காரணம் காட்டி அவர்களைத் தாம் விரும்பியவிதம் தண்டித்துக் கொள்ளலாம் என்று அவர் திட்டமிட்டார். இதனால் (மக்காவில் சில காலமிருந்த பின் கூபா வந்துவிட்ட) இமாம் அபூ ஹனீபா பக்தாத் வந்து கலீபாவைக் காணவேண்டும் என்று மரியாதையான உத்தரவு ஒன்று சென்றது. அதன்படி அவர்கள் புறப்பட்டு வந்தார்கள்.

இமாம் அபூ ஹனீபா, கலீபா மன்சூரின் அவையில் நுழையும் வாயிலில் நின்ற அதிகாரி, "இன்றைய உலகிலேயே மாபெரும் அறிஞரும், இமாமுமான அபூ ஹனீபா வருகிறார்கள்" என்று கட்டியம் கூறினார். இமாமவர்களுக்கு மரியாதையான ஆசனமும் அளிக்கப்பட்டது. இமாமவர்கள் யார் யாரிடம் கல்வி பயின்றுள்ளார்கள் என்பது பற்றி அவர்களிடம் மன்சூர் வினவினார். அவர்கள் தங்கள் ஆசான்களுடைய பெயர்களையும், ஸஹாபாக்கள் வரைபோகும் அவர்களுடைய பரம்பரைகளையும் கிரமமாகக் கூறினார்கள். சிறிது நேரம் மௌனமாக இருந்த பின்னர், "அபூ ஹனீபா நீங்கள் பிரதம நீதிபதிப் பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று கலீபா மன்சூர் கூறினார்.

தங்கள் தலைக்குமேல் கத்தி ஆடுவதை இமாமவர்கள் உணர்ந்தார்கள். சத்தியத்துக்காகவே வாழ்ந்த சான்றோர் ஆன இமாமவர்கள் சற்றும் தயக்கமின்றி, "நான் அந்தப் பதவிக்கு அருகதையற்றவன்" என்று கூறினார்கள். இந்தப் பதில் மன்சூருக்கு ஆத்திரத்தை உண்டாக்கிற்று "அபூ ஹனீபா, நீங்கள் பொய் சொல்கிறீர்கள்" என்று அவர் கர்ஜித்தார். இமாமவர்கள் மீண்டும் மிகவும் அமைதியான முறையில், "நீங்கள் கூறுவது போல நான் ஒரு பொய்யனானால், ஒரு பொய்யனை எப்படி நீங்கள் நீதிபதியாக நியமிக்க முடியும்?" என்று வினவினார்கள். கலீபா பேச்சற்றுவிட்டார்.

இமாமவர்கள் மேலும் சொன்னார்கள்; "நான் அல்லாஹ்வுக்கு முன்பு மட்டுமே தலையசைப்பவன். அதிகாரிகள் முன் தலையசைக்க என்னால் முடியாது. நீங்கள் தரும் நீதிபதிப் பதவியை ஏற்றால், அவ்விதம் நான் தலை சாய்க்க நேரும். எனவே, ஒருக்காலும் நான் அதை ஏற்க முடியாது."

கலீபா மன்சூரின் ஆத்திரம் கரைகடந்து போயிற்று. "சத்தியமாக நீங்கள் இப்பதவியை ஏற்றுத்தான் ஆக வேண்டும்" என்று அவர் சப்தமிட்டார். இமாமவர்கள் தங்கள் சாந்தமான, ஆனால் உறுதியான குரலில், "சத்தியமாக அதை ஏற்க முடியாது" என்று பதலளித்தார்கள். முதலில் அவர்கள் உள்ளே வருவதைக் கட்டியம் கூறித் தெரிவித்த அதிகாரி அவர்கள் அருகில் வந்து, "அபூ ஹனீபா, அமீருல் மூமினீனுக்கு எதிரிலா சத்தியம் செய்கிறீர்கள்?" என்று கோபத்தோடு வினவினார். "ஆம் நாங்கள் இருவருமே சத்தியம் செய்தோம். ஆனால், சத்தியத்துக்குரிய அபராதத்தைக் கொடுப்பது என்னைவிடக் கலீபாவுக்கு இலகுவானது தானே!" என்று இமாமவர்கள் பதிலளித்தார்கள்.

உடனே, தமது நியமனத்தை ஏற்க மறுத்ததுடன், தம் ஆட்சியை அவமதித்த குற்றத்துக்காக, இமாமவர்களைச் சிறையிலிடும்படி கலீபா உத்தரவிட்டுவிட்டார். இவ்விதம் அவர்கள் ஹிஜ்ரி 146ல்-அதாவது தங்களுடைய அறுபத்து ஆறாவது வயதில் சிறை வாசத்தை ஏற்க நேர்ந்தது. இமாமவர்களைத் தான் கைது செய்தது அவர்கள் தம்மை அவமதித்ததற்குதான், அவர்கள்மீது பழிவாங்கு வதற்காகவல்ல என்று காட்டுவதுபோல சிறையில் அவர்கள் ஓரளவு வசதியுடன் இருக்க கலீபா

அனுமதித்தார். அவர்களைக் காணச் செல்பவர்கள் சிறைக்குப் போய்க் கண்டு செல்லவும் அனுமதி தரப்பட்டது. ஆனால், யாவையும் வெகு விழிப்போடு கவனிக்க நெடுகிலும் ஒற்றர்களையும் நியமித்துவிட்டார். புதிய தலைநகர மான பக்தாத் இஸ்லாமிய உலகம் முழுவதிலுள்ள அறிஞர்களை அங்கே ஈர்த்துக்கொண்டிருந்தது. இப்படி வந்தவர்களுள் பலர் இமாம் அபூ ஹனீபாவையும் வந்து கண்டு சென்றனர். அவர்களுடைய மாணவர்கள் சிலர் அடிக்கடி அவர்களிடம் வந்து தங்களுடைய சந்தேகங்களுக்கு விடை பெற்றுச் சென்றனர். இதனால், சிறையினுள்ளேயே இமாம் அபூ ஹனீபா தங்கள் பாடபோதனையைத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருந்தார்கள் என்று நூலாசிரியர்கள் சிலர் எழுதியுள்ளனர்.

இமாமவர்களின் வீர மரணம்

வருடங்கள் சில இவ்விதம் சென்றன. கலீபா மன்சூருக்கு இமாமவர்களைத் தொடர்ந்து சிறையில் வைத்துக் கண் காணிப்பதே பெருத்த பாரமாக ஆகிக்கொண்டு வந்தது. என்வே சுலபமான முறையில் அவர்களைத் தமது கண் காணிப்புத் தேவைப்படாத இடத்துக்கு அனுப்பிவிடத் தீர்மானித்தார். அந்த முறையை அவர் கூபாவில் பல ஸாதாத்துகளின்மீது பிரயோகித்து அனுபவப்பட்டிருந்தார். அதுதான் அவர்களுடைய உணவில் விஷம் கலப்பதாகும். நபிபெருமான் போன்றே தோற்றமுடைய அவர்கள் அருமைப் பேரர் இமாம் ஹஸன் (ரலி), உலகப் புகழ் பெறும் விதமாக ஆட்சியிலிருந்தும் துறவியாக வாழ்ந்த உமர் இப்னு அப்துல் அஜீஸ் ஆகியவர்களைப் போல, அறிவுப் பொக்கிஷம் இமாம் அபூ ஹனீபாவும் விஷம் தலைக்கேறி இறந்தார்கள். (இன்னா லில்லாஹி-வ-இன்னா இலைஹி ராஜிஊன்). இது மன்சூரின் பல படுபாதகச் செயல்களின் சிகரமாக அமைந்தது. அவர் இமாமுல் அஃலம் உலகின் மாபெரும் அறிஞர்- முதிய வயதை எய்திய மகான்-அபூ ஹனீபா அவர்களுக்கு உணவில் விஷமூட்டச் செய்தது. தமது குடும்பம் ஆட்சிக்கு வர முழுக் காரணமாக இருந்து வாழ்நாளெல்லாம் பாடுபட்ட அபூ முஸ்லிம் இஸ்பஹானியை நயவஞ்சகமாகக் கொன்ற இந்தக் கலீபா மன்சூரைப் பொறுத்தவரை இது அற்பமான விஷயமாக இருக்கலாம். கழுவ முடியாத கறை படிந்த அவர் ஆட்சியில் இது பெருத்த கறையாகப் படிந்து விட்டது.

நஞ்சு கலந்த உணவை உண்ட இமாமவர்கள் நஞ்சு தங்கள் உடலில் வேலை செய்வதை உணர்ந்து கொண்டார்கள். இனித் தங்களுடைய சாந்திப்பெற்ற நல்லாத்மா அல்லாஹ்வின் சந்நிதியை நோக்கிச் சென்றுவிடும், அநியாயக்காரர்களின் விஷ மூச்சை விட்டே அப்பாலேகிவிடும் என்பதை உணர்ந்தவர்களாகத் தங்கள் சிரசை ஸஜ்தாவில் வைத்து விட்டார்கள். அந்த நிலையில் தான் அவர்களுடைய புனித ஆவி பிரிந்தது. அவர்கள் காலமானது ஹிஜ்ரி 150 ஷஅபான் மாதம் இரண்டாம் நாள் (கி.பி.766ல்)ஆகும்.

இமாமுல் அஃலம் காலமாகிவிட்ட செய்தி வெகு துரிதமாகப் பக்தாத் முழுவதும் பரவி விட்டது. அவர்களுடைய பூத உடலை நல்லடக்கம் செய்வதற்காக நகர் முழுவதுமே திரண்டு வந்து விட்டது. பக்தாத் நகரின் தலைமை நீதிபதியான ஹஸன் பின் அம்மார் என்ற பெரியார் முன்னின்று இமாமவர்களின் உடலைக் குளிப்பாட்டினார். ''ஆண்டவன் மீது ஆணையாக, அபூஹனீபா, நீங்கள் மாபெரும் ஃபகீஹ் (ஃபிக்ஹு சட்ட நிபுனர்); ஈடினையற்ற ஆபிது (வணக்கவாளி); அப்பழுக்கற்ற ஜாஹிது (மெய்த்துறவி); உங்களிடம் உத்தம குணங்கள் யாவும் நிறைந்துள்ளன, யாரும் சென்றடைய முடியாத படிவத்தை அடைந்து விட்டீர்கள்'' என்று பிரலாபித்தவாறு அந்தப் பெரியார் இமாமவர்களின் உடலைக் குளிப்பாட்டினார்கள்.

இமாமவர்களுடைய உடல் ஜும்ஆ மஸ்ஜிதுக்குக் கொண்டு செல்லப்பட்டதும் முதல் தடவை நடத்தப்பட்ட ஜனாஸாத் தொழுகையில் ஐம்பதாயிரம் போர்கள் கலந்து கொண்டனர். பக்தாதுக்கு அருகாமையி லுள்ள ஊர்களிலிருந்தும் மக்கள் கூட்டம் வந்து குழுமவே, பல தடவை ஜனாஸாத் தொழுகை நடத்தப்பட்டது. அவர்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட பின்னரும் தொடர்ந்து இருபது நாட்கள் மக்கள் திரண்டு வந்து அவர்களின் அடக்கத்தலத்தை தரிசித்துச் சென்றனர்.

இமாம் அபூ ஹனீபாவின் பூத உடல் பக்தாதிலேயே ஆக்கிர மிக்கப்படாத இடம் என்று பெயர் பெற்ற கீஜ்ரான் என்ற இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. அன்றிலிருந்து இன்று வரை, இந்த மகா மேதையின் அடக்கத்தலம் உலக முஸ்லிம்கள் சென்று தரிசித்து வரும் புண்ணியத்தலமாக ஆகியுள்ளது. பின்னர் வந்த கலீபா அலப் அர்ஸலான் ஹிஜ்ரி 459ல் இமாமவர்களின் அடக்கத்தலத்தின் மீது

''குப்பா'' ஒன்றைக் கட்டினார். அத்துடன் கலாசாலை ஒன்றையும் நிர்மாணித்தார். பக்தாதில் முதன் முதலாக நிர்மாணிக்கப்பட்ட கலாசாலை இதுவாகவே விளங்கிற்று, ஏனெனில், நிஜாமுல் முல்க் கட்டிய நிஜாமிய்யாப் பல்கலைக் கழகம்கூட இதற்குப் பின்னர் நிறுவப்பட்டதாகும். இந்தக் கலாசாலை திறக்கப்பட்டபோது அந்த விழாவில் அபூ மஸ்ஊது என்பவர் பாடிய ஒரு பாடலின் ஓர் அடியில்.

'நீ அறியாயா
இங்கே தூங்கும் மகான் யாரென்று?
புழுதியில் விழுந்துகிடந்த கலாஞானத்தைச்
சீர்செய்து கைதூக்கிவிட்டவர் இவர்'

என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தக் கலாசாலை ''மஷ்ஹத் ஹனீபா'' என்ற பெயருடன் விளங்கிற்று. சிலகாலம் இது மிகவும் பிரபலமானதாகத் திகழ்ந்தது.

இமாமுல் அஃலம் காலமான சமயம் பல்வேறு நாடுகளிலும் பிரபலமான மார்க்க ஞானியர்கள் பலர் வாழ்ந்து கொண்டி ருந்தனர். இமாமவர்கள் காலமான செய்தி கேட்டு அவர்கள் யாவரும் அதிர்ச்சியடைந்து விட்டனர். அவர்களில் இமாமவர் களுக்குப் பாடபோதனை செய்த பெரியார்கள் கூடச் சிலர் இருந்தனர். இமாமவர்களின் ஆசிரியர்களுள் ஒருவரும், பஸராவின் இமாமுமான ஷஃபா அவர்கள் இச்செய்தி கேட்டதும், "கூபா இருண்டு போயிற்று" என்று கூறினார்கள். மக்காவில் பிரபலமான பெரியாராக இருந்த இப்னு ஜரீஹ் அவர்கள், "அல்லாஹ் மீது ஆணையாக, மாபெரும் ஆலிம் ஒருவர் நம்மை விட்டுப் போய்விட்டார்" என்றார்கள்.

"இமாமவர்கள் காலமானபின் அவர்களைக் கனவில் கண்டு, 'அல்லாஹ் உங்களை எவ்வாறு நடத்தினான்?' என்று நான் கேட்டேன். உடனே அவர்கள் மகிழ்ச்சியுடன், 'அல்லாஹ் என் பாவங்களை மன்னித்தான்' என்று கூறினார்கள்'' என்று ஜஃபரிப்னு ஹஸன் என்ற பெரியார் தெரிவிக்கிறார்கள்.

இமாமவர்களின் சந்ததியார்

இமாமவர்கள் இறக்கும்போது அவர்களுடைய புத்திரர் ஹம்மாது ஒருவரையன்றி வேறு புத்திரர்கள் யாருமிருக்கவில்லை.

பொதுவாகவே, அவர்களுக்கு வேறு புத்திரர்களோ, புத்திரியோ இல்லை என்றுதான் பல்வேறு நூலாசிரியர்களும் கூறுகிறார்கள். தமது குருநாதரின் பெயரைத் தம் புதல்வருக்கு வைத்திருந்த இமாமவர்கள் அவரைச் சிறந்த முறையில் வளர்ந்திருத்தார்கள். அவருக்கு 'பிஸ்மில்லாஹ்' தொடங்கும்போது அதைத் தொடங்கி வைத்த ஆசிரியருக்கு மட்டும் ஐநூறு திர்ஹம் அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். உயர்தரப் பாடங்களையெல்லாம் இமாமவர்களே தமது புத்திரருக்குப் போதித்தார்கள். ஹம்மாது நற்கலைகள் பலவும் கற்ற அறிஞராக விளங்கினார். இவர் தமது தந்தையார் இறந்ததும் அவர்களிடம் பலராலும் ஒப்படைக்கப் பட்டிருந்த அடைக்கலப் பொருள்களை எல்லாம் எடுத்துச் சென்று பக்தாதின் பிரதம காஜியான ஹஸன் பின் அம்மாரிடம் ஒப்படைத்து, அவற்றை அவரே உரிமைக்காரர்களிடம் சேர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டார். காஜி அவற்றை அவரையே வைத்திருக்கும்படி கூறியபோது கூட அதற்கு இணங்காமல் அவைகளைக் காஜியிடமே ஒப்படைத்து விட்டார் ஹம்மாது. ஆட்சியாளரோடு எந்தத் தொடர்பும் அற்றவராக வாழ்ந்திருந்து ஹிஜ்ரி 176ல் காலமானார்.

இமாம் அபூ ஹனீபாவின் புதல்வர் ஹம்மாதுக்கு நான்கு புதல்வர்கள் இருந்தனர். உமர், இஸ்மாயில், அபூ ஹய்யான், உதுமான் என்ற நால்வரில் இஸ்மாயில், மிகவும் பிரபலஸ்தராகிக் கலீபா மாமூனுர் ரஷீதின் ஆட்சியில் பக்தாதின் பிரதான காஜியாகவும் வேலை பார்த்திருக்கிறார்.

இன்று இமாமவர்களின் பரம்பரையாக உலகம் முழுவதும் பலகோடி முஸ்லிம்கள் உள்ளனர். இமாமவர்கள் வகுத்துத் தந்த மத்ஹபை ஏற்று அதை அடியொற்றி நடப்பவர்கள் யாவரும் அவர்களின் சந்ததியரே ஆவர்.

தோற்றமும் குண ஒழுக்கமும்

இமாமவர்கள் ஒல்லியான உடலும், நடுத்தரமான உயரமும் உடையவர்கள், தலை நிமிர்ந்த நடையுடையவர்கள். பாரசிகப் பரம்பரைக்கேற்ற எடுப்பான நாசியும், கவர்ச்சிகரமான முக வசீகரமும் பெற்றிருந்ததோடு, அறிவின் விசாலத்தைக் காட்டும் அகன்ற

நெற்றியையும், அதில் தகத்தக அற்புதமான ஒளியையும் உடையவர்களாகவும் விளங்கினார்கள்.

அவர்களோடு உரையாடுபவர்கள் அவர்களை விட்டுப் பிரிந்து போகவே விரும்பாதபடி இனிமையாகப் பேசுவார்கள்.

இமாமவர்கள் சதாவும் உயர்தரமான உடையே அணிவார்கள். சில சமயங்களில் ஓரங்களில் அருமையான பூ வேலைப்பாட்டுடன் கூடிய மெல்லிய துணியாலான சட்டையையும் அணிவார்கள். "ஒரு சமயம் அவர்கள், சுமார் நானூறு ரூபாய் மதிப்புள்ள ஒரு சால்வையைப் போர்த்திக் கொண்டிருந்ததை நான் பார்த்தேன்" என்று அவர்களுடைய மாணவர்களுள் ஒருவரான அபூ முதீர் கூறுகிறார். ஒரு சமயம் நஸ்ரூகான் முஹம்மது என்பவர் அவர்களைப் பார்க்கப் போனார். அப்போது அவர்கள் வெளியில் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவசரமாக காண வந்த நஸ்ரூ மேலே போட்டிருந்த போர்வையைக் கேட்டு வாங்கி மேலே போட்டு கொண்டு போனார்கள். பின்னர் திரும்பி வந்தபின், அது மிகவும் மட்டரகமான போர்வையாக இருப்பதாகக் கூறி, அதைத் திருப்பிக் கொடுத்தார்கள். அதை நஸ்ரூ பன்னிரண்டு ரூபாய்க்கு வாங்கியிருந்தார்கள். வேறொரு சமயம் இமாமவர்கள் எண்பது ரூபாய் மதிப்புள்ள போர்வையைப் போர்த்தி இருந்ததைத் தாம் பார்த்ததாகவும் இந்த நஸ்ரூ கூறுகிறார்.

கலீபா மன்சூர் அப்பாஸியா அவையைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகளுக்கென்று விலை உயர்ந்த விசேஷமான தொப்பி ஒன்றை அணியுமாறு உத்தரவிட்டிருந்தார். இமாமுல் அஃலமவர்கள் அதே தொப்பியைத் தாங்களும் வாங்கி அணிந்திருக்கிறார்கள். அதுகண்டு மற்ற உலமாக்களே திகைத்திருக்கின்றனர். இத்தகைய தொப்பிகள் அவர்கள். வீட்டில் ஒரே சமயத்தில் ஏழு எட்டு இருக்கும்.

தாங்கள் நல்லமுறையில் உடுத்துவதுடன், மற்றவர்களிலும் வசதி படைத்தவர்களை நல்லபடியாக உடைகள் வாங்கி உடுத்துமாறு அவர்கள் ஏவியிருக்கிறார்கள். ஒரு சமயம் இமாமவர்களைக் காணவந்தவர்களுள் வறியவராகத் தோற்றமளித்த ஒருவரும் இருந்தார். மற்றவர்கள் வெளியில் சென்றதும் இமாமவர்கள் அவரை அருகிலழைத்துத் தாங்கள் அமர்ந்திருந்த விரிப்பின் அடியிலிருந்து ஆயிரம் திர்ஹம் எடுத்து அவருக்குக் கொடுத்தார்கள். அந்த மனிதர்

திடுக்கிட்டவராக, "நான் போதிய அளவு செல்வம் படைத்தவன். எனக்கு இது தேவையில்லை, மன்னிக்க வேண்டும்" என்று கூறினார். அது கேட்ட இமாமவர்கள், "சகோதரரே, உங்கள் நல்ல நிலை கேட்டுப் பெரிதும் மகிழ்கிறேன், ஆனால், பிறர் உங்களைக் கண்டு ஏழை என்று ஐயுறும் வகையில் ஏன் கோலம் போடுகிறீர்கள்? உங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி நாணயமாக உடை உடுத்துங்கள்" என்று போதித்து அனுப்பினார்கள்.

இமாமவர்கள் எந்தக் காரியத்துக்கும் சத்தியம் செய்வதை வெறுத்தார்கள். ஆனால், தங்களை மறந்து, "சத்தியமாக!" என்று சொல்ல நேர்ந்தாலும், அதற்காக ஒரு திர்ஹம் (கால் ரூபாய்) அபராதம் கட்டிவந்தார்கள். இது அதிகரிக்கவே ஒரு சமயம், "இனி சத்தியம் செய்யத் தோன்றினால் ஒரு தீனார் (இரண்டரை ரூபாய்) அபராதம் கொடுப்பேன்" என்று தீர்மானித்து அதன்படி நடந்து வந்தார்கள்.

இமாமவர்கள் இனிய சுபாவமுடையவர்கள். பிற்காலத்தில் அவர்களைப் பற்றியும் கற்பனையான விஷயங்கள் பல கூறப் பட்டன. அவர்கள் நாற்பதாண்டுகள் இஷாவுக்கு செய்த ஒலுவைக் கொண்டே ஸுபுஹூத் தொழுகையையும் தொழுதார்கள், தொடர்ந்து முப்பதாண்டுகள் நோன்பு பிடித்தார்கள் என்பனவும் கூட அவ்விதம் கட்டி விடப்பட்டவைதாம். மேலும் ஒரு சமயம் கூபாவிலோடும் ஆற்றில் சந்தேகத்துக்கிடமான ஓர் இறைச்சித் துண்டு கிடப்பதைத் தின்றுதான் மீன்கள் ஜீவிக்கின்றன என்று கண்டு இமாமவர்கள் நீண்ட நாட்களாக மீன்கறியே உண்டதில்லையென்றும் ஒரு கதை சொல்லப்படுகிறது. இதுபோல் ஆட்டிறைச்சியிலும் ஒரு சமயம் அவர்களுக்கு ஐயமுண்டாகவே நீண்ட நாட்களாக ஆட்டிறைச்சியே சாப்பிடாம லிருந்தார்கள், மேலும் மாதத்தில் பத்தனா அளவுக்கே வீட்டுச் செலவு செய்தார்கள் என்றும் கூடக் கதைகளுண்டு.

இமாமவர்களின் குணாதிசயங்களைப்பற்றி ஒரு சமயம் கலீபா ஹாரூன் ரஷீது கேட்டபோது, அவருடைய பிரதான ஆலோசகராக இருந்த, இமாமவர்களின் தலையான சீடர்-அபூ யூஸுப் (ரஹ்) அவர்கள் சொன்ன பதிலாவது: "இமாமவர்கள் மிகவும் பேணுதலுடையவர்கள். ஆகாத கருமங்களை விட்டும் அப்பால் விலகிக்கொள்வார்கள். பெரும்பாலும் மௌனமாக இருப்பார்கள்.

ஆனால் சதாவும் சிந்தித்துக்கொண்டிருப்பார்கள். யாரேனும் ஒரு பிரச்சினைக்குப் பதில் கேட்டு வந்தால் அதற்கு மட்டும் பதிலளிப்பார்கள். ஒப்பற்ற கொடைவள்ளல்; யாரிடமும் எதையும் வேண்டாதவர்கள்; ஆட்சியாளர்களின் பட்டம் பதவிகளைத் துச்சமாக மதித்தவர்கள். யாரைப் பற்றியும் புறம் பேசியே அறியாதவர்கள். ஒருவர் இல்லாத இடத்தில் அவரைப் பற்றிப் பேச்சு வந்தால் அவரைக் கண்ணியப் படுத்தியே பேசுவார்கள். தங்கள் திரண்ட செல்வத்தை எல்லாம் தேவைப் பட்டோருக்கு அள்ளி வழங்கியதுபோல, மாபெரும் அறிவுப் பொக்கிஷமான அவர்கள் தமது அறிவுச் செல்வத்தையும் கேட்டோர்க் கெல்லாம் வாரி வழங்கினார்கள்."

இவ்விதம் இமாம் அபூ ஹனீபாவைப்பற்றி வருணிக்கக் கேட்ட கலீபா ஹாரூன் ரஷீது, "இவையே உத்தம சீலர் (ஸாலிஹீன்)களின் நற்பண்புகளாகும்" என்று கூறினார்.

இமாம் அபூஹனீபா மிகவும் சுயேச்சையான போக்குடைய வர்கள். அவர்கள் காலத்திய மார்க்க அறிஞர்கள் பெரும்பாலார் கலீபாவிடமிருந்தோ, அதிகாரிகளிடமிருந்தோ, செல்வர்களிட மிருந்தோ உபகாரச் சம்பளம் பெற்று வந்தனர். அதை அவர்கள் இழிவாகவும் கருதுவதில்லை. அதற்கு இமாமவர்கள் விதிவிலக்காக விளங்கினார் கள். அவர்கள் யாரிடமிருந்தும் உபகாரச் சம்பளத்தையோ, அன்பளிப்பையோ விரும்பியதுமில்லை, ஏற்றதுமில்லை. யாரிடமும் தயவு தாட்சண்யம் பாராட்டாது, தங்கள் மனத்தில் பட்ட உண்மையை எடுத்துக் கூறவும் அவர்கள் தயங்கியதில்லை.

கூபாவில் ஒரு சமயத்தில் கலீபாவின் நிர்வாக அதிகாரியாக இருந்த இப்னு ஹபீரா என்பவர் இமாமவர்களிடம் வந்து,"தாங்கள் என்னிடம் அடிக்கடி வந்து கொண்டிருந்தால், எனக்குப் பேருபகாரமாக இருக்குமே!" என்று கூறியபோது, "நான் உம்மிடம் வந்து என்ன செய்ய? நீர் தயவுகாட்டி என்னோடு பழகினால் உம் சொல்படி கேட்டு நடக்க நேருமோ என்ற அச்சம் எனக்குண்டு. அஃதேபோல் நீர் கடுமையாக நடந்து கொண்டால், எனக்கு அவமானமாகும். உம்மிடமுள்ள செல்வத்தில் எனக்கு விருப்பமில்லை. அதனால், நீர் கேட்டபடி நான் உம் இருப்பிடத்துக்கு வர இயலாதவனாக இருக்கிறேன்" என்று இமாமவர்கள் அவருக்குப் பதிலளித்துவிட்டார்கள்.

கூபாவின் நிர்வாக அதிகாரியாக இருந்த யஜீத் இப்னு உமரிடம் அவர்கள் நடந்துகொண்ட கண்டிப்பான முறையை முன்னரேயே நாம் பார்த்திருக்கிறோம்.

கலீபா மன்சூர் இமாமவர்களைக் கைது செய்ய உத்திரவிடு முன்னரே, அவர்களை அழைத்து ஒரு மார்க்கத் தீர்ப்புப்பெற நேரிட்டுள்ளது. அதாவது, அவருக்கும், அவர் ம னைவியான ஹுர்ரகாத்தூனுக்குமிடையில் தகராறு ஒன்று உண்டாகி இருந்தது. அதாவது, 'தம் கணவர் தம் விஷயத்தில் நீதியுடன் நடந்து கொள்ளவில்லை' என்பது அவர் மனைவியின் கட்சி. இதில் தீர்ப்பளிக்க இமாமவர்கள், கலீபாவின் மாளிகைக்குச் சென்றார்கள். ஹுர்ர காத்தூன் ஒரு திரைக்குப்பின் மறைந்திருந்து கொண்டார்.

உடனே கலீபா மன்சூர் இமாமவர்களிடம் கேட்டார், "இஸ்லாமியச் சட்டப்படி ஒருவன் எத்தனை பெண்களை மணக்கலாம்?" என்று. அதற்கு இமாமவர்கள், "நான்கு பெண் களை" என்று பதிலளித்தார்கள். இது கேட்ட கலீபா எக்களிப்போடு தம் மனைவியை நோக்கி , "கேட்டுக் கொண்டீரா!" என்றார். உடனே இமாமவர்கள், "நான்கு மனைவிகளையும் சம நீதியோடு வைத்துப் போஷிப்பவன் தான் நான்கு மனைவிகளை மணந்து கொள்ளலாம். அதற்குச் சாத்தியமற்றவன் ஒரே மனைவியோடு நிறுத்திக் கொள்ள வேண்டும். அதற்கதிமாக மணந்து, மனைவியரிடையே சம நீதி வழங்காதவன் நேர்மையாளனாக மாட்டான்" என்று கூறிவிட்டார்கள். இதைக் கேட்டதும் கலீபா மன்சூர் சோர்ந்து போனார். இமாமவர்கள் தாங்கள் தங்கியிருந்த இடத்தை அடைந்ததும், அங்கே பணியாள் ஒருவன் ஐம்பதாயிரம் திர்ஹங்கள் அடங்கிய பணப்பையொன்றை ஒரு தட்டில் வைத்து மூடிக் கொணர்ந்து இமாமவர்களிடம் சமர்ப்பித்து, "தங்கள் அடிமைப்பெண் (மன்சூரின் மனைவி) தங்களுக்கு சலாம் சொல்கிறார். தாங்கள் நியாயத்தைக் கூறியதற்காகத் தங்களுக்கு இந்த அன்பளிப்பைச் சமர்ப்பித்து, இதைத் தாங்கள் ஏற்றருள் வேணுமென்று மன்றாடுகிறார்" என்று தெரிவித்தான். உடனே இமாமவர்களுக்கு ஆத்திரம் உண்டாகி விட்டது. "இந்தப் பணத்துக்காக நான் தீர்ப்புக் கொடுக்கவில்லை. என் கடமையைத் தான் செய்தேன். இதை அந்த அம்மாளிடமே கொண்டுபோய்க் கொடுத்துவிடு" என்று திருப்பி அனுப்பி விட்டார்கள்.

இமாமவர்களின் வாழ்க்கையில் அவர்களுக்குப் பல கஷ்டங்கள் உண்டாகியுள்ளன. அதிகாரிகளால் சங்கடமுண்டாகியுள்ளது. ஆனால், இமாமவர்கள் மன உறுதி தளர்ந்ததே இல்லை. எதையும் பொறுமையுடன் சகித்துக் கொள்வார்கள். ஒரு சமயம் அவர்கள் கூபா ஜாமிஆ மஸ்ஜிதில் அமர்ந்து பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது, மேல் தளத்திலிருந்து பாம்பு ஒன்று இமாமவர்கள் மீது விழுந்து விட்டது. உடனே மாணவர்கள் பதறியடித்துக் கொண்டு வெளியில் ஓடினர். இமாமவர்களோ கொஞ்சம்கூட அசையவில்லை. அவர்கள் முகத்திலும் எந்த மாறுதலுமின்றி அமைதியோடு அமர்ந்திருந்தார்கள்.

ஆனால், தங்கள் விஷயத்தில் கஷ்டங்களைக் கண்டு புன்னகை பூக்கும் இயல்பு படைத்திருப்பினும், மற்றவர்களின் துயரைக் கண்டு அதைத் துடைக்க விரைந்து செல்வார்கள். மற்றொரு சமயம் அவர்கள் ஜாமிஆ மஸ்ஜிதில் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் சமயம் ஒருவர் ஓடிவந்து, 'இன்ன பெயருள்ள மனிதன் வீட்டு மேல்தளத்திலிருந்து கால் தவறிக் கீழே விழுந்து விட்டான்' என்றார். உடனே இமாமவர்கள் அங்கிருந்தவர்கள் எல்லாம் நடு நடுங்கும்படி ஒரு சப்தமிட்டு விட்டார்கள். காலில் பாதரட்சை கூடப் போடாது வெகு துரிதமாக அவன் வீட்டுக்கு விரைந்து சென்று அவனுக்குத் தேவையான உதவிகளை நல்கினார்கள். அவன் பூரண சுகமடையும்வரை தினமும் அவன் வீடு சென்று விசாரித்து வந்தார்கள்.

ஒரு சமயம் ஒருவன் இமாமவர்களிடம் வந்து, தன் வீட்டில் அவன் சில முக்கியமான பொருள்களைப் புதைத்து வைத்ததாக வும், இப்போது எந்த இடத்தில் அவற்றைப் புதைத்தது என்பது பற்றித் தனக்கு நினைவுக்கு வரவில்லை என்றும், என்ன செய்வதென்று தெரியவில்லை என்றும் கூறி வருந்தினான். "புதைத்து வைத்தது உனக்கே தெரியாவிட்டால் எனக்குத் தெரிவது எப்படி?" என்று அவர்கள் கேட்டார்கள். அவனோ அழவே ஆரம்பித்து விட்டான். அது கண்டு மனம் பொறாத இமாமவர்கள் அவனை அழைத்துக் கொண்டு அவன் வீடு சென்றார்கள். அங்கே சென்றதும் அவனை நோக்கி, "நீ இப்போது ஏதாவது ஒரு முக்கியமான பொருளை மறைத்து வைக்கப்போகிறாய் என்று வைத்துக்கொள். அதற்குத் தகுந்த இடம் என்று எதைத் தேர்ந்தெடுப்பாய்?" என்று வினவினார்கள். அவன் ஓர் இடத்தைச்

சுட்டிக்காட்டினான். அங்கே தோண்டிப் பார்த்தால் அவன் புதைத்து வைத்த பொருள்கள் அவ்விடத்தில் இருந்தன!

இதுபோன்றே இன்னொரு சமயம் ஒரு நபர் இமாமவர்களிடம் வந்து, தான் வெகு கஷ்டப்பட்டுத் தேடிய சொற்பத்திரவியத்தை எங்கோ வைத்து விட்டதாகவும், வைத்த இடம் நினைவுக்கு வரவில்லை என்றும், தனக்கு மறுநாள் மிகவும் முக்கியமான செலவு இருப்பதால் என்ன செய்வதென்று தெரியவில்லை என்றும் முறையிட்டான். இது கேட்ட இமாமவர்கள் அவனை நோக்கி "சகோதரா, இது ஃபிக்ஹு சம்பந்தப்பட்ட பிரச்சினையல்லவே! நான் உனக்கு எப்படி உதவப் போகிறேன்?" என்று கூறிய வர்களாக, "நான் சொன்னபடி செய், இன்று இரவு முழுவதும் தொழுது 'கொண்டிரு!" என்று கூறி அனுப்பினார்கள். அவ்வாறே அவனும் போய்த் தொழத் தொடங்கவே சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுக்குத் தான் பணம் வைத்த இடம் நினைவுக்கு வந்து விட்டது. உடனே அதைத் தேடி எடுத்துக் கொண்டு இமாமவர்களிடம் வந்து அதைத் தெரிவித்தான். இது கேட்ட இமாமவர்கள், "நீ இரவு முழுவதும் தொழுது கொண்டிருப்பதை விரும்பாத ஷைத்தான் உடனே அதை உன் நினைவுக்குக் கொண்டு வந்துவிட்டான். எனவே, அல்லாஹ்வுக்கு நன்றி காட்டுவதற்காக இன்று இரவு முழுவதும் தொழுது கொண்டிரு!" என்று கூறி அனுப்பினார்கள்.

இமாமவர்கள் வீட்டுக்குப் பக்கமாகச் செருப்புத் தைப்பவர் ஒருவர் குடியிருந்தார். அவர் வெகு உல்லாசமாகப் பொழுது போக்குவார்; பகலெல்லாம் செருப்புத் தைப்பார்; அதனால் கிடைக்கும் பணத்துக்கு மதுவும், மாமிசமும் வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வருவார். நண்பர்களையும் அழைப்பார்; இரவு முழுவதும் குடித்துவிட்டுக் கும்மாளம் போடுவார். குடிபோதையில்

"ஊர் மக்கள் என்னை இழந்துவிட்டார்கள்!
அந்தோ, எத்தகைய பெரிய மனிதனைத் தெரியுமா?
கோட்டைச் சுவர்கள் இடித்திட போரிடப்படும் நாளிலே
தன் ஒப்பற்ற தோள் வலிமையைத் காட்டக்கூடிய
ஒரு மாவீரனையல்லவா இழந்துவிட்டார்கள்!"

என்ற கருத்துள்ள பாடல் ஒன்றை அவர் பாடுவதுண்டு. அவர் இவ்விதம் கூத்தடிப்பதால், சமீபத்திலிருந்த இமாமவர்களுக்குப் பெருத்த

சங்கடமாக இருந்தது. இமாமவர்கள் செய்யும் வணக்கங்களுக்கு இடைஞ்சலாகவுமிருந்தது. ஆயினும், பொறுமையுடனே இருந்து விடுவார்கள்.

ஒரு நாள் அவர் நடத்தும் கேளிக்கையைக் கண்ட நகரக் காவலாளிகள் அவரைப் பிடித்துப் போய்ச் சிறையில் போட்டு விட்டனர். இதை அறியாத இமாமவர்கள் மறு நாள் இரவு அவருடைய ஆரவாரங்கள் கேட்காது போகவே, அதுபற்றி விசாரித்தார்கள். அவர் சிறைப்பட்டிருப்பதை அறிந்தார்கள். உடனே அவர்கள் சபை செல்வதற்கான உடையை உடுத்துக் கொண்டு தங்கள் குதிரை மீதிலமர்ந்து கலீபாவின் கூபாப் பிரதிநிதியுடைய அவையை நோக்கிச் சென்றார்கள். அப்போது அப்பாஸியாக்களின் இரண்டாவது கலீபாவான மன்சூருடைய சகோதரர் மகன் ஈஸா இப்னு மூஸா கூபாவில் பிரதிநிதியாக இருந்து வந்தார். இவர் இமாமவர்களின் பெருமையை நன்கு அறிந்தவர். இமாமவர்கள் தமது அவைக்கு வருகிறார்கள் என்று கண்டதுமே, அவர்களை வரவேற்று மரியாதையோடு அழைத்துவருமாறு உயர்தர அதிகாரிகளை ஏவினார். இமாமவர்கள் உள்ளே நுழைந்ததும், எழுந்து எதிர் கொண்டழைத்து இருக்கையிலமர்த்தினார். "நீங்கள் இவ்வளவு கஷ்டப்பட்டு வரவேண்டுமா? எனக்குச் சொல்லியனுப்பியிருந்தால் நானே வந்து தங்கள் உத்தரவை ஏற்றிருப்பேனே!" என்று பணிவுடன் கூறினார். இமாமவர்கள் தமது அண்டை வீட்டார் சிறையிலிருப்ப தாகவும், அவரை விடுதலை செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்கள். உடனேயே அவரை விடுதலை செய்யும்படி அவர் உத்தரவிட்டார்.

இமாமவர்கள் அவருடைய சபையை விட்டு வெளியில் வந்ததுமே, அவர்களின் அண்டை வீட்டாரான செருப்புத் தைப்பவரும் விடுதலை செய்யப்பட்டு அவர்களைக் காண வந்தார். அவர்களோடு நடந்து சென்றவாறே இமாமவர்களுக்கு நன்றி தெரிவித்தார். "மக்கள் என்னை இழந்து விட்டனர்" என்ற உல்லாசப் பாடலை எண்ணிய வர்களாக இமாமவர்கள், "நண்பா, உன்னை நான் மட்டும் இழந்து விடவில்லையே!" என்று கேட்டார்கள். "இல்லை, அத்துடன் என்னை காப்பாற்றவும் செய்தீர்கள்" என்றார் அவர். அன்றோடு அவர் தமது

கேளிக்கைகளையெல்லாம் கைவிட்டு விட்டுத் தமது பாவங்களுக்காக மன்னிப்புக் கேட்டவராக இமாமவர்களின் காலடியில் வந்து அமர்ந்து விட்டார். பின்னர், அவரும் 'ஃபிக்ஹு' நன்கு அறிந்த அறிவாளியாகி விட்டார் என்று சொல்லப்படுகிறது.

அற்புதமான நாவன்மை படைத்த இமாமவர்கள் எந்தச் சிக்கலான பிரச்சினையையும் வெகு தெளிவாக, இனிமையாக விளக்கிவைக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்கள். ஆனால், சாதாரணமாக அவர்கள் அதிகம் பேசுவதே இல்லை. தங்கள் வகுப்புகளில் கூட ஃபிக்ஹு சம்பந்தப்பட்ட ஏதேனும் பிரச்சினைகளில் மாணவர்கள். வாதப்பிரதிவாதங்கள் நிகழ்த்தும்போது, அதை மௌனமாக இருந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள். வாதங்கள் சிக்கலாகி, நிவர்த்தி தேவைப் பட்டால்தான் வெகு சுருக்கமாக, ஆனால், மிகத் தெளிவாகப் பிரச்சினையை விளக்குவார்கள்.

"நான் யாரையும் சபித்ததில்லை; யார் மீதும் பழிக்குப் பழி வாங்கியதுமில்லை; எந்த முஸ்லிமையோ முஸ்லிமல்லா தாரையோ துன்புறுத்தியதுமில்லை; யாரையும் ஏமாற்றியது மில்லை; சொன்ன சொல் தவறியதுமில்லை" என்று இமாமவர்கள் அடிக்கடி கூறுவ துண்டு. "பிறரைப் பற்றிப் புறம் பேசாத நாவை எனக்களித்த இறைவனுக்கு நான் எல்லையற்ற நன்றி செலுத்துகிறேன்" என்றும் இமாமவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு. ஒருவன் இமாமவர்களிடம் வந்து, "உங்கள் பொறுமையைப்பற்றி எவரும் சிறப்பித்துப் பேசக் காணோமே! இருந்தும்கூட நீங்கள் யாரைப் பற்றியும் குறை கூறாமலிருக்கிறீர்களே!" என்று கூறினான். "அந்த மகத்தான அருளை அல்லாஹ், தான் நாடியவர்களுக்கே அருளுவான்" என்ற கருத்துள்ள திருக்குர்ஆன் வசனத்தை இமாமவர்கள் ஓதிக்காட்டினார்கள்.

இமாமவர்கள் காலத்திலேயே வாழ்ந்த பெரியார் சுப்யானுத் தௌரி அவர்கள் இமாமவர்களுடன் பல பிரச்சினைகள் சம்பந்தமாக அபிப்பிராயபேதம் கொண்டிருந்தார்கள். இருப்பினும் இருவரும் ஒருவர்மீதொருவர் குறை கூறிக் கொண்டதில்லை. இந்த அபிப்பிராய பேதத்தை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு ஒருவன் இமாமர்களிடம் வந்து, "உங்களைப்பற்றி சுப்யான் தவறான பேச்சுப் பேசுகிறார்" என்று கூறினான். உடனே இமாமவர்கள் இடைமறித்து, "எங்கள் இருவரை

யும் அல்லாஹ் மன்னிப்பானாக! உண்மை என்னவென்றால், (ஃபிக்ஹுப் பாடத்தை வளர்த்துத்தந்த) இப்ராஹீம் நக்யியே உயிரோடு வாழ்ந்திருந்து, சுப்யான் காலமாகியிருப்பினும், முஸ்லிம் உலகம் இந்த நஷ்டத்தால் ஆற்றொனாத் துயரத்திலேயே அமிழ்ந்துவிடும்" என்று அறிவித்தார்கள்.

"அபூ ஹனீபா யாரைப் பற்றியும் புறம் பேசியதாக நான் கேள்விப்பட்டதே இல்லை" என்று ஒருவர் சுப்யானுத் தௌரியிடம் கூறினார். அதற்கு அவர்கள், "தன்னுடைய மெய் வணக்கங்களையே பாழ்படுத்தும் அறியாமையுடையவர் என்ற அவர்களை எண்ணினீர்!" என சுப்யானுத் தௌரி பதிலளித்து விட்டார்கள்.

இமாமவர்களுடைய பணிவும், மன்னிக்கும் இயல்பும் உன்னத மானவைகளாக இருந்திருக்கின்றன. ஒரு சமயம் அவர்கள் தங்கள் மாணவர்களும், நண்பர்களும் கூடிய சபையிலிருக்கும்போது ஒருவர் அவர்களிடம் வந்து, ஒரு பிரச்சினைக்கு விளக்கம் வேண்டினார். அதற்குத் தகுந்த பதிலை இமாமவர்கள் கூறினார்கள். வந்தவரோ, "இமாம் ஹஸன் பஸரி இதற்கு வேறு விதமாக விளக்கம் சொன்னார்களே!" என்று கூறினார். "ஹஸன் பஸரி தவறுதலாகச் சொல்லியிருக்கலாம்" என்று இமாமவர்கள் பதிலளித்தார்கள். அந்தச் சபையில் ஹஸன் பஸரியின் சீடர் ஒருவர் இருந்தார். அவருக்கு இந்தப் பதில் மிகுந்த ஆத்திரத்தை உண்டாக்கிவிட்டது. அவர் கோபத்தோடு எழுந்து நின்று "வேசி மகனே, ஹஸன் பஸரியையா தவறிழைத் தார்கள் என்கிறாய்!" என்று இமாமவர்களைத் திட்டலானார். உடனேயே இமாமவர்களுடைய மாணவர்களுக்கும் ஆத்திரம் உண்டாகி, அவரை அடிக்கவும் தயராகிவிட்டார்கள். ஆனால், இமாமவர்கள் யாவரையும் கையமர்த்தி, அந்த மனிதனை அருகில் அழைத்து, "இந்த விஷயத்தில் ஹஸன் பஸரி தவறு செய்து விட்டது உண்மைதான்" என்று சாந்தமாகக் கூறினார்கள். அதற்கு ஆதாரமாக அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது (ரலி) அவர்கள் தெரிவித்துள்ள ஹதீஸை மேற்கோளாகக் காட்டினார்கள். அந்த மனிதர் தம் தவறை உணர்ந்து இமாமவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

ஒரு சமயம் போக்கிரியொருவன் இமாமவர்களிடம் வந்து அவர்களைக் கேவலமாகப் பேசலானான், "நீ ஒரு பொய்யன்"

என்றான். இமாமவர்கள் அவன் திட்டியதையெல்லாம் சாந்தமாகக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டு, "அல்லாஹ்வே உம்மை மன்னிக்க வேண்டும், நீர் சொல்வது முற்றும் தவறு என்பதை அவனே நன்கறிவான்" என்று சொன்னதோடு மௌனமாகி விட்டார்கள்.

இமாமவர்கள் மஸ்ஜிதிலமர்ந்து பாடம் நடத்திக் கொண்டிருந்த சமயம் ஒருவன் வந்து அவர்களைக் கீழ்த்தரமாகத் திட்டலானான். ஆனால், இமாமவர்கள் அவன் பக்கம் திரும்பவே இல்லை. மேலும், அவன் பக்கம் திரும்ப வேண்டாமென்று மாணவர்களிடமும் சொல்லி விட்டார்கள். அவர்கள் வகுப்பை முடித்துக்கொண்டு வீடு செல்லும்போது அவன் தொடர்ந்து அவர்களைத் திட்டிக் கொண்டே பின்னால் சென்றான். இமாமவர்கள் தங்கள் வீட்டினருகில் வந்ததும், அவன் "சகோதரா, இதுதான் என் வீடு! இதோ நான் உள்ளே போகப் போகிறேன். எனவே, நீ இன்னும் ஏதேனும் திட்ட வேண்டியது பாக்கியிருந்தால் தெரிவித்துவிடு. அது முடியும் வரை வெளியில் நிற்கிறேன்" என்றார்கள். உடனே அவன் மிகுந்த ஏமாற்றத்தோடு தன் வழியே திரும்பிவிட்டான்.

வேறொரு சமயம், இமாமவர்கள் பாடம் நடத்திக் கொண்டிருக்கும்போது, வாலிபனொருவன் அவர்களிடம் வந்து ஒரு பிரச்சினைக்கு விளக்கம் கேட்டான். அதற்கு இமாமவர்கள் விளக்கம் கூறினார்கள். உடனே அவன் அவர்கள் சொல்வது தவறு என்றான். அந்தச் சமயம் அங்கே அமர்ந்திருந்த அபுல் கிதாப் ஜுர்ஜானி என்பவர், "என்ன இது? சிறுவன் ஒருவன் நமது இமாமவர்களை மதியாமல் பேசுகிறானே! பார்த்துக்கொண்டிருக்கிறீர்களே!" என்றார். இமாமவர்கள் அவரைக் கையமர்த்தி, "என் தீர்ப்பைப் பற்றி பொதுமக்கள் தங்கள் அபிப்பிராயத்தைக் கூறி அதை நான் பொறுமையோடு கேட்டுத் தவறிருந்தால் திருத்திக்கொள்ளவேண்டும் என்றுதானே நான் இங்கே அமர்ந்திருக்கிறேன்" என்று சமாதானம் கூறினார்கள்.

வர்த்தக வேந்தர்

இமாமவர்கள் லட்சக்கணக்கில் பொருளீட்டிய வணிகர், வணிக பரம்பரையிலுதித்தவர்கள் என்று முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். தங்களுடைய மார்க்க சேவை, பாடபோதனை, இடையறாத வணக்கம்

ஆகியவற்றிடையே ஆகுமான முறையில் ஜவுளி வர்த்தகத்தையும் செய்து வந்தார்கள். தங்களுக்குப் புதிய புதிய ஜவுளிகளை எடுத்து அனுப்பவும், தாங்கள் அனுப்புவதை விற்கவும் பல்வேறு நகர்களிலும் அவர்கள் வர்த்தகர்கள் பலரைத் தங்கள் பிரதிநிதிகளாக நியமித்திருந்தார்கள். நேர்மையாளரான சிப்பந்திகளை வைத்து வர்த்தகத்தைக் கவனித் தார்கள். அதில் நேர்மையும் சத்தியமும் தவறாது நடந்து கொண்டார்கள். ஆகாத வழியில் ஒரு காசும் தங்கள் பணப் பெட்டியில் புகுந்து விடாதபடி பேணிக் கொண்டார்கள். இதனால், சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்குப் பெருத்த நஷ்டமும் உண்டான துண்டு. ஆனால், அது பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. ஒரு சமயம் அவர்களுடைய பிரதிநிதிகளுள் ஒருவரான ஹப்ஸு பின் அப்துர் ரஹ்மான் என்பவருக்கு உயரிய வகைத் துணிகள் பலவற்றை அனுப்பினார்கள். அவற்றில் இன்னின்ன துணிகளில், இன்னின்ன பழுதுகள் உள்ளன என்று குறிப்பிட்டு, துணி வாங்குபவர்களிடம் அந்தப் பழுதுகளைத் தெரியப்படுத்தியே விற்கவேண்டும் என்றும் கடிதம் எழுதினார்கள். ஆனால், வர்த்தகச் சந்தடியில் இமாமவர்கள் கூறியிருந்தபடி எவை எவை பழுதுள்ள துணிகள் என்று கவனித்து எடுக்க முடியவில்லை. அவர்கள் அனுப்பிய துணிகள் யாவும் விரைவில் நல்ல லாபத்துக்கு விற்றுப்போயின. இமாமவர்கள் கைக்குப் பணம் வந்தபோது, அந்தப் பழுதுகள் தெரிவிக்கப்பட்டுத் துணிகள் விற்கப்பட்டனவா என வினவினார்கள்; ஹப்ஸு வியாபார நெருக்கடியில் அதை மறந்துபோனார் என்று தெரிவிக்கப்பட்டது. அப்படியானால், குறிப்பிட்ட பழுதுள்ள துணிகளை வாங்கியவர்கள் யார் என்றாவது கண்டுபிடித்து அவர்களிடம் பணத்தை ஒப்படைக்க முடியுமா என்று விசாரித்தார்கள். அதுவும் இயலாது என்று அறிந்த உடன் அந்தத் தடவை விற்றுவந்த முப்பதாயிரம் திர்ஹங்களையும் தானதருமம் செய்துவிட்டார்கள்.

இன்னொரு சமயம் முதிய பெண்மணியொருத்தி சில பட்டுத் துணிகளை இமாமவர்களிடம் கொண்டு வந்து கொடுத்து விற்றுத் தருமாறு கேட்டாள். "இவை என்ன விலை பெறும்?" என்று இமாமவர்கள் கேட்டார்கள், உண்மையில் அவற்றின் மதிப்பை அறியாத அந்த அப்பெண்மணி அவை சுமார் நூறு ரூபாய் பெறலாம் என்று தெரிவித்தாள். "அது மிகவும் குறைந்த விலையாயிற்றே!"

என்று இமாமவர்கள் கூறினார்கள். “அப்படியானால் இருநூறு ரூபாய் இருக்கலாம்” என்று அவள் சொன்னாள். “இல்லை, ஐநூறு ரூபாய் மதிப்புள்ள துணிகள் இவை” என்று இமாமவர்கள் கூறியபோது, அவர்கள் தன்னைக் கேலி செய்கிறார்களோ என்றுகூட அந்த அப்பெண்மணிக்குச் சந்தேகம் வந்துவிட்டது. உடனே இமாமவர்கள் ஐநூறு ரூபாய்களை அந்த அப்பெண்மணியிடம் கொடுத்துவிட்டு அந்தத் துணிகளைத் தாங்களே வாங்கிக் கொண்டார்கள்.

வள்ளல்

இமாமவர்கள் செல்வத்தில் கிடந்து புரள வேண்டும் என்பதற்காக வாணிபம் செய்து பணம் திரட்டவில்லை. பொதுமக்களுக்கு அதன் மூலம் தங்களாலான சகல உதவிகளையும் செய்யவேண்டும் என்பதே அவர்களுடைய குறிக்கோளாக இருந்தது. தமது நண்பர்களில் ஏழையானவர்களுக்கு அவ்வப்போது அவர்கள் பொருளுதவி செய்து வந்தார்கள். மார்க்கப் பெரியார்களுக்கென்று தங்கள் வர்த்தக லாபத்தில் ஒரு பகுதியையே ஒதுக்கி வைத்து வழங்கி வந்தார்கள். அவர்கள் தங்கள் வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கக் கடை வீதிக்குப் போனால், தங்களுக்குத் தெரிந்த ஆலிம்களுக்குத் தேவையான சாமான்களையும் வாங்கி அவர்களுக்கு அனுப்பி வைப்பார்கள். தங்களைக் காண வருபவர்களில் பொருளுதவி வேண்டுபவர்களுக்கு அவர்களுடைய தகுதிக்குத் தக்கவாறு உதவியுள்ளார்கள்.

தங்களிடம் பயிலவரும் ஏழை மாணவர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் அவர்களே செய்து கொடுப்பதுடன், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் இமாமவர்கள் பண உதவி செய்வதுண்டு. இவ்விதம் இமாமவர்களிடம் கல்வி பெற்ற பலர் பின்னர் மாபெரும் மேதைகளாகவும் ஆகியுள்ளனர். இமாம் அபூஹனீபாவின் பிரதான சீடரும், அவர்களுக்கு அடுத்தபடியாக ஹனபீ மத்ஹபின் பெரிய இமாம்களான இருவரில் ஒருவரும், கலீபா ஹாரூன் ரஷீதின் சட்ட ஆலோசகராக இருந்தவர்களுமான காஜி அபூ யூஸுப் (ரஹ்) அவர்கள் கல்வி பயில வழியற்ற பரம ஏழையாக இருந்து, இமாமவர்களின் உதவி கொண்டு கல்வி பெற்றவர்கள் தாம்.

(இமாமவர்கள் எத்தனையோ ஏழை மாணவர்களுக்குப் பொருளுதவியும், மற்றும் தேவையான நல்லாதரவும் நல்கியுள்ளார்களெனினும், சிபாரிசுக் கடிதம் வழங்க மட்டும் கண்டிப்பாக மறுத்து வந்துள்ளார்கள். ஒரு சமயம் மாணவர் ஒருவர் இமாமவர்களிடம் வந்து, “நான் இன்ன ஆசிரியரிடம் சென்று கல்வி பயில நாடியுள்ளேன். அதற்காக எனக்கொரு சிபாரிசுக் கடிதம் தரவேண்டும்” என்று வேண்டினார். அதற்கு இமாமவர்கள், “கல்வி போதிக்கும் நற்காரியங்களுக்கெல்லாம் யாருடைய சிபாரிசும் தேவை இல்லை. எந்த ஆலிமும் தம்மிடமுள்ள கலாஞானத்தைப் பிறருக்குப் போதிக்காமல் மறைத்து வைக்க மாட்டார். கல்வி போதிக்கும் விஷயத்தில் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு கிடையாது? எனவே, எந்த ஆலிமுக்கும் நான் சிபாரிசு செய்யத் தேவையில்லை” என்று பதிலளித்து விட்டார்கள்.)

ஒரு சமயம் இமாமவர்கள் நோயாளியொருவரைப் பார்த்து வருவதற்காகத் தெருவோடு போய்க்கொண்டிருந்தார்கள். அச்சமயம் இமாமவர்களிடம் கடன் வாங்கியிருந்த ஒருவர், இமாமவர்கள் வருவதைக் கண்டு, தலைமறைவாகி விடுவதற்காகப் பக்கத்திலிருந்த சந்தில் நுழைந்தார். அதைக் கவனித்துவிட்ட இமாமவர்கள், அவரைப் பெயர் சொல்லி நிறுத்தி, அவரிடம் சென்று, “என்னைக் கண்டதும் நீங்கள் ஒளிய வேண்டிய காரணமென்ன?” என்று வினவினார்கள். “உங்களுக்கு நான் பத்தாயிரம் திர்ஹம் கடன் தரவேண்டுமல்லவா! அதை இன்னும் என்னால் திருப்பித் தர இயலவில்லை. எனவே, உங்கள்முன் வர நான் வெட்கப்பட்டுத் தலைமறைவாகப் போய்விட முயன்றேன்” என்று அவர் கூறினார். அது கேட்ட இமாமவர்கள், அவருடைய தன்மானத்தைப் பாராட்டி, “அந்தக் கடனை நான் வஜாச் செய்துவிட்டேன். இனி நீங்கள் அதை எனக்குத் தரவேண்டியதில்லை. என்னைக் கண்டு நாணப்படவும் தேவையில்லை” என்று ஆறுதல் சொல்லி அனுப்பினார்கள்.

வேறொரு சமயம் இமாமவர்கள் ஹஜ்ஜுக்குச் சென்றிருந்தபோது அப்துல்லாஹ் ஸஹ்மி என்பவரும் அவர்களோடு போயிருந்தார். வழியில் ஓரிடத்தில் தங்கியிருந்த சமயம், காட்டரபியொருவன் இந்த

அப்துல்லாஹ்வை இமாமவர்களிடம் இழுத்து வந்து, "இவர் எனக்குக் கடன் தரவேண்டியதுள்ளது. அதைத் தாங்கள் வாங்கித் தரவேண்டும்" என்று கேட்டான். இமாமவர்கள் அப்துல்லாஹ்விடம் வினவியதற்கு, தாம் அவனிடம் கடனே வாங்கியதில்லை என்று அவர் கூறினார். இமாமவர்கள் அந்தக் காட்டரபியை நோக்கி, "உமக்கு இவர் எவ்வளவு பணம் தரவேண்டும்?" என்று வினவவே, அவன் "நாற்பது திர்ஹம்" என்றான். உடனே இமாமவர்கள், "இந்த அற்பத் தொகைக்காகவா இந்தச் சண்டை? இதோ நாற்பது திர்ஹம், எடுத்துக்கொண்டு போ!" என்று கூறி அவனுக்குப் பணங்கொடுத்து அனுப்பிவிட்டார்கள்.

இன்னொரு சமயம் இப்ராஹிம் பின் அத்பா என்பவர் நான்காயிரம் திர்ஹம் கடன்பட்டு அவரால் அதை அடைக்க முடியாத நிலையுண்டாகிவிட்டது. இதனால், அவர் வெளியில் செல்வதையே நிறுத்திவிட்டார். அவருடைய நிலையைக் கண்டு மனமிரங்கிய அவருடைய நண்பர்கள் சிலர், பலரிடமும் சென்று பணம் வசூல் செய்து அவருடைய கடனை அடைத்துவிட் முடிவுசெய்தனர். அவர்கள் முதலில் இமாம் அபூ ஹனீபாவிடமே சென்றனர். இமாமவர்கள் அவருடைய கடன் தொகை எவ்வளவு என்று வினவினார்கள். நான்காயிரம் திர்ஹம் என்று கூறப்பட்டதும், "இவ்வளவு சிறிய தொகைக்காகவா பலருக்கும் சிரமம் கொடுக்கப்போகிறீர்கள்? இந்த நான்காயிரம் திர்ஹத்தையும் நானே கொடுத்துவிடுகிறேன்" என்று கூறி அந்தத் தொகையை அவர்களே கொடுத்தனுப்பிவிட்டார்கள்.

இப்படியெல்லாம் அவர்கள் தருமத்துக்காக அள்ளி வழங்கினாலும், அனாவசியச் செலவுகளுக்காகத் தங்கள் பொருளை அவர்கள் பயன்படுத்தியதில்லை. ஒரு சமயம் மஸ்ஜிது கட்டவேண்டும் என்று சிலர் இமாமவர்களிடம் பொருளுதவி தேடி வந்தனர். இமாமவர்கள், "என் பொருள் கல்லுக்கும், சுண்ணாம்புக்கும் வீணே செலவாவதை நான் விரும்பவில்லை. அது ஆகுமான வழியில் சேர்ந்தது" என்று கூறிவிட்டார்கள். ஆனால், வந்தவர்கள் தாங்கள் 'அல்லாஹ்வின் வீடான' மஸ்ஜிதுதான் கட்டப்போவதாக மீண்டும் விளக்கினார்கள் அதுகேட்ட இமாமவர்கள் அவர்களை நோக்கிச்

சொன்னார்கள்; "ஏற்கனவேயுள்ள மஸ்ஜிதுகளில் தொழுவதற்கு ஆட்களைக் காணோம். அந்த நிலையில் இன்னொரு மஸ்ஜிது கட்டுவதென்பது வீண் பொருள் விரயமாகும். மேலும், ஏற்கனவே கட்டப்பட்ட மஸ்ஜிதுகளில் பல இன்று கவனிப்பாரற்றுப் பாழாகி வருகின்றன. அவற்றை ஒழுங்காகப் பராமரிப்பதை விடுத்து, இப்படி மேலும் கட்டிடங்கள் கட்டி, இருளடைய நான் விரும்பவில்லை" என்று கூறக் கேட்டதும் வசூலுக்கு வந்தவர்கள் மௌனமாக வெளியேறி விட்டார்கள்.

இதுபோன்றே பொதுச் சொத்துக்களில் இம்மியும் தங்களால் வீண் விரயமாகக் கூடாது என்பதில் இமாமவர்கள் அளவுக்கு அதிகமான எச்சரிக்கையுடனிருந்து வந்தார்கள். பல்லாயிரக் கணக்கானவர்கள் அவர்களால் பயனடைந்துள்ளனர். எத்தனையோ பேர் அவர்களிடம் தங்கள் பொருள்களைக் கொண்டுவந்து கொடுத்து, அடைக்கலமாக வைத்திருக்குமாறு கேட்டுள்ளனர். அவற்றின் விஷயத்தில் அவர்கள் மிக மிக எச்சரிக்கையாக இருந்து, தங்கள் மீது சிறு தவறும் உண்டாகாதவாறு நடந்துகொண்டார்கள். பொதுச் சொத்து விஷயத்தில் அவர்கள் எவ்வளவு விழிப்புடன் நடந்து கொண்டார்கள் என்பதை விளக்க ஓர் உதாரணம் மட்டும் தரலாம்;

ஒரு நாள் இரவில் மஸ்ஜிதிலமர்ந்து அவர்கள் ஓதிக் கொண்டிருந் தார்கள். அவர்கள்முன் விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது. அச்சமயம் நண்பர் ஒருவர் அவர்களைக் கண்டு பேச வந்தார். அவர் சாதாரணமாக அவர்களோடு அளவளாவத் தொடங்கிய உடன், இமாமவர்கள் தங்கள் முன் எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டுப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஏன் அவர்கள் அவ்விதம் விளக்கை அணைக்க வேண்டும் என்று அவர்களுடைய நண்பர் வினவியபோது, "இந்த விளக்கும், இதிலுள்ள எண்ணையும் மஸ்ஜிதைச் சேர்ந்தவை. இவற்றை-இந்தப் பொதுச் சொத்தை-நாம் நம்முடைய சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்தக்கூடாதல்லவா! அதனால்தான் விளக்கை அணைத்து விட்டேன்" என்று இமாமவர்கள் பதிலளித்தார்கள்.

அன்றாட வேலையும், வணக்கங்களும்

இமாமவர்கள் தினமும் அதிகாலையில் எழுந்து சுப்ஹுத் தொழுகைக்கு மஸ்ஜிதுக்குப் போய்விடுவார்கள். சுப்ஹுத் தொழுகை முடிந்ததும், அங்கேயே அமர்ந்து பல்வேறு பாடங்களையும் நடத்துவார்கள். பின்னர் வெளியூர்களிலிருந்து வரும் 'ஃபிக்ஹு மஸ்அலா' தொகுக்கும் வேலை நடைபெறும். பிறகு லுஹர் தொழுகையை முடித்துக் கொண்டு வீடு போவார்கள். வெயிற் காலமாயின், இச்சமயம் சற்று தூங்கி எழுவதுண்டு. அது முதல் அசர் தொழுகை வரை வர்த்தக விவகாரங்களைக் கவனிப்பார்கள். அசர் தொழுகைக்குப் பின் நண்பர்களைக் காணவோ, நோயாளிகளைப் பார்க்கவோ போக வேண்டிய திருப்பின் செல்வார்கள். மக்ரிபுக்குப்பின் மீண்டும் இஷா வரை பாட போதனை நடைபெறும். இஷாவுக்குப் பின் நீண்ட நேரம் விழித்திருந்து வணங்குவார்கள். குளிர் காலங்களில் மக்ரிபுக்குப் பின்னர் மஸ்ஜிதிலேயே சிறிது நேரம் தூங்கிவிட்டுப் பத்து மணி சுமாருக்கு இரவு வணக்கத்துக்காக எழுந்து விடுவார்கள். 'தஹஜ்ஜுத்' தொழுகை வஜீபா ஓதுதல் போன்ற வணக்கங்களில் ஈடுபடுவார்கள். மற்றும் சில சமயங்களில் தங்கள் வர்த்தக ஸ்தலத்திலிருந்தவாறே இந்த வணக்கங்களில் ஈடுபடுவதும் உண்டு.

இமாமவர்கள், "அல்லாஹும்ம இன்னா நஸ்த ஈனுக்க பிக அலா தாஅதிக்க" (அல்லாஹ்வே, திண்ணமாக, உன்னைக் கொண்டே, உனக்கு வழிபட உன்னிடத்தில் உதவி தேடுகிறேன்) என்ற துஆவை நியமமாக ஓதி வந்துள்ளார்கள். "இதை நான் ஓதிவந்ததன் மகிமையால் தான் எனக்கு அல்லாஹ் அறிவை விசாலமான தாக்கினான்" என்று அவர்கள் தெரிவித்ததாகவும் சொல்லப்படுகிறது.

மேலும், இமாமவர்கள் ஆயிரம் தடவை தங்கள் கனவில் அல்லாஹ்வைக் கண்டதாகவும், அப்போதெல்லாம் அவர்கள் அவனிடம் தாங்கள் ஈமான் ஸலாமத்துடன் மரணிப்பதற்கான ஓர் அமலைச் சொல்லித் தரும்படி கேட்டதாகவும். அதன் பயனாய் "அல்லாஹும்ம அஹ்யினீ அலல் கிதாபி வஸ்ஸுன்னத்தி வத வஃப்பனீ அலல் ஈமானி வத்தௌபத்தி. அல்லாஹும்ம ஸல்லி அலா ஸையிதினா முஹம்மதின் வஆலிஹி வஸல்லிம் வப்அல்பினா

தாலிக்க வபி ஜமீஇல் முஸ்லிமீன்" (அல்லாஹ்வே, திருகுர்ஆனின் போதனைக்கேற்பவும், நபி பெருமானாரின் முன்மாதிரியின்படியும் நான் வாழ்ந்திருக்க அருள்புரி! பாவமன்னிப்புடனும், மெய்விசுவாசத் துடனும் நான் மரணிக்கக் கிருபை செய்! முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மீதும், அவர்கள் வம்சத்தார் மீதும், ஸலாவாத்தும், ஸலாமும் சொல்வாயாக! நாங்களும், மற்ற முஸ்லிம்கள் அனைவரும் இதை அமல் நடத்திவர அருள் புரிவாயாக!) என்ற துஆவை ஓதி வரும்படி உத்தரவாயிற்றென்றும், அதைத் தாங்கள் நியமமாக ஓதி வந்ததாகவும் இமாம் அவர்கள் கூறியதாகச் சில நூற்களில் காணப்படுகிறது.

இமாமவர்கள் வணக்கம் சித்தசுத்தி (இக்லாஸ்)யுடன் கூடியதாகும், சித்தசுத்தியின் அவசியத்தை அவர்கள் வற்புறுத்தும் அழகைப் பாருங்கள்; "பத்துப் பங்கு கல்வியைவிட ஒரு பங்கு அமல் சிறந்ததாகும்; பத்துப் பங்கு அமலைவிட ஒரு பேணுதல் சிறந்ததாகும். பத்துப் பங்கு பேணுதலை விட ஒரு பங்கு சித்தசுத்தி உயர்வானதாகும்" என்பது அவர்களுடைய அருள்வாக்குகளில் ஒன்று.

"இமாமவர்களுடைய மெய்வணக்கங்களும், தியானமும் சந்தேகமற்ற ஹதீஸ்கள் போல் விளங்கி வந்தன" என்று அல்லாமா தஹபி குறிப்பிட்டுள்ளார்கள். பல சமயங்களில் அவர்கள் தொழுகையில் திருக்குர்ஆன் ஓதும்போது தங்களை மறந்து அழுதும் விடுவார்கள். இப்ராஹீம் பஸரி என்பவர் சொல்கிறார்; "ஒரு தடவை நான் இமாமவர்களோடு சேர்ந்து நின்று சுப்ஹுத் தொழுகை தொழுது கொண்டிருந்தேன் அப்போது தொழுகையை நடத்திய கத்தீப், "அநீதிக்காரர்கள் புரியும் கொடுமைகளை எல்லாம் அல்லாஹ் மறந்து போனான் என்று நீங்கள் எண்ண வேண்டாம்" என்ற (கருத்துள்ள) வசனத்தை ஓதியதும் என் அருகில் நின்ற இமாம் அபூ ஹனீபாவின் உடல் நடு நடுங்கிக் கொண்டிருந்தது."

ஜாயிதா என்பவர் சொல்கிறார்; "ஒரு முக்கியமான மார்க்கப் பிரச்சினையொன்றுக்கு விளக்கம் பெறுவதற்காக நாங்கள் இமாமவர் களிடம் சென்றோம். அவர்கள் இஷாத் தொழுகை தொழுது கொண்டிருந்தார்கள். அது முடியட்டும் என்று காத்திருந்தோம். இமாம வர்கள் நபில் தொழுத பின்னர் திருக்குர்ஆனை ஓத அமர்ந்து

விட்டார்கள். "வ-கான-அதாபஸ்-ஸமூம்" என்ற திருவசனத்தைத் திருப்பித் திருப்பி ஓதிக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையே சுப்ஹு நேரம் வந்துவிட்டது."

யஜீத் பின் கமீத் சொல்கிறார்; "நான் இமாமவர்களோடு நின்று இஷாத் தொழுது கொண்டிருந்தேன். தொழ வைத்த கத்தீப், 'இதா ஜுல் ஜிலத்துல் அர்ளு' என்ற அத்தியாயத்தை ஓதினார். தொழுகை முடிந்து மக்கள் வெளியான பின்னர் நான் இமாமவர்களிடம் சென்றேன். அவர்கள் மௌனமாக அமர்ந்து குளிர்ந்த மூச்சை சுவாசித்துக் கொண் டிருந்தார்கள். அவர்கள் வணக்கத்துக்கு இடையூறு செய்யக் கூடாது என்று நான் வெளியில் சென்றுவிட்டேன். பிறகு சுப்ஹு நேரத்தில் மஸ்ஜிதுக்குள் சென்று பார்த்தேன். இமாமவர்கள் அதே இடத்தில் கவலை தோய்ந்த முகத்துடன் தாடியைப் பிய்த்தவர்களாக அமர்ந்திருந்தார்கள். அவர்கள் மிகவும் உருக்கமாக, "தினையளவு நன்மைக்கும் தினையளவு தீமைக்கும் கூலி தருவோனே, இந்த உன் அடியான் நுஃமானுக்கு விமோசனமளித்தருள்!" என்று பிராத்தித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு சமயம் அவர்கள் தங்கள் வர்த்தகத்தலத்திலிருக்கும் போது, ஜவுளிகளை அடுக்கிக் கொண்டிருந்த பணியாள், "இறைவன் எங்களைச் சுவர்க்கத்தில் புகச் செய்வானாக!" என்று கூறிக் கொண் டிருந்தான். இதை கேட்ட இமாமவர்கள் திகிலடைந்தவர்களாக உடனே கடையை மூடும்படி உத்தரவிட்டு விட்டார்கள். மறுநாள் கடைக்கு வந்து அந்தப் பணியாளை அழைத்து, "சகோதரா, சுவர்க்கத்தை ஆசிக்க நமக்கு என்ன தகுதி இருக்கிறது? நம் தவறுகளுக்காக அல்லாஹ் நம்மைத் தண்டிக்காமல் விட்டால் போதாதா?" என்று உருக்கத்தோடு கூறினார்கள்.

ஒரு சமயம் இமாமவர்கள் கடைவீதியில் போய்க் கொண்டிருந்த போது, அங்கே அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவனின் கால்மீது இமாமவர்களின் கால் பட்டுவிட்டது. அவன் கூச்சலிட்டவனாக எழுந்து, "நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயப்பட வில்லையா? என்று அவர்களை நோக்கிக் கேட்டான். அதைக் கேட்டதும் இமாமவர்கள் தங்களை மறந்த நிலையில் செயலற்று நின்றுவிட்டார்கள். அப்போது அவர்களோடு வந்து கொண்டிருந்த

முஸ்யிர் என்பவர் அவர்களை நோக்கி, "இந்தச் சிறுவன் பேச்சுக்கா நீங்கள் கலங்கி விட்டீர்கள்?" என்று கேட்டார்.

"ஏன், இதுகூட எனக்கு இறைவனின் மறைமுகமான எச்சரிக்கையாக இருக்கக் கூடாதா?" என்று இமாமவர்கள் பதிலளித்தார்கள்.

இன்னொரு சமயம் இமாமவர்கள் தங்களிடம் ஒருவர் கேட்ட விளக்கத்துக்கு பதில் கூறிக் கொண்டிருந்தார்கள். அச்சமயம் இன்னொருவர் அவர்களை நோக்கி, "அபூ ஹனீபா, ஆண்டவனைப் பற்றிய அச்சத்தை மனத்திலிருத்திக் கொண்டு உங்கள் முடிவைச் சொல்லுங்கள்" என்றார். உடனே இமாமவர்களுக்கு முகம் சுண்டி விட்டது, உடனே அந்த மனிதரை அழைத்து, "சகோதரா, அல்லாஹ் உமக்கு நற்கூலி தருவானாக! நான் ஓர் அச்சத்தால்தான் இந்த மார்க்கத் தீர்ப்பளிக்கும் வேலையை என்மீது தூக்கிப் போட்டுக் கொண் டுள்ளேன். மறுமையில் அல்லாஹ் என்னை அழைத்து, 'அறிவு பெற்றி ருந்தும் நீ ஏன் அதை மறைத்துக் கொண்டாய்?' என்று கேட்பானே என்ற அச்சம்தான் அது. இல்லையேல், நான் மார்க்கத் தீர்ப்புக் கொடுக்க முனைந்திருக்கவே மாட்டேன்" என்று விளக்கினார்கள்.

இமாமவர்கள் தங்கள்முன் வரும் பிரச்சினைகளில் எதற்கேனும் பதில் காண முடியாதவர்களானால், "நான் ஏதோ தவறிழைத் திருக்கிறேன். அதனால்தான் இந்தப் பிரச்சினைக்கு என்னால் சரியான பதில் கூற இயலவில்லை" என்று கூறி எழுந்துபோய் ஒளுச் செய்து, தொழுது 'இஸ்திக்பார்' ஓதுவார்கள்.

பின்னொரு சமயம் பெரியார் புலைல் பின் இயாலிடம் ஒருவர் வந்து, இமாமவர்களுடைய இந்த இயல்பைப் பற்றிக் குறிப்பிட்டபோது அந்த மகான் சொன்னார்கள், "இமாம் அபூஹனீபாவின் தவறுகள் மிக மிக சொற்பம். அப்படி இருந்தும் அவர்களுக்கு இந்த நினைப்பு உண்டாகிறது. ஆனால், சதாவும் பாவ காரியங்களில் மூழ்கிக் கிடப்போர்களுக்கோ எத்தனையோ சோதனைகளும், இன்னல்களும் வந்தாலும்கூட இவை யாவும் மறை முகமான எச்சரிக்கை என்ற எண்ணமே வருவதில்லை" என்று கூறி வருந்தினார்கள்.

விவாத வன்மை

இமாமவர்கள் உலகில் தோன்றுவதுபற்றி முன்னரே அறிவிப்புச் செய்யப்பட்டது என்று கூடப் பெரியார்கள் சிலர் கருதுகின்றனர். 'பின்னர் முஹம்மது (ஸல்) அவர்களுடைய கூட்டத்தாரிடையே ஓர் ஒளியுண்டாகும்'' என்று தௌராத் வேதத்தில் கூறப்பட்டிருப்பதாகவும், அந்த 'ஒளி' இமாம் அபூ ஹனீபாதாம் என்றும், கஃபுல் அஹ்பார் என்ற பெரியார் அபிப்பிராயப்படுகிறார்.

மேலும், ஹஜ்ரத் அனஸ் இப்னு மாலிக் (ரலி) அவர்கள் ரிவாயத்துச் செய்ததாகச் சொல்லப்படும் ஹதீஸ் ஒன்றில், "என் உம்மத்தில் ஒருவர் வருவார். அவர் பெயர் நுஃமான். அவர் இடுகுறிப் பெயர் அபூ ஹனீபா. அவர் என் கூட்டத்தாரிடையே ஒளிவிளக்காய் இலங்குவார்'' என்று நபி பெருமானார் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்புச் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

இத்தகைய பெருமைக்குரிய இமாமவர்களின் விவாத வன்மையும், தீர்ப்புகளும் அற்புதமானவையாகும். விளக்குவதற்கு வெகு கடினமான எந்தப் பிரச்சினைக்கும், இமாமவர்கள் வெகு சுலபமாகப் பதில் கூறி, யாவரையும் வியப்பிலாழ்த்தியிருக்கிறார்கள். சில சமயங்களில், கேள்வி கேட்பவர் சரியான நோக்கமற்றவராக இருப்பின், அவரை மடக்கித் தாங்களே அவரிடம் கேள்விகளைக் கேட்டுத் தாங்கள் கூறக்கூடிய பதிலை, அவர் வாய் வார்த்தைகளாகவே வெளிப்படுத்தி விடுவார்கள். இது இமாமவர்களின் விசேஷமான திறமையாகும்.

இமாமவர்கள் காலத்தில் நாத்திக வாதம் பேசி வந்த பல கூட்டத்தினர் இருந்தனர். அவர்கள் பகுத்தறிவின் மூலம் தங்கள் கொள்கையை நிலை நாட்ட முயல்வதுண்டு. அவர்கள் இமாம் அபூ ஹனீபாவிடமும் வந்து பேசத் துணிந்ததுண்டு. இமாமவர்களோ எந்த விவாதமுமின்றியே அவர்களைக் கடவுளுண்மையை ஏற்க வைத்து விடுவார்கள். ஒரு சமயம் இவ்விதம் சிலர் அவர்களிடம் வந்து, "இறைவன் உண்டா என்பது பற்றித் தங்களிடம் விவாதிக்க வந்திருக்கிறோம்'' என்றனர். அவர்களை இமாமவர்கள், மரியாதை கொடுத்து அமர செய்தார்கள். "நாம் இதுப்பற்றிப் பேசுமுன் ஒரு சிறிய விஷயம் குறித்துப் பேசலாமா?'' என்று இமாமவர்கள் அவர்களிடம் வினவினார்கள். வந்தவர்கள் அதற்கு இசையவே, இமாமவர்கள் கேட்டார்கள்; "கப்பல் தலைவனோ, வேலையாட்களோ இல்லாத கப்பலொன்று தானாகவே வகை வகையான பொருள்களை ஏற்றிக் கொண்டு, திஜ்லா நதிக்கரையிலுள்ள ஊர் ஒன்றிற்கு வந்து, தானாகவே யாவையும் இறக்கி விட்டுப் போகுமா?'' என்று கேட்டார்கள்.

வந்தவர்கள், "அது சாத்தியமல்ல; அப்படி வரும் என்று நினைப்பதே பகுத்தறிவுக்குப் பொருந்தாத விஷயம்'' என்று கூறினார்கள்.

இமாமவர்கள் சொன்னார்கள்; "கேவலம், ஒரு கப்பல் இயங்கும் விஷயத்திலேயே இப்படி நடப்பது சாத்தியமல்ல. அவ்விதம் நினைப்பதே பகுத்தறிவுக்குப் பொருந்தாது''* என்றால் இப்பிரபஞ்சம் முழுமையுமே, அதை ஆட்டிப் படைப்பவனின்றித் தானாகவே இயங்கிக் கொள்கிறது என்று நினைப்பதே தவறல்லவா!'' என இமாமவர்கள் கூறியதும் வந்த அந்தப் பகுத்தறிவுவாதிகள் வாயடைத்தவர்களாக, வாதத்தைத் தொடங்காமலேயே அங்கிருந்து அகன்றனர்.

இதேவிதமே தான் வேறொரு சந்தர்ப்பத்திலும் நடந்தது. மதீனாவிலிருந்து இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் ஜமாஅத் தொழுகையில் இமாம் அல்ஹம்து சூரா ஓதிய பின்னர், பின்னின்று தொழுபவர்கள் மீண்டும் 'அல்ஹம்து முழுமையையும் ஓத வேண்டும்' என்று தீர்ப்பளித்திருந்தார்கள். பலர் இதை ஏற்று இதன்படி ஓதி வந்தார்கள். இமாம் மாலிக்கை விடப் பத்து வயது மூத்தவர்களான இமாம் அபூ ஹனீபாவோ, அவ்விதம் இமாம் அல்ஹம்து சூரா ஓதிய பின், பின்னின்று தொழுபவர்கள் அதை மீண்டும் ஓதத் தேவையில்லை என்று தீர்ப்பளித்திருந்தார்கள். எனவே, மாலிக் இமாமைப் பின் பற்றிய சிலர் ஒரே சமயத்தில் அவர்களிடம் இது குறித்து விளக்கம் பெற வந்தனர். வந்தவர்கள் யாவரும் ஒரே சமயத்தில் தங்களிடம் பேச முயலவே இமாமவர்கள், அவர்களை நோக்கி, "உங்கள் சார்பாகப்

* *அணுசக்தி மிகைத்துள்ள இன்று அவ்விதம் ஒரு கப்பல் வருவது சாத்தியமானாலும் கூட, அதையும் ஒரு சக்தி இயக்குகிறது என்பதையும், அதை எங்காவது சிலர் இருந்து இயங்கச் செய்கிறார்கள் என்பதையும் மறந்து விடக்கூடாது.*

பேச உங்களில் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுங்கள். எல்லோரும் இப்படி ஒரே சமயத்தில் பேசுவது சரியல்ல'' என்று கூறினார்கள். அவ்விதமே அவர்கள் ஒருவரைத் தேர்ந்தெடுத்தனர். இமாமவர்கள் அவர்களை நோக்கி, ''இப்போது நீங்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களல்லவா! உங்கள் சார்பாக அவர் பேசினால் போதுமல்லவா! நீங்களும் இதுபற்றி தனித் தனியாகப் பேச வேண்டுமா?'' என்று வினவினார்கள். வந்தவர்கள், "தங்கள் சார்பாக அந்தத் தலைவர் மட்டும் பேசினால் போதும்" என்றனர்.

''இப்படித்தான், நானும், இமாம் அல் ஹம்து சூரா ஓதியபின், பின்பற்றுபவர்கள் (முக்ததிகள்) அதை மீண்டும் ஓதத் தேவையில்லை என்று முடிவு கட்டினேன். நீங்களே அதை இப்போது சரி என்று நிரூபித்துக் காட்டி விட்டீர்கள்!'' என்று கூறினார்கள். வந்தவர்கள் விவாதத்தைத் தொடங்காமலேயே விஷய விளக்கம் பெற்றனர்.

ஒரு சமயம் இமாம் அபூஹனீபாவிடம் விவாதிப்பதற்காக நாத்திகன் ஒருவன் வந்தான். அவர்கள் மஸ்ஜிதில் அமர்ந்திருந்தார்கள். அந்த மனிதன் அவர்களிடம் கேட்டான், ''அல்லாஹ் என்கிறீர்களே, அவனுக்கு முந்தியது எது?" என்று.

இமாமவர்கள் அந்த மனிதனை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று பத்து வரை எண்ணச் சொன்னார்கள். அதன் பின்னர், ''இந்த ஒன்றுக்கு முந்திய எண் யாது?'' என்று வினவினார்கள். ''ஒன்றுக்கு முன் எந்த எண்ணுமில்லையே!'' என்றான் அந்த மனிதன். இது கேட்ட இமாமவர்கள் சொன்னார்கள்; ''கேவலம், படைத்தல் வகையில் அற்பமான இந்த எண்களுக்கே ஆதியில்லை என்றால், ஆதிக்கும் ஆதியான, அந்தமான அல்லாஹ்வுக்கு முந்தியது இருக்க முடியுமா?'' என்று அவனிடமே கேட்டார்கள்.

வந்த நாத்திகன் இன்னொரு கேள்வியை விடுத்தான்; ''உங்கள் அல்லாஹ்வின் முகம் எந்தத் திசையைப் பார்த்திருக்கிறது?'' என்று.

இமாமவர்கள் மஸ்ஜிதின் உள்ளே, மேலே தொங்கிக் கொண்டிருந்த விளக்கின் சுடரைச் சுட்டிக்காட்டி, ''இந்தச் சுடரின் முகம் எந்தத் திசையை நோக்குகிறது?'' என்று எதிர் கேள்வி விடுத்தார்கள்.

''இந்தச் சுடருக்கு ஏது திசை?'' என்று அவன் திருப்பிக் கேட்டான்.

''கேவலம், இறைவனுடைய படைப்புகளில் ஒன்றான இந்தச் சுடருடைய முகம் இன்ன திசையைப் பார்த்துள்ளது என்று சொல்ல இயலாதிருக்கும்போது, சகல படைப்புகளையும் உண்டாக்கிய இறைவன், இன்ன திசையைத் தான் நோக்குகிறான் என்று என்னுவதே முழு மூடத்தனமாகும்'' அல்லவா? என்று இமாமவர்கள் விளக்கம் தந்தார்கள்.

நாஸ்திகள் தன் கடைசிக் கேள்வியை விடுத்தான்; ''உங்கள் இறைவன் எங்கே இருக்கிறான்?'' என்று கேட்டான்.

இமாமவர்கள் அதே விளக்கைச் சுட்டிக் காட்டி, ''இதன் வெளிச்சம் எங்கேயுள்ளது?'' என்று வினவினார்கள். அவன் விழிக்கவே, ''கேவலம், இந்தப் படைப்பின் வெளிச்சமே இன்ன இடம் என்றில்லாது நெடுகிலும் - சுற்றிலும் பரவி இருக்கும் போது, சர்வ வியாபியான அல்லாஹ்வும் இன்ன இடத்தில்தான் இருக்கிறான் என்று சொல்வதும் சாத்தியமா?'' என்று அவர்கள் கேட்டார்கள். கேள்வி கேட்க வந்தவன் வாயடைத்தவனாக வெளியேறினான்.

இமாமவர்கள் காலத்தில் வாழ்ந்த பல விசித்திரக் கூட்டத்தாரில் காரிஜிகள் என்ற பயங்கரவாதிகளும் உண்டு. இவர்கள் தமது கொள்கைப்படி நடவாதவர்களை எல்லாம் கொலை செய்து விடுவதன்மூலம் 'புதிய சமுதாய'த்தை உண்டாக்கிவிடலாம் என்று கனவு கண்டவர்கள். இவர்களுடைய கொள்கைகளுள் ஒன்று 'பாவம் செய்தவர்கள் அனைவருமே காபிர்கள் தாம்' என்பதாகும். இதை இமாம் அபூஹனீபா மூலமே வற்புறுத்தி விட எண்ணிய அவர்களில் தலைமையான சிலர், அவர்கள் வீட்டிலிருக்கும் சமயம், அவர்களிடம் வந்து, ''விபச்சாரத்தில் கர்ப்பிணியாகி மரித்தவள், குடி போதையில் இறந்தவன் ஆகிய இரண்டு பேர்களுடைய பிரேதங்கள் உங்கள் வீட்டுக்கு வெளியில் கிடத்தப்பட்டுள்ளன. அவர்கள் காபிர்களா? மூமின்களா?'' என்று அவர்களிடம் வினவினர்.

“அந்தப் பிரேதங்கள் யூதர்களுடையவையா?(நெருப்பை வணங்கும்) மஜூஸிகளுடையவையா?” என்று இமாமவர்கள் விசாரித்தார்கள்.

உடனே காரிஜிகள், “இல்லை, அவை முஸ்லிம்களுடையவை தாம்” என்று பதிலளித்தார்கள்.

“அப்படியானால், அவர்கள் யார் என்பதை நீங்களே அறிந்துள்ளீர்களே!”

“அது எப்படி?”

“அவை முஸ்லிம்களுடையவை என்று நீங்களே ஒப்புக்கொள்ளும்போது, முஸ்லிம்களை நீங்கள் எப்படிக் காபிர்களாக்குவீர்கள்?”

உடனே அந்தக் காரிஜிகள், “அவர்கள் இருவரும் சுவர்க்கவாதிகளா, நரகவாதிகளா?” என்று வினவினர்.

“இவர்களையும் விடக் கொடிய பாவம் செய்தோர் விஷயத்தில் இப்ராஹீம் நபி (அலை) அவர்களும், ஈஸா நபி (அலை) அவர்களும் கூறிய அதே வார்த்தைகளில் உங்களுக்குப் பதில் தரவேண்டுமானால், “பாவிகளின் பிழை பொறுப்பதும், பொறுக்காமல் அவர்களைத் தண்டிப்பதும் அல்லாஹ்வின் நாட்டத்தைப் பொருத்ததாகும்” என்று இமாமவர்கள் கூறினார்கள். இதைக் கேட்டதும் அந்தக் காரிஜிகள் இமாமவர்களிடம் மன்னிப்புக் கேட்டுத் தௌபாச் செய்து மீண்டனர். பின்னர், இமாமவர்கள் அந்தப் பிரேதங்களைக் குளிப்பாட்டச் செய்து, ஜனாஸாத் தொழுகை நடத்தி, நல்லடக்கம் செய்தார்கள். இதில் அந்தக் காரிஜிகளாக இருந்தவர்களும் கலந்து கொண்டார்கள்!

இந்தக் காரிஜிகளின் தலைவர் ஒருவரிடம், ஒரு தடவை இமாமவர்கள் சிக்கிக் கொண்டார்கள். அவர் தம்முடைய வாளை உருவிக் கொண்டு, “அபூ ஹனீபா, எங்கள் அபிப்பிராயத்தை ஏற்காத உம்மை வெட்டப் போகிறேன்” என்றார்.

இமாமவர்கள் நிதானமாக, “எந்த அபிப்பிராயத்தை?” என்று வினவினார்கள்.

“அதுதான் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் முஆவியாவுக்கும் இடையில் நடந்த தகராறில் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் மூன்றாவது மனிதர் ஒருவரை மத்தியஸ்தராக நியமித்துக் கொண்டதை நாங்கள் தவறு என்கிறோம். அதனாலேயே இஸ்லாமிய உலகைப் பிடித்துள்ள தொல்லையெல்லாம் உண்டாயின என்கிறோம். நீரோ அவ்விதம் அவர்கள் மத்தியஸ்தத்துக்கு ஒப்புக் கொண்டது சரி என்கிறீர். ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் தங்கள் கட்சியில் நியாயமிருப்பதை உணர்ந்திருப்பார்களாயின் இவ்விதம் அவர்கள் மத்தியஸ்தர் தீர்ப்புக்கு ஒப்புக் கொண்டிருக்கலாமா?”

“அதுபற்றி நான் பேச அவகாசமளியும். நான் சொல்வது தவறானால் கடைசியில் உமது இஷ்டப்படி செய்து கொள்ளலாம்” என்று இமாமவர்கள் அமைதியாகக் கூறினார்கள். அவரும் அவ்விதம் விவாதிப்பதை விரும்பினார்.

இமாமவர்கள் சொன்னார்கள்: “எல்லாம் சரி, நான் என் கட்சியையும், நீர் உமது கட்சியையும் எடுத்துக் கூறுவோம். இதில் தகராறு வந்தால் என்ன செய்வது?” என்றார்கள்.

“யார் சொல்வது சரி என்று தீர்மானிக்க ஒருவரை நியமிப்போம்” என்றார் காரிஜித் தலைவர். அதன்படி அவர் தமது ஆள் ஒருவரை மத்தியஸ்தராக நியமித்தார். இமாமவர்கள் அதற்கு இணங்கிச் சற்று நேரம் விவாதித்துக் கொண்டிருக்கும் போது சொன்னார்கள்: இத்தகைய சூழ்நிலையில் தான் உம்மைப் போல் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களும் மத்தியஸ்தத்துக்கு ஒப்புக் கொண்டார்கள். நீர் உமது கட்சி நியாயமானதாக இருக்கிறது என்று நம்பும்போது என்னோடு விவாதிப்பதில் மத்தியஸ்தர் ஒருவரை நியமித்துக் கொள்ள ஒப்பியது சரியல்லவா!” என்று இமாமவர்கள் சொன்னதும், காரிஜித் தலைவர் மேலே பேச முடியாமல் வாளை உறையில் போட்டுக் கொண்டு அங்கிருந்து அகன்றார்.

கூபாவில் வெகு தீவிரமான ஷீயாக்களும் சிலர் இருந்தனர். அவர்கள் ஹஜ்ரத் அபூபக்கர், உமர், உதுமான் (ரலி அன்ஹும்) ஆகிய

முதல் மூன்று கலீபாக்களையும் ஒப்புக் கொள்ளாதவர்கள். அத்துடன் அவர்களைப் பற்றி வெகு இழிவாகவும் பேசி வந்தனர். அவர்களுள் ஒருவர் ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்களை 'யூதர்' என்று அடிக்கடி திட்டுவதுண்டு. இதையறிந்த இமாமவர்கள், அவருக்கு வெகு நாசூக்காகப் புத்தி கற்பிக்க எண்ணினார்கள். ஒரு சமயம் இமாமவர்கள் எதிரே அவர் வந்தார். அவரை அழைத்து, அவருடைய சேமலாபங்களை விசாரித்துவிட்டு, "உங்களுக்கு மணப் பருவமெய்திய பெண் குழந்தையொன்று உண்டே, அதற்கு மணமாகி விட்டதா?" என்று பரிவுடன் வினவினார்கள். அவர் "இல்லை, மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

இமாமவர்கள் சொன்னார்கள். "எனக்குத் தெரிந்த மாப்பிள்ளையொருவன் இருக்கிறான். நல்ல இடம். செல்வம் நிறைந்தவன், மிகவும் பேணுதலானவன். திருக்குர்ஆனை மனனம் செய்தவன். இரவெல்லாம் வணக்கத்திலேயே கழிக்கிறவன். அவனுக்கு உங்கள் மகளை.......?" என்றதும் அந்த ஷீயாவுக்கு மகிழ்ச்சி கரை கடந்து விட்டது. ஆஹா, அதற்கென்ன, தாராளமாகக் கொடுக்கிறேன் உறுதிப் படுத்திவிடுங்கள்" என்றார். உடனே இமாமவர்கள் அவரைக் கையமர்த்தி, "ஆனால் அந்த மாப்பிள்ளை யூதனாயிற்றே!" என்றார்கள். அதைக் கேட்டதும் அந்த ஷீயாவுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. "என்ன, என் பெண்ணை ஒரு யூதனுக்கா கொடுக்கச் சொல்கிறீர்கள்! ஓர் இமாம் இப்படிப் பேசலாமா?" என்று ஆத்திரத்தோடு கேட்டார். இமாமவர்கள் சாந்தமாகக் கேட்டார்கள். "நான் சொன்ன அத்தனை யோக்கியதையுமுள்ள ஒரு 'யூதரு'க்கு நம்பெருமானார் (ஸல்) அவர்கள் தங்கள் இரண்டு புத்திரிகளை மணஞ் செய்து கொடுக்கவில்லையா!" என்று. இதைக் கேட்ட ஷீயாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது. நபி பெருமானாரின் இரண்டு புத்திரிகளை (ருகைய்யா, குல்ஸூம் ஆகிய இருவரை) மணந்த ஹஜ்ரத் உதுமான் (ரலி) அவர்களைத் தான் 'யூதர்' என்று இகழ்ந்து வந்ததை இடித்துக் காட்டி, அது எவ்வளவு பெரிய தவறு என்பதையே இமாமவர்கள்

இவ்வளவு அருமையாக உணர்த்துகிறார்கள் என்பதை அவர் உணர்ந்து, தமது நடத்தைக்காக மன்னிப்புக் கேட்டு கொண்டார்.

இமாமவர்கள் வசித்து வந்த தெருவில் இன்னொரு ஷீயா இருந்தான். அவன் இன்னும் கொடூரமான வக்கிர புத்தி படைத்தவன். அவன் இஸ்லாமிய உலகின் முதல், இரண்டாம் கலீபாக்களை அவமதிக்கும் வகையில் தான் வளர்த்த இரண்டு கழுதைகளுக்கும் அந்த இரண்டு மகான்களுடைய பெயர்களையும் வைத்திருந்தான். ஒருநாள் அந்தக் கழுதைகளில் ஒன்று அவனை உதைத்து விட்டது. அதனால் அவன் இறந்துவிட்டான்; "உமர் என்று அவன் பெயர் வைத்த கழுதைதான் அவனை உதைத்திருக்கும்" என்று தமது மகன் ஹம்மாதிடம் கூறினார்கள். பின்னர் விசாரித்ததில் அதுவே சரி என்று தெரிய வந்தது.

ஒரு சமயம் இமாமவர்கள் குளிக்குமிடம் ஒன்றுக்குச் சென்றார்கள். அங்கே நிர்வாண மனிதன் ஒருவனைக் கண்டார்கள். அவன் மார்க்க விசுவாசம் பேதலித்தவன் என்று அவர்களிடம் கூறப்பட்டது. அப்போது அவன் அவர்கள் எதிராக வரவே அவர்கள் தங்கள் கண்களை மூடிக் கொண்டார்கள். இதைப் பார்த்த அவன், "இமாமே, அல்லாஹ் எப்போது உமது பார்வையைப் போக்கினான்?" என்று கேட்டான். உடனே இமாமவர்கள், "எப்போது உன் மறைப்பைக் குலைத்து, உன் மானத்தைப் போக்கினானே அப்போது தான்" என்று பதிலளித்தார்கள்.

இமாமவர்கள் தங்கள் தீர்ப்பு ஒன்றில், புளித்த திராட்சைப் பழத்தின் சாற்றைப் பிழிந்து எடுத்த 'நபீது' என்ற பானம் 'ஹலால்' என்றும், ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஒரு மஜ்லிஸியால் குத்தப்பட்ட சமயம், அவர்கள் அதைக் குடித்துள்ளார்கள் என்றும் கூறியுள்ளார்கள். இதனால் ஆத்திரமடைந்த ஒருவன் சுண்ணாம்பு போடாத 'நபீது' என்ற பானத்தை இமாமவர்கள் மஸ்ஜிதில் இருக்கும் போது அவர்களிடம் கொண்டு வந்து கொடுத்து. "இது ஹலால் என்றீரே, நீரே குடித்துக்

காட்டும்!" என்றான். உடனே இமாமவர்கள் அமைதியாக அவனை நோக்கி, "உமது மனைவி உமக்கு ஹலாலா, ஹராமா?" என்று கேட்டார்கள். அவன் ஹலால்தான் என்றான். "அப்படியானால், அவளை நீர் இங்கே வைத்து வீடு கூடுவீரானால், நானும் இதைக் குடிக்கிறேன்" என்று இமாமவர்கள் கூறவே, அவன் முகம் சோம்பியவனாக அங்கிருந்து அகன்றான்.

ஒரு சமயம் இமாமவர்களுக்கு நாவிதனொருவன் சவரம் செய்து கொண்டிருந்தான். பழுத்த மயிர்களைக் களைந்துவிடும்படி அவனிடம் அவர்கள் கூறினார்கள். "அதைப் பிடுங்கப் பிடுங்க அதிகமாகப் பழுக்கும்" என்று அவன் பதிலளித்தான். உடனே இமாமவர்கள், "அப்படியானால் கருப்பு மயிர்களைப் பிடுங்கிவிடு; அதாவது அதிகமாக முளைக்கட்டும்" என்று நகைச்சுவையோடு கூறினார்கள். இதைக் கேள்விப்பட்ட ஷரீக் என்ற நீதிபதி, "இமாமவர்கள் தங்கள் அனுமானத்தை (கியாஸை) நாவிதனிடங்கூடக் காட்டாது விடவில்லையே;" என்று கூறிச் சிரித்தார். உண்மையில் ஆயிரக் கணக்கான பிரச்சினைகளுக்கு அவர்கள் இவ்விதம் அனுமான முறையில் பதில் கண்டுள்ளார்கள்.

அற்புதமான தீர்ப்புகள்

இமாமவர்கள் கொடுத்த தீர்ப்புகள் உலகப் பிரசித்தி பெற்றவை. அவற்றுள் வினோதமான சிலவற்றை மட்டும் இங்கே பார்க்கலாம்.

ஒரு சமயம் இமாமவர்களின் சபையில் பிக்ஹில் நிபுணர்களான சுப்யானுத் தௌரி, இப்னு அபீ லைலா, ஷரீக் போன்ற பலர் அமர்ந்திருந்தனர். அப்போது ஒருவன் இமாமவர்களிடம் வந்து இந்தப் பிரச்சினைக்குப் பதில் கேட்டான்; "ஒரு கூட்டத்தில் ஒருவன் மீது பாம்பு ஒன்று ஏறிற்று. அதை அவன் அப்பால் தள்ளினான். அது அருகிலிருந்தவன் மீது போய் விழுந்தது. அவனும் அதை அப்பால் தள்ளினான். அது இன்னொருவன் மீது விழுந்தது. இவ்விதம் ஒருவர் பின் ஒருவராகத் தட்டிவிடவே, பாம்பு கடைசியில் ஒருவன்மீது விழுந்து அவனைக் கடித்து விட்டது. அதனால் அவன் மாண்டு போனான்.

எனவே, இந்தச் சாவுக்காக அவன் குடும்பத்தாருக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டியது (தியத்) யாருடைய கடமை?"

இந்த நுட்பமான பிக்ஹுப் பிரச்சினை அங்கிருந்த அறிஞர்கள் அனைவரையுமே சிந்திக்க வைத்தது. ஒவ்வொருவரும் ஒரு தீர்ப்புக் கூறலாயினர். முதலில் பாம்பைத் தள்ளியவன் தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றார் ஒருவர். இல்லை, இல்லை. கடைசியாக அதைத் தட்டி விட்டவன் தான் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்றார் இன்னொருவர். இமாமவர்களுடைய தீர்ப்பை அறிய அனைவரும் ஆவலோடு அவர்களை நோக்கினர். அவர்கள் சொன்னார்கள்; "முதல் மனிதன் பாம்பைத் தனக்கு அருகிலிருந்தவன் மீது தள்ளினான். அந்த (இரண்டாம்) மனிதன் அதனால் மரிக்கவில்லை, அதனால் பாம்பைத் தள்ளியவன் நஷ்டஈடு கொடுக்க வேண்டியதில்லை. இவ்விதம் பலரைத் தாண்டிப் பாம்பு கடைசியாக மரித்தவனுக்கு முந்திய நபரிடம் வந்து சேர்ந்தது. அவன்தான் அதை மரித்தவன் மீது தள்ளினான். இங்கே இரண்டு நிலைகளுக்கு இடமுண்டு. அதாவது, இந்த நபர் கடைசி ஆள் (மாண்டு போனவன்) மீது பாம்பைத் தள்ளிய உடனேயே அது அவனைக் கடித்து அதனால் அவன் இறந்தானா? அப்படிக் கடித்திருப்பின் கடைசியாகப் பாம்பைத் தள்ளியவனே நஷ்டஈடு கொடுக்க வேண்டும். ஆனால், அந்தப் பாம்பு இறந்த ஆள் மீது தள்ளப்பட்ட உடனே கடிக்காமல், சற்று நேரம் சென்று கடித்திருப்பின், கடைசியாகப் பாம்பைத் தள்ளிய நபரும் நஷ்டஈடு கொடுக்க வேண்டியதில்லை. ஏனெனில், பாம்பு தன் மீது விழுந்தவுடன் அதை அப்பால் தள்ளித் தன்னைக் காத்துக் கொள்ளாமல் சும்மா இருந்தது இறந்து போனவனுடைய குற்றமாகும்" இமாமவர்களின் இந்த முடிவே சரியானது என்று யாவரும் ஏற்றுக் கொண்டனர்.

கூபாவில் ஒரு பிரமுகர் தம்முடைய இரண்டு பெண்களுக்கு ஒரே சமயத்தில் திருமணம் நடத்தினார். மறுநாள் திருமண விருந்துக்காக நகரப் பிரமுகர்களுடன், பிரபல பகீஹ்களான முஸ்யிர், ஹஸன் பின் ஸாலிஹ், சுப்யானுத் தௌரி, அபூஹனீபா ஆகியோரும்

சென்றிருந்தனர். விருந்தினர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது பெண்களின் தந்தை பெரிதாகக் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். விஷயம் என்னவென்று விசாரித்ததில் இரவில் திருமணம் நடந்து முடிந்ததும் மணப்பெண்கள் தத்தம் மாப்பிள்ளைகளுடன் சயனிக்க அனுப்பப்பட்டனர். ஆனால், பெண்களின் தவறால் மூத்தவளின் கணவன் இளையவளோடும், இளையவளின் கணவன் மூத்தவளோடும் படுக்க நேர்ந்து விட்டது. இது பற்றித்தான் வீட்டுக்காரர் கூச்சலிட்டுக் கொண்டிருந்தார். விருந்து முடிந்ததும், வந்திருந்த பெரியார்களிடம் இதற்கு என்ன செய்யலாம் என்று அவர் வினவினார்.

சுப்யானுத் தௌரி சொன்னார்கள்; "இதனால் விவாக பந்தத்தில் தவறு ஏதுமில்லை, எனினும், எவளோடு எவன் படுத்திருந்தானோ அவனே அவளுக்கு மஹர் தொகையைக் கொடுக்க வேண்டும்" என்று. அருகிலிருந்த முஸ்யிர், இமாம் அபூ ஹனீபாவின் தீர்ப்பை வேண்டினார். அவர்கள் முதலில் இரண்டு மாப்பிள்ளை களையும் தங்களிடம் தனித்தனியே அழைத்து வரச் செய்தார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் ரகசியமாக, "நீ இரவில் எவளோடு சயனித்திருந்தாயோ அவளே உனக்கு மனைவியாக வருவதை விரும்புகிறாயா?" என்று கேட்டார்கள். இருவரும் "ஆம்" என்று கூறிவிட்டனர். உடனே இமாமவர்கள் சபையினரை நோக்கிச் சொன்னார்கள்; "எந்தப் பெண்களோடு இவர்களுக்கு நிக்காஹ் நடந்ததோ அவர்களை இருவரும் தலாக்குச் சொல்லிவிட்டு, இன்று இரவில் எவர்களோடு படுத்திருந்தார்களோ அவர்களை இருவரும் நிக்காஹ் செய்து கொள்ள வேண்டும்!"

இந்தத் தீர்ப்பை சுப்யானுத் தௌரியும் ஏற்றுக் கூறியதாவது; "தப்பிப்பிராயத்தில் நேர்ந்துவிட்ட இந்த வீடு கூடலால், விவாக முடிச்சு அறுபட்டுவிடவில்லைதான். ஆனால், வேறொருவனோடு படுத்த பெண்ணை ஏற்றுக் கொள்ள அவள் கணவனின் தன்மானம் இடந்தராது. அப்படியே அவன் சேர்ந்தாலும் அவர்களுடைய தாம்பத்திய வாழ்க்கை மகிழ்ச்சியுடையதாக இருக்காது. மேலும், இந்த நிலையில் (தாங்கள் தங்கள் மனைவியரோடு வீடு கூடாமல்) தங்கள் மனைவியரை இவர்கள் தலாக்குச் செய்வதால் அதற்குப் பாதி மஹர் தான் உண்டு. எனவே சகல வகையிலும் அபூ ஹனீபாவின் தீர்ப்பே சிறந்ததாகும்."

எகிப்தில் புகழ்பெற்ற இமாமாக விளங்கிய லைஸ் பின் சஃது சொல்கிறார்: "நான் இமாம் அபூ ஹனீபாவைப் பற்றி அதிகமாகக் கேள்விப்பட்டிருந்தாலும் அவர்களை நேரில் சந்தித்ததில்லை. ஒரு தடவை நான் ஹஜ்ஜுக்குப் போயிருந்த சமயம், மக்காவில் மிகப் பெரிய கூட்டமொன்றில், தலைவர் ஆசனத்திலமர்ந்திருந்த ஒருவரிடம் பலரும் மார்க்கத் தீர்ப்புகள் கேட்டுப் பெறக் கண்டேன். இச்சமயம் அந்தத் தலைவரை நோக்கி ஒருவர், "அபூ ஹனீபா!" என்று விளித்ததும்தான் அவர்கள் இமாம் அபூ ஹனீபா என்று அறிந்து கொண்டேன். அவர்கள் குரல் கொடுத்த வரை அருகிலழைத்து, "என்ன சேதி?" என்று வினவினார்கள். அந்த மனிதர், "எனக்கொரு போக்கிரிப் புத்திரன் இருக்கிறான். அவனுக்கு மணம் செய்து வைத்தால் மனைவியைத் தலாக்குக் கூறிவிடுகிறான். அடிமைப் பெண்ணை வாங்கிக் கொடுத்தாலும் உரிமை கொடுத்து அனுப்பி விடுகிறான். இந்த நிலையில் நான் என்ன செய்யலாம்?" என்று கேட்டார். இமாமவர்கள் சொன்னார்கள்; "அப்படியானால் உமது மகனை அடிமைப் பெண்கள் விற்கும் சந்தைக்கு அழைத்து வாரும். அவனுக்கு பிரியமான பெண்ணை விலைக்கு வாங்கி அவனுக்கு மணம் முடித்துவிடும். அவன் அவளுக்கு உரிமை கொடுக்க விரும்பினால் அது செல்லாது. ஏனெனில், அவள் அவனுடைய அதிகாரத்தில் (மில்க்கில்) இல்லை. (நீர் வாங்கிய அவள் உம் பொருள் தான்.) அவன் அவளைத் தலாக்குச் சொல்லிவிட்டாலும் உமக்கு ஒன்றும் நஷ்டமில்லை. நீர் வாங்கிய அடிமைப் பெண் உம்மிடமே இருந்து விடுவாள்." இந்தப் பொருத்தமான பதிலைக் கூறிய இமாமவர்களை நான் பெரிதும் மெச்சினேன்."

இமாமவர்கள் தங்கள் மதரஸாவிலிருந்த சமயம் பெண்மணி ஒருத்தி அங்கு வந்து, பலரும் கூடியிருந்த சபையில் தலை

குனிந்தவாறே, இமாமவர்கள் முன் நாரத்தம் பழம் ஒன்றை வைத்தாள். அதன் ஒரு பகுதி மஞ்சளாகவும், மறுபாகம் சிகப்பாகவும் இருந்தது. இமாமவர்கள் அதைக் கையிலெடுத்து இரண்டாகப் பிளந்து காட்டினார்கள். அதைப் பார்த்ததும் அந்தப் பெண் வெளியில் போய் விட்டாள். இதன் தாத்பரியம் என்ன என்பதை அறியாத சபையினரில் ஒருவர் மெதுவாக இதன் விபரமென்ன என்று அவர்களிடம் வினவினார். இமாமவர்கள் சொன்னார்கள் : "இந்தப் பெண்ணுக்கு ஒரு மாதம் மஞ்சளாயும், ஒரு மாதம் சிகப்பாயும் மாத ருது வெளியாகிக் கொண்டிருக்கிறது. இது பற்றி என்னிடம் தெளிவு காண, வாயால் சொல்ல இயலாத நிலையில் அந்த நாரத்தம் பழத்தைக் கொண்டு வந்தாள். நான் அதைப் பிளந்து, அதனுள் இருப்பது போல் இரண்டு வித ருதுவுக்குப் பின்னும் ஒரே வகையாக வெள்ளையைக் கண்டால் சுத்தமாகி விட்டாள் என்று அறிவித்தேன்."

ஒரு சமயம் இமாமவர்கள் (அவர்கள் சிறையிலிருந்த காலத்திலாக இருக்கலாம்) கலீபா மன்சூருடைய சபைக்கு அழைத்து வரப்பட்டார்கள். அங்கே மன்சூருடன் அபுல் அப்பாஸ் என்ற பிரமுகர் அமர்ந்து உரையாடிக்கொண்டிருந்தார். இந்த அபுல் அப்பாஸ் எப்பொழுதும் இமாமவர்கள் மீது குறை கூறிக்கொண்டும், அவர் களுடைய கண்ணியத்தைப் போக்க முயன்று கொண்டுமிருப்பவர் அப்போது அங்கே வந்த இமாம் அபூ ஹனீபாவை இன்று எப்படியாவது தலைகுனிய வைத்து விடுவது என்ற உறுதியுடன் அவர் இமாமவர் களிடம் கேட்டார்: "நமது அமீருல் மூமினின் (கலீபா) சிற்சில சமயங் களில் யாரையாவது சுட்டிக்காட்டி அவரைக் கொன்று விடுமாறு ஆணையிடுகிறார்கள். அந்த மனிதன் குற்றவாளியா? இல்லையா? என்பதை கூட நாங்கள் அறிய முடிவதில்லை. இந்த நிலையில் நாங்கள் அமீருல் மூமினீனுடைய ஆணையை அமல் படுத்துவதெப்படி?"

உடனே இமாமவர்கள் அபுல் அப்பாஸை நோக்கி, "சரி, கலீபாவின் ஆணை சரியாக இருக்குமா, தவறாக இருக்குமா என்பது

பற்றி உங்கள் அபிப்பிராயம் யாது?" என்று வினவினார்கள். "சரியாக இருக்கும் என்பதே என் அபிப்பிராயம்" என்று அவர் கூறவே, "அப்படி யானால், சந்தேகமென்ன, அவர் ஆணைப்படி நடக்க வேண்டியது தானே!" என்று கூறி விட்டார்கள். இப்படி எதிர்பாராத விதமாக மடக்கப் பட்ட அபுல் அப்பாஸ் தலையைத் தொங்கப் போட்டுவிட்டார்.

இது போன்ற கலீபா மன்சூரின் சபையைச் சேர்ந்த ரபீக் என்பவரும் இமாமவர்களைப் பழி வாங்க முயன்றார். மன்சூரின் மூதாதையான ஹஜ்ரத் அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள், "ஒருவன் ஒரு விஷயம் பற்றிச் சத்தியம் செய்து, பின்னர் இரண்டொரு நாட்களுக்கப்பால் அதில் சில அம்சங்களை ஒதுக்கிக் கொண்டால், அது ஆகும்" என்று கூறியிருக்கிறார்கள் என்றும், இமாம் அபூ ஹனீபாவோ, "அவ்விதம் ஒதுக்கியது சத்தியத்துடன் சேர்ந்திருந்தால் தான் ஆகும்" என்று கூறுகிறார்கள் என்றும், இதுபற்றி அவர்களிடம் விசாரிக்க வேண்டும் என்றும், இந்த ரபீக் கலீபா மன்சூரைத் தூண்டினார். இமாவர்கள் தமது சபைக்கு வந்த சமயம், அது பற்றி அவர்களிடம் வினவுவதற்குக் கலீபா அனுமதியளித்தார். "நீங்கள் இவ்விதம் கூறுவது எப்படிப் பொருந்தும்?" என்று இமாமவர்களிடம் ரபீக் கேட்டதற்கு, தமது அபிப்பிராயந்தான் சரி என்பதை அவர்கள் ஓர் உதாரணத்தால் விளக்குவதாகக் கூறி, "இப்போது அமீருல் மூமினீன் இருக்கிறார்கள். இவர்கள் முன் மக்கள் இவர்களின் கிலாபத்தை ஏற்று, சத்தியம் செய்து கொடுத்து விட்டு, வீட்டுக்குப் போனதும் அதற்கு மாற்றமாக நடந்து கொண்டால் இவர்கள் ஆட்சி நடப்பது எப்படி? எனவே, நான் சொல்வது சரி என்பதைக் கலீபாவே ஒப்புக் கொள்வார்கள் என்றார்கள். இமாமவர்கள் இவ்விதம் கூறவே கலீபா தமது திருப்தியைப் புன்னகையால் வெளியிடலானார்.

ஒரு மனிதன் தன் மனைவியோடு சச்சரவிட்டுக் கொண்டான். அப்போது கோபத்தில், "நீ என்னிடம் முதலில் பேசாத வரை சத்தியமாக

நான் உன்னிடம் பேசமாட்டேன்'' என்று சத்தியம் செய்து விட்டான். அவன் மனைவியும் கோபத்தில் அவனை நோக்கி, "நீர் என்னிடம் முதலில் பேசாவிட்டால் நானும் உம்மிடம் சத்தியமாகப் பேசவே மாட்டேன்'' என்று கூறிவிட்டாள். இருவரும் கோபம் தணிந்து, சுய நிலையை அடைந்ததும், ஒருவரோடொருவர் பேச இயலாது பெரிதும் வருந்தினார்கள். இருவரும் ஒருவரையொருவர் மிகவும் நேசித்தவர்கள். எனவே, பேசாமல் இருப்பதென்பது அவர்களுடைய விஷயத்தில் வெகு கடினமான காரியமாக இருந்தது. கடைசியில் இதற்கு ஏதேனும் வழியுண்டா என்று, கணவன் பெரியார்கள் பலரிடமும் சென்று முறையிட்டான். செய்த சத்தியத்துக்கு அபராதம் (கப்பாரா) கொடுத்தாக வேண்டும் என்றே யாவரும் கூறிவிட்டனர். கடைசியில் அவன் இமாம் அபூ ஹனீபாவிடம் வந்தான். விஷயத்தைக் கேட்ட அவர்கள், அவன் அபராதம் கொடுக்கத் தேவையில்லை என்றும், தன் மனைவியிடம் பேசலாமென்றும் அனுமதி கொடுத்துவிட்டார்கள்.

இமாமவர்களுடைய இந்தத் தீர்ப்பு சுப்யானுத் தௌரியின் காதுக்கும் எட்டிற்று. இதுகேட்டு வருத்தமுற்ற அவர்கள் இமாமவர்களிடம் வந்து, "அபூஹனீபா, நீங்கள் இப்படித் தீர்ப்புச் சொல்லக் காரணம் யாது?'' என்று வினவினார்கள். உடனே இமாமவர்கள் அந்த மனிதனை அழைத்து வரச் செய்தார்கள். நடந்த சம்பவத்தை மீண்டும் அவன் வாயாலேயே சொல்ல வைத்தார்கள். பின்னர் அவர்கள் சுப்யானை நோக்கி, "இந்த மனிதன் தன் மனைவி தான் முதலில் தன்னிடம் பேச வேண்டும் என்று சத்தியம் செய்தான். அதன்படியே அவளும் முதலில் (அவன் பேசி முடித்த உடனேயே) பேசி விட்டாள். (அவள் பேசிய வாசகம் என்ன என்பது வேறு விஷயமல்லவா!) இந்த நிலையில் அபராதம் ஏது?'' என்று வினவியதும் இமாமவர்களைப் பாராட்டிச் சென்றார்கள்.

இது போன்றே மூடத்தனமாகச் சத்தியம் செய்து விட்டுத் திண்டாடிய இன்னொரு மனிதனுக்கும் இமாமவர்கள் நிவர்த்தி

தந்தார்கள். இந்த மனிதன் அடுக்கடுக்காக மூன்று சத்தியம் செய்து விட்டான். அதாவது, "இன்று நான் வீடுகூடிய அசுத்தம் நீங்க (ஜனாபத்துக்காகக்) குளித்தால் என் மனைவிக்கு மூன்று தலாக்கும் பூர்த்தியாகிவிட்டது'' என்று கூறியவன், அதைத் தொடர்ந்து, "இன்று எனக்கு எந்த நேரத் தொழுகையாவது 'கலா'வானாலும் என் மனைவிக்கு மூன்று தலாக்கும் கிடைத்துவிட்டது'' என்றான். அத்துடன் நில்லாது, "இன்று எனக்கு எந்த நேரத் தொழுகையாவது 'கலா'வானாலும் என் மனைவிக்கு மூன்று தலாக்கும் கிடைத்துவிட்டது'' என்றான். அத்துடன் நில்லாது, "இன்று என் மனைவியோடு வீடுகூடாமலிருந்தாலும் அவளுக்கு மூன்று தலாக்கும் பூர்த்தியாகி விட்டது" என்று சத்தியம் செய்து விட்டான். அவனுக்கு நிதான புத்தி வந்த பிறகு யோசித்துப் பார்த்தால், இதிலிருந்து விடுபட மார்க்கமே காணோம். மனைவியை பிரிவதையன்றி வேறு மார்க்கமிருப்பதாகவே படவில்லை. அதற்கு மனம் இடந்தரவில்லை. தன் வாழ்க்கைத் துணைவியை அவ்வளவு இலகுவில் பிரிந்து விடுவதா என்று பதறினான். உடனே அவன் சட்ட நிபுணர்கள் பலரிடம் போனான். தான் சத்தியம் தவறாமலிக்க என்ன செய்ய வேண்டும் என்று வினவினான். யாராலும் திருப்திகரமாகப் பதில் தர இயல வில்லை; நடுப்பகலில் அவன் இமாம் அபூ ஹனீபாவிடம் வந்து சேர்ந்தான். அவனுடைய சத்தியங்களைக் கேட்ட அவர்கள், அதிலிருந்து அவன் தவறாமலிருக்கச் சுலபமான வழியொன்றைக் கூறினார்கள். "நீ இன்று அஸர் தொழுது முடித்த உடன் மனைவியோடு வீடு கூடு. சூரியன் அஸ்தமனமான உடனேயே முழுக்கு நீங்கக் குளித்து விட்டு, மக்ரிபைத் தொழு. நீ செய்த சத்தியம் முறியாது'' என்று அவர்கள் மார்க்கங் காட்டினார்கள். மகிழ்ச்சியால் பூரித்த அவன் "எப்படி.?'' என வினவினான். "சூரியன் அஸ்தமித்ததும் வேறு நாள் தொடங்கி விடுகிறது. இன்றையப் பொழுது போய், நாளைப் பொழுது வந்து விடுகிறது'' என்று இமாமவர்கள் விளக்கம் நல்கினார்கள்.

இமாமவர்கள், தங்கள் அற்புதமான தீர்ப்புகளிடையேயும், ஒரு மனிதர் என்ற முறையில் தவறு செய்திருப்பதும் கூடுமல்லவா? இதை விளக்கும் சம்பவமும் ஒன்று பேசி வரப்படுகிறது. அது வருமாறு:

இமாமவர்களின் பிற்காலத்தில் மரியாதையான, கல்வியறிவு பெற்ற வாலிபர் ஒருவர் அவர்களிடம் வந்து, "இமாமவர்களே, நீங்கள் எப்போதாவது ஒரு தீர்ப்பளித்துவிட்டுப் பின்னர் அதற்காக வருந்திய துண்டா?" என்று கேட்டார். அதற்கு இமாமவர்கள், "பல ஆண்டுகளுக்கு முன், நான் தீர்ப்புக்கள் அளிக்கத் தொடங்கிய காலத்தில் என்னிடம் சிலர் வந்து, அருகாமையிலுள்ள ஊர் ஒன்றில் நிறைமாதக் கர்ப்பிணியான பெண்ணொருத்தி இறந்து விட்டதாகவும், அவள் வயிற்றிலுள்ள குழந்தை துடித்துக் கொண்டிருப்பதாயும், அதற்கு என்ன பரிகாரம் என்றும் கேட்டனர். அப்போது நான் சிறிது யோசித்துவிட்டு, தாயின் வயிற்றைப் பிளந்து, குழந்தையை வெளியில் எடுத்துக் கொண்டு, மையித்தை அடக்கலாம் என்று தீர்ப்புக் கொடுத்து விட்டேன். அதற்குப் பின், அந்த மையித்தை வேதனைப்படுத்தும் படியாக நாம் தீர்ப்பளித்து விட்டோம் என்ற எண்ணம் என்னுள் உண்டாகலாயிற்று. அதிலும், வயிற்றிலிருந்த குழந்தையை உயிரோடு எடுத்தார்களா, அது பிழைத்ததா என்றும் என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அதனால் என்னுடைய மன வேதனை அதிகமாயிற்று. இதில்தான் நான் தீர்ப்பளித்த பின் பெரிதும் வருந்தினேன்" என்று கூறினார்கள்.

அது கேட்ட அந்த வாலிபர் சொன்னார்: "இமாமவர்களே, அது குறித்து நீங்கள் வருந்தத் தேவையில்லை. அந்த மையித்துத்தான் என் தாய்; நான்தான் அவர் வயிற்றை அறுத்து எடுக்கப்பட்ட குழந்தை. உங்கள் நல்லாசியால் நானும் கல்விமானாக விளங்குகிறேன்" என்று. இது கேட்ட இமாமவர்கள் பெரிதும் மகிழ்ந்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள்.

இமாமவர்கள் உலகிலேயே மாபெரும் அறிவாளிகளில் ஒருவராக இருந்ததால் மட்டும் இவ்விதம் அற்புதமான தீர்ப்புக்களை வழங்கினார்கள் என்று எண்ணிவிடக் கூடாது. அவர்களுடைய சித்தமும், பெருத்த செல்வத்தில் திளைத்தாலும், இம்மையின் பந்தப் பாசங்களை விட்டு விடுபட்டதும், இந்த அறிவுத் தீட்சண்யத்துக்கு

உறுதுணையாக நின்று அற்புதமான- இன்று நாம் பார்த்து வியக்கும்படியான தீர்ப்புகளை வழங்கச் செய்தன. ஒரு சமயம் ஒருவர் இமாமவர்களிடம் வந்து, "பிக்ஹு கற்று, தீர்ப்புகள் எது தர அவசியம்?" என்று வினவினார். இமாமவர்கள் "மன ஓர்மை" என்று பதிலளித்தார்கள். "மன ஓர்மை உண்டாவதெப்படி?" என்று அவர் மீண்டும் கேட்டபோது, "இம்மையின் தொடர்புகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். அதாவது, மனிதன் என்ற முறையில் மிக மிக அவசியமான தேவைகளை மட்டும் கவனித்துக் கொண்டு மற்றவைகளை ஒதுக்கிவிட வேண்டும்" என்று விளக்கியுள்ளார்கள். இவ்விதமே அவர்கள் நடந்து வெற்றி கண்டார்கள். இமாமவர்கள் மார்க்கத் தீர்ப்பு வழங்குவதற்காக எடுத்துக் கொண்ட முன்னேற்பாடுகளையும், அதற்காக அவர்கள் அமைத்த குழுவையும் பற்றிப் பின்னர் படிக்கவிருக்கிறோம்.

இமாமவர்களின் உபதேசம்

இமாமவர்கள் செய்த உபதேசங்கள் எவ்வளவு அனுபவப் பூர்வமானவை, கற்றோர் யாவரும் பின்பற்ற அருகதையானவை என்பதைக் காட்டுவதற்காக அவர்கள் தங்களின் தலைமையான மாணவரும், பின்னர் கலீபா ஹாரூன் ரஷீதின் பிரதான சட்ட ஆலோசராக ஆனவருமான இமாம் அபூ யூஸுபுக்குக் கல்வி பயிலும் காலத்திலும், கல்வி பயின்று முடித்த பின்னும் சொன்ன உபதேசங்கள் அருமையானவை. அவையனைத்தையும் திரட்டி இங்கே தரப்படுகின்றன; (இமாம் அபூஹனீபா சொல்கிறார்;) "அபூ யூஸுப், நீர் ஆட்சியாளர்களோடு, ஏன் கலீபாவோடு கூட நெருங்கிப் பழகக்கூடாது; நெருப்போடு பழகுவதுபோல் அவர்களோடு பழக வேண்டும். அதிகாரிகள், கலீபா ஆகியோரின் அவைக்கு போயாக வேண்டிய அவசியம் உண்டானால், அங்கே உமது கண்ணியத்துக்கும், தன் மானத்துக்கும் இழுக்கு உண்டாக்கும் எச்செயலையும் செய்யக்கூடாது. அத்தகைய சபைகளில் உமக்குத் தெரியாத புது மனிதர்களைக் கண்டால்,

அவர்களிடம் வெகு விழிப்போடு நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில், அவர்களுடைய தன்மை, இயல்பு, அறிவாற்றல் ஆகியவற்றை நீர் அறியாத நிலையில் நீர் அவர்களிடம் பேசக்கூடிய பேச்சு தப்பபிப்பிராயங்களை உண்டாக்கி விடலாம். அவர்கள் உம்மை விட அறிஞர்களாய் இருந்து, அவர்களுடைய மேதாவிலாசத்தை நீர் மரியாதை தெரியாதவர் என்று அவர்கள் எண்ணிடவும் இடமுண்டாகி விடும். அதுபோலவே, அவர்கள் உம்மைவிடத் தாழ்ந்தவர்களாக இருந்து நீர் அவர்களை அளவுக்கதிகமாகக் கௌரவிக்க நேர்ந்தால் அப்போது உம் கௌரவத்துக்கும் கண்ணியத்துக்குமே மாசு உண்டாகி விடும்.

"ஒருக்கால் கலீபா உம்மை நீதி இலாக்காவின் அதிபராக-பிரதம நீதிபதியாக-நியமிக்க விரும்பலாம். அப்படி நீர் நியமனம் பெற்றால், உம் வழிப்படி நடக்க அவர் அனுமதிக்கிறாரா என்பதை முதலில் அவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றேல், பின்னர் உம் மனசாட்சிக்கு முரணாகக்கூட நீர் நடந்து சீரழிய நேரிடும். உமக்குத் தகுதியற்ற, அல்லது நீர் தகுதியற்றவரான எந்தப் பதவியையும் ஒருக்காலும் ஏற்க வேண்டாம்! யாராயினும் சரி, அரச அவையைச் சேர்ந்தவராயினும் சரி, இஸ்லாத்தின் பெயரால் சன்மார்க்கத்துக்கு முரணான ஒரு செயலைப் புதிதாக (பித்அத்தாக)ச் செய்ய முயன்றால், அது தவறு என்பதை நீர் பகிரங்கமாக எடுத்துக் கூற வேண்டும். அப்போது தான் மற்றவர்கள் அத்தகைய செயல்களைச் செய்யாமல் விலகிக் கொள்வார்கள். நீர் உண்மையை எடுத்துக் கூறும்போது, அல்லாஹ் உம்மோடிருந்து நிச்சயம் உமக்கு நல்லுதவி புரிவான். அவனே தன் சன்மார்க்கத்துக்கும் காவல் தருபவனாவான்.

"கலீபாவே தவறு செய்தாலும், அவரைத் தனியே சந்தித்து, "நீங்கள் செய்தது, இன்ன வகையில் தவறாகும். நீதிபதிப் பதவியால் நான் தங்களுக்குக் கட்டுப்பட்டவனாயினும் தாங்கள் தவறு செய்யும்போது அதைச் சுட்டிக் காட்டுவது என் கடமை என்பதை

உணர்ந்து இவ்விதம் செய்கிறேன்" என்று எடுத்துக்கூற வேண்டும். உம் வாதத்துக்கான திருக்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களையும் அவரிடம் தெரிவிக்க வேண்டும். அப்படியும் அவர் அந்தத் தவறை விட்டு விலகாவிடின், அது உம்மையும் பீடித்து விடாமலிருக்க அல்லாஹ்விடம் புகலிடம் தேட வேண்டும்.

"கல்வி பெறுவதையே தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும். பின்னரே நேர்மையான முறையில் ஜீவனோபாயத்துக்கான சம்பாத்தியத்தில் இறங்க வேண்டும். ஏக காலத்தில் கல்வியையும் செல்வத்தையும் அடைய இயலாதாகையால் முதலில் கல்வியைத் தேடிக் கொண்டு, பின்னர் இவ்விதம் ஜீவனோபாயத்தைத் தேடுவதே முறையாகும். அதன் பின்னரே மணம் முடிக்கலாம். குடும்ப நிர்வாகத்துக்குப் போதிய வசதிகளை உண்டாக்கிக் கொண்டு மணமுடிப்பது சாலச் சிறந்ததாகும். வேறொரு கணவனால் குழந்தை பெற்று வைத்துள்ள பெண்ணை மணக்க வேண்டாம்! சாதாரண மக்களோடு, குறிப்பாகச் செல்வர்களோடு நெருங்கிப் பழக வேண்டாம். உமக்குப் பணத்தாசை இருப்பதால் தான் அப்படிப் பழகுகிறீர் என்று பலரும் எண்ணவும், உமக்கு லஞ்சம் தர உம்மை நெருங்கவும் பலர் முன் வந்து விடுவார்கள். கடை வீதிகளில் உலவுவதிலும் கடைகளில் உட்காருவதிலும், வழியில் நடந்து கொண்டோ, மஸ்ஜிதில் அமர்ந்து கொண்டோ எதையும் தின்னும் விஷயத்திலும், கூலிக்குத் தண்ணீர் ஊற்றும் கூலியாட்கள் கையால் தண்ணீர் குடிப்பதிலும் கூட மிகவும் பேணுதலாக இருக்க வேண்டும்.

"யாராவது ஒரு பிரச்சனைக்குப் பதில் கேட்டால், கேள்விக்கு மட்டும் பதில் சொல்லும். உம் இஷ்டப்படி எதையும் மிகைப்படுத்திப் பேச வேண்டாம்! ஷரீஅத்தின் சித்தாந்தங்களின் நுட்பங்களைப்பற்றி எல்லாம் வாதித்துக் கொண்டிருக்கக் கூடாது. உம் மாணவர்களைப் பிறர் உம் சொந்தப் புதல்வர்கள் என்று கருதும் வண்ணம் அன்போடும், பரிவோடும் நடத்த வேண்டும். கல்வி அறிவற்ற சாமான்ய மக்களோடு விவாதத்திலிறங்க வேண்டாம்! அயலூர் சென்றால் அங்குள்ள

உலமாக்கள், அறிஞர்களோடு பழகும்போது அவர்கள் உம்மைத் தமது உறவினர்களைப் போல் கருதிக் கொள்ள இடம் கொடுக்கக் கூடாது. பிரச்சினைக்குப் பதில் கூற நேரும்போது, நன்கு சிந்தித்து, திருப்திகரமாக ஆதாரம் காட்ட முடியக்கூடிய அம்சங்களுக்கே பதில் சொல்ல வேண்டும்.

"விவாதம் நடத்துகையில், நீர் தைரியத்தோடும், உறுதியோடும் நடந்து கொள்ள வேண்டும். சற்றேனும் அச்சமுண்டாயினும் நீர் எண்ணிய கருத்து சரியாக வெளிவராது; பேச்சில் தயக்கமும் குழப்பமும் உண்டாகிவிடும். விவாத முறையை அறியாதவர்களோடும் விதண்டாவாதம் செய்பவர்களுடனும் ஒருக்காலும் விவாதத்தில் இறங்க வேண்டாம். வாதப் பிரதிவாதங்களிடையே கோபப்படக் கூடாது. எந்த வேலையையும் அமைதியாகவும், கண்ணியத்தோடும் செய்ய வேண்டும். எவராயினும், உம்முன் வந்து நின்று பேசாத வரை, அவர் கேட்பதற்குப் பதிலளிக்க வேண்டாம். ஏனெனில், பின்னாலிருந்து குரல் கொடுப்பது பிராணிகளின் இயல்பாகும். பாதையில் நடக்கும் போது வலமும், இடமும் திரும்பிப் பார்க்கக்கூடாது. பொது மக்கள் உபயோகிக்கும் குளிக்குமிடங்களுக்கு (ஹமாம்களுக்கு)ச் சென்றால், அங்கு குளிப்பதற்காக மற்றவர்களை விடக் கொஞ்சம் அதிகமாகக் கட்டணம் கொடுக்க வேண்டும். மேலும், நடுப்பகலில் கண்டிப்பாகக் குளிக்குமிடங்களுக்குப் போகக்கூடாது. யாருடனும் இனிய மொழி பேச வேண்டும். அதுவும் அளவுக்கு அதிகம் பேசக் கூடாது. ஏதாவது சாமான் வாங்க வேண்டுமென்றிருந்தால், நீரே கடை வீதிக்குப் போய் வாங்காமல் பணியாளை அனுப்பி வாங்கி வரச் செய்ய வேண்டும். குடும்ப நிர்வாகத்தைக் கூட நம்பிக்கையான ஒரு பணியாளிடம் ஒப்படைத்து விட்டால் தான் நீர் உமது பணியைச் செவ்வனே செய்யப் போதிய அளவு அவகாசம் கிடைக்கும். ஆட்சியாளர்களுடன் அதிக நேரம் தங்கியிருக்க விரும்பாதீர்! ஏழ்மையிலும் செம்மையாகவே நடந்து கொள்ளும். சாதாரண மக்களிடையில் எழுந்து நின்று ஞானோபதேசம் புரிய

ஆசைப்பட வேண்டாம். அத்தகைய நிலையில் வீண் பொய்க் கதைகளைச் சொல்லும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடும்.

"உம்முடைய மாணவர்களில் யாருக்கேனும் பிக்ஹு வகுப்புக்கள் நடத்த நீர் அனுமதியளித்தால், சிற்சில சமயங்களில் நீரும் சென்று அந்த வகுப்புக்களில் அமர்ந்து கவனிக்க வேண்டும். அப்போது தான் அந்த மாணவரை மற்றவர்கள் கண்ணியமாக மதிப்பார்கள். வகுப்பு நடத்தும் போது அவர் ஏதும் தவறாகக் கூறினாலும் நீர் அதை உடனே திருத்திக் கொடுக்க வேண்டும். இல்லாவிடின் அவர் சொல்வது சரி தான் போலும் என்று மக்கள் எண்ண இடமுண்டாகிவிடும். ஆனால், ஃபிக்ஹுப் பாடங்கள் அல்லாத வேறு பாடங்கள் நடத்துவதற்கு உமது மாணவன் யாருக்கேனும் நீர் சென்று அமர வேண்டுமென்பதில்லை. யாரேனும் நண்பரையோ, வேறு மாணவரையோ அங்கே அனுப்பி, அவன் எப்படிப் போதிக்கிறான் என்று கவனிக்கச் செய்யலாம்.

"சகல விஷயங்களிலும் அல்லாஹ்வுக்கு அஞ்சி, சித்த சுத்தியுடன் நடந்து கொள்வதும், அவன்மீது முழு ஆதரவு வைப்பதும் அவசியமாகும். மக்களுக்காக நீர் செய்யக்கூடிய சகல சேவையையும் அல்லாஹ்வுக்காகவே செய்ய வேண்டும், 'பாங்கு' சப்தம் கேட்டதுமே தொழுகைக்காக விரைந்து மஸ்ஜிதுக்குச் சென்று விட வேண்டும். ஒவ்வொரு மாதத்திலும், இரண்டு நாட்களை நோன்பு நோற்பதற்காக ஒதுக்கி, நோன்பு பிடித்து வர வேண்டும் ஒவ்வொரு நேரத் தொழுகைக்குப்பின் ஏதாவது ஒரு வஜீபாவை ஓதி வருவதும், தினமும் சிறிதளவாவது திருக்குர்ஆனை ஓதுவதும் அவசியமாகும்.

"இம்மையில் சுக போகங்களை அதிகமாக விரும்பக் கூடாது. அடிக்கடி கப்ருஸ்தான் பக்கம் சென்று சிந்திப்பதைப் பழக்கமாக்கிக் கொள்ளவும். வீண் விளையாட்டுக்களை விரும்பாமல் பேணுதலாக நடந்து வாரும். உமது அண்டை வீட்டார்கள் தவறு ஏதும் செய்தால், அதைப் பிரமாதமாக விளம்பரப்படுத்திக் கொண்டிராமல் மறைத்து விட

வேண்டும். மார்க்க முரணான 'பித்அத்'களைச் செய்வோருடன் சேர்ந்து பழகக்கூடாது. மக்கள் கூடி உம்மை இமாமாக நிறுத்தும் வரையில் தொழுகை நடத்த இமாமாக முன் நிற்க வேண்டாம்! உம்மைச் சந்திக்க வருபவர்கள் தாங்களாகவே கலா ஞானச் சர்ச்சைகளில் ஈடுபடு மாறு செய்ய வேண்டும். அவர்கள் அறிவாளி களாயின் உம் சர்ச்சைகளால் பயனடைவர். இன்றேல், உங்களுக் கிடையிலுள்ள அன்பாவது அதிகப்படும்."

இமாமவர்களின் பாடல்கள்

இமாம் அபூ ஹனீபா, இமாம் ஷாபியீயைப்போல் ஏராளமாகக் கவிதைகள் எழுதவில்லையாயினும், சிறிய அளவில் பாடல்கள் எழுதி யுள்ளதாகத் தெரிகிறது. அவர்கள் தாங்கள் பாட்டொன்றில்,

நேர்மையாளர்கள் மீது அன்புகொண்டேன்.
அவர்களுள் ஒருவனாக இல்லாத எனக்கு
அதன்மூலமேனும் அல்லாஹ்
நேர்வழி காட்டுவான் என்று நம்பியே
அவ்விதம் உகப்பானேன்

என்று கூறியுள்ளார்கள். மேலும்,

நீ கல்வியை பற்றிப் பிடித்துக்கொள்!
அறிவு பெறுபவன் அறிவிலனைப் போன்றவனல்லன்.
அறிவற்ற 'பெரிய மனிதன்' கற்றோர் சபையில்
சிறியவனாகிவிடுகிறான்.

என்று ஓர் அடியில் கூறுகிறார்கள். மேலும்,

கல்வியறிவற்றவன் எத்தனை பெரிய செல்வனாயினும்,
கல்வியும், பண்புமுடையவர்களுக்குச்
சமமாக மாட்டான்
நாய்க்கு நீ பொன்னாலான
அணிமணிகளைப் பூட்டினாலும்
அது புலிக்குச் சமமாகுமா?

என்று மற்ற ஓர் அடியில் கேட்கிறார்கள்.

இமாமவர்களும் ஆத்மஞானமும்

இமாமவர்கள் ஆரம்பதிதிலே ஆத்மஞானம் பெறுவதில் ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்றும், அவர்கள் கல்வி கற்றபின், ஆத்மசாபல்யம் கருதித் துறவு பூண்டு காடு சென்று தவம் செய்வதில் ஈடுபட ஆயத்தமானார்கள் என்றும், அப்போது இமாமவர்கள் கனவில் நபி பெருமானார் (ஸல்) அவர்கள் தோன்றி அவர்கள் நாட்டிலிருந்து சன்மார்க்கச் சேவை செய்ய வேண்டும் என்றும், அல்லாஹ், அவர்களைச் படைத்தது தங்கள் சன்மார்க்கத்தை உயிருள்ளதாக ஆக்குவதற்காகத் தான் என்றும், அதன் பின்னரே, அவர்கள் நாட்டிலிருந்து சன்மார்க்கச் சேவை செய்தார்கள் என்றும் கூட சொல்லப்படுகிறது.

அத்துடனின்றி அவர்கள் வழியாக ஆத்மஞானப் போதனை யருளும் தரீக்கா ஒன்றே உண்டாகியுள்ளது என்றும், அதில் பல சூபி மஹான்களின் பெயர்கள் வருகின்றனவென்றும் சொல்லப்படுகிறது. அந்தச் சங்கிலித் தொடரில், இமாம் அபூ ஹனீபாவின் பெயரையடுத்து மஃரூபுல் கர்கிய்யி-ஸரியுஸ் ஸிக்திய்யி-ஷைகு ஷிப்லீ-அபுல் காஸிம் போன்ற பெரியார்களின் பெயர்களும் காணப்படுகின்றன. எனவே, ஆத்மஞானப் பாதையிலும் அவர்கள் குரு நாதராகத் திகழ்கிறார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

இவ்விதம் அவர்களிடம் ஆத்மஞானபோதம் பெற்ற அரசு துறந்த துறவி இப்ராஹீமிப்னு அத்ஹமின் சரிதை மிகவும் ரசமானதாகும். இப்ராஹீமிப்னு அத்ஹம் தங்கள் நப்ஸை அடக்குவதற்காகப் பல கீழான பணிகளைக் கூடச் செய்தார்கள். அரியணையிலிருந்து அரசோச்சிய அவர்கள் பலரிடம் பணியாளாய் அமர்ந்து, அடிபட்டு, குற்றேவல் புரிந்து நப்ஸை அடக்கினார்கள். ஒரு சமயம் அவர்கள் வேலைக்கு அமர்ந்த எஜமானன் ஒருவன், அவர்களைக் கக்கூசிலுள்ள மலத்தை வெளியில் வாரிக் கொட்டும் வேலையை செய்யுமாறு உத்தரவிட்டான். துறவி இப்ராஹீம் மிகுந்த பொறுமையோடு கூடையில் மலத்தை அள்ளிச்

சென்று வெளியிலோரிடத்தில் கொட்டி வந்தார்கள். அப்போது மழை வந்து விடவே அவர்கள் தலைமீது வைத்திருந்த கூடையிலிருந்து மலம் அவர்கள் முகத்தின் வழியாகவும் வழிந்தது. அந்த நாற்றம் சகிக்காமல் மூக்கைச் சுளித்து, அவர்கள் தங்கள் அருவருப்பைக் காட்டினார்கள். உடனே, அந்த மலம் அவர்களை நோக்கிக் கூறுவதுபோலக் கண்டார்கள்: "நான் நேற்றுவரை விலையுயர்ந்த உணவாக இருந்தேன்; என்னைக் கண்டு நாக்கில் நீர் கொட்டினர். ஆனால், அரை நாள் மட்டும் நான் மனிதனுடன் சகவாசம் கொண்டேன். அவன் என்னை இந்த நிலையிலாக்கி விட்டான். நீ இப்போது முகம் சுளித்தாயே, அந்த நிலையை அவனுடைய 'தான்' எனும் பெருமைதான் எனக்குத் தந்துவிட்டது" இவ்வாறு மனித மலம் தங்களை இடித்துரைப்பது போல் கண்ட அவர்கள் தங்களைச் சுத்தமாக்கிக் கொண்டு சிந்திக்கலானார்கள்.

எவ்வளவோ தங்களைப் பணிவாக்கியும், கீழான வேலைகளைச் செய்தும் தங்கள் 'பெருமை'யை அகற்ற இயலவில்லையே. அதை அகற்றுவது எப்படி என்று யோசித்து யோசித்து ஒரு முடிவும் காணாதவர்களாக இமாம் அபூ ஹனீபாவிடம் தங்கள் குறையைக் கூறினார்கள். உடனே இமாமவர்கள், "பெருமையடாங்கலும் அல்லாஹ்வுக்கே" என்று திக்ரு செய்து வாரும்; அதன் மூலம் உமது பெருமை தானாகவே அகன்று விடும்" என்று போதித்ததாகவும், அவ்விதமே அப்பியாசித்து இப்ராஹீ மிப்னு அத்ஹம் வெற்றி கண்டார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

இது போன்றே சூபி மகான் தாவூதுத் தாயீ இமாமுல் அஃலமிடம் இருபது ஆண்டுகள் கல்வி பெற்றார்களென்றும், பின்னர் அவர்கள் இமாமவர்களை நோக்கி, "இதற்குப்பின் நான் எதன்மீது கவனம் திருப்புவது" என்று கேட்டார்கள் என்றும், "நப்ஸை அடக்கி, அமலில் ஈடுபடும்" என்று இமாமவர்கள் கூறினார்கள் என்றும், "அமலில்லாத ஆலிம் உயிரில்லாத உடல் போலாவார்; நப்ஸை அடக்குவது பெரிய சத்தியப் போர் (ஜிஹாத்)" என்று அறிவித்தார்களென்றும், அவ்விதம் தாவூதுத் தாயீ செய்து வெற்றி கண்டார் களென்றும் சொல்லப்படுகிறது.

ஃபிக்ஹின் வரலாறு

இமாம் அபூ ஹனீபா ஃபிக்ஹுச் சட்டத்தை ஒழுங்குபடுத்தப் பாடு பட்டதையும், அதற்காக அவர்கள் மேற்கொண்ட பேணுதலையும், அந்த வகையில் அவர்கள் இஸ்லாமிய உலகுக்குச் செய்துள்ள மகத்தான சேவையையும் பற்றிப் படிக்கும் முன் ஃபிக்ஹுச் சட்டம் என்றால் என்ன, இது எப்போது எப்படி வளர்ந்தது என்ற விபரங்களையெல்லாம் அறிந்து கொள்வது அவசியமாகும். ஹதீஸ் ஆராய்ச்சியில் திளைத்து, ஹதீஸ்களைத் தொகுத்தவர்கள், விளக்கம் கொடுத்தவர்கள் முஹத்திஸ்கள் என்று அழைக்கப்படுவது போல, ஹதீஸ்களின் அடிப்படையில் தனி மனிதனுடையவும், சமுதாயத்துடையவும் நெறி முறைக்கான மார்க்கத்தின் ஏவல் விலக்கல்களையும், அவற்றின் தன்மைகளையும் விளக்கித் தீர்ப்புகள் நல்கியவர்களை ஃபகீஹுகள் என்கிறோம். இந்த வகையில் ஃபகீஹுகளின் கடமை மகத்தானதாகும். இந்த ஃபகீஹுகளையும், இவர்கள் நல்கிய ஃபிக்ஹுச் சட்டத்தையும் பற்றிய வரலாற்றை டெல்லியில் வாழ்ந்த பெரியார் ஷாஹ் ஒலியுல்லாஹ் முஹத்தீஸ் அவர்கள் எழுதிய 'ஹுஜ்ஜத் துல்லாஹில் பாலிகா' என்ற நூலிலிருந்து இங்கே கீழே எடுத்துத் தருகிறோம்:

நபிபெருமானார் (ஸல்) அவர்களுடைய காலத்தில் ஷரீஅத்தின் ஏவல் விலக்கல்களுக்கு ஃபர்லு, வாஜிபு, சுன்னத்து என்ற பல வகையான பெயர்கள் வைக்கப்படவில்லை. ஸஹாபாக்களுக்கு எதிரில் நபிபெருமானார் 'ஒலு'ச் செய்தார்கள் என்றாலும், இது ஃபர்லு, இது சுன்னத்து, இது வாஜிபு என்றெல்லாம் அவர்களுக்கு விளக்கிக் கூற வில்லை. நபி பெருமானார் 'ஒலு'ச் செய்ததைப் பார்த்து, அது போன்றே ஸஹாபாக்களும் ஒலூச் செய்து கொண்டனர். தொழுகையிலும் இவ்வாறுதான் நடந்தது. அதாவது, ஸஹாபாக்கள் எது ஃபர்லு, சுன்னத்து என்றெல்லாம் நபி பெருமானாரிடம் நுணுக்கமாகக் கேட்டுக்

கொண்டிருக்கவில்லை. நபிபெருமானார் தொழுதது போன்றே தாங்களும் தொழுதார்கள். "தங்கள் நபியை அப்படியே அடியொற்றி நடப்பதில் நபி பெருமானாரின் ஸஹாபாக்களைவிடச் சிறந்தவர்களாக நான் வேறு எந்த உம்மத்துக்களையும் காண வில்லை என்று இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களே கூறியுள்ளார்கள். ஆனால், இதே இப்னு அப்பாஸ் (ரலி) கூட நபி பெருமானார் உயிரோடிருந்த வரை பதின்மூன்று மார்க்க விளக்கங்களை (மஸ்அலாக்களை)த்தான் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பதின்மூன்று விளக்கங்களும் கூடத் திருக்குர்ஆன் வசனங்களிலேயே கூறப்பட்டுள்ளவைதாம்.

எப்போதாவது, ஏதேனும் ஒரு சம்பவம் நிகழ்ந்தால் மட்டும் அது சம்பந்தமாக ஸஹாபாக்கள் நபி பெருமானாரிடம் விளக்கம் கேட்டுப் பெற்றுள்ளனர். வேறு சில வேலைகளில், மக்களே ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்யும்போது, அதைப் பார்த்து அது சரியாயின் வேண்டாமென்று தடுக்காமல் நல்லதுதான் என்று கூறியோ, அவசிய மற்றதாயின் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியோ வந்துள்ளார்கள். இத்தகைய தீர்ப்புகள் பெரும்பாலும் கூட்டமாக இருந்த இடங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

எம்பெருமான் (ஸல்) அவர்கள் காலமானபின் இஸ்லாத்துக்கு வெற்றிமேல் வெற்றி கிட்டி வந்ததால் முஸ்லிம்களின் ஆதிக்கத்துக்குள் ளான நிலப்பரப்பும் அதிகமாகிவிட்டது. இந்த நிலையில் புதிது புதிதான பல நிகழ்ச்சிகள் நடக்கலாயின. அவற்றைப் பற்றித் தீர்ப்பளிக்க "இஜ்திஹாத்" (திருக்குர்ஆன், ஹதீஸிலிருந்து மஸ்அலாக்களைப் பிரித்தெடுத்தல்) தேவைப்பட்டது. அத்துடன் மறைமுகமாகக் கூறப் பட்டுள்ள ஏவல், விலக்கல்களுக்கும் விளக்கங்கள் காண வேண்டிய திருந்தது. உதாரணமாக, ஒருவன் தொழுகையில் ஏதோ ஒன்றை விட்டுவிட்டான் என்று வைத்துக் கொள்வோம். தொழுகையிலடங்கிய காரியங்கள் அனைத்தும் பர்ளுகள் தான் என்று திட்டப்படுத்திக் கொள்ள

முடியாத நிலையிலிருந்த போது, தொழுகையில் ஃபர்ளுகள் எத்தனை, வாஜிபுகள் எத்தனை என்று திட்டப்படுத்த வேண்டிய நிர்பந்தம் உண்டாகிவிட்டது. இல்லாவிட்டால், இந்த நபர் விட்ட விஷயம் எத்தகையது, அது விடுபட்டதால் தொழுகை கூடிவிட்டதா, அல்லவா என்பதை அறிந்து கொள்ள இயலாதல்லவா! இவ்விதம் ஃபர்ளு, வாஜிப், சுன்னத் முதலியவைகளைப் பிரிப்பதற்கும் மூலாதாரமான விதிமுறைகள் அவசியமாயின.

இந்த நிலையில் எத்தனையோ விஷயங்களில் ஸஹாபாக்களின் ஒரு முகமான முடிவு என்று எதுவுமில்லாமலும் இருந்தது. தீர்ப்புகளில் பல அபிப்பிராயங்கள் வெளியாயின. சிற்சில விஷயங்களில் தான் ஒரு முகமான முடிவு உண்டாகியிருந்தது.

நபிபெருமானாரின் காலத்தில் உண்டாகியிராத, பின்னர் உண்டான நிகழ்ச்சிகள் பலவற்றை எடைபோட திருக்குர்ஆன், ஹதீஸ் அடிப்படையிலான சுய முடிவும், அனுமானமும் (இஜ்திஹாதும், கியாசும் தேவைப்பட்டன. இந்தச் சுய முடிவு இஜ்திஹாத்), அனு மானம் (கியாஸ்) ஆகியவற்றுக்குக் கூட அப்போது எந்த மூலதாரமு மிருக்கவில்லை. எனவே, அது பற்றியும் அபிப்பிராய பேதங்கள் பல எழுந்தன. இதனால், மஸ்அலாக்களையும், அஹ்காம் (மார்க்க விதிமுறை)களையும் உருவாக்குவதற்கான தனி வழிமுறைகள் ஸஹாபாக்களின் காலத்திலேயே ஏற்பட்டுவிட்டன.

இவ்விதம், (திருக்குர்ஆன், ஹதீஸ்களான) மூலங்களிலிருந்து 'இஜ்திஹாத்' செய்யக்கூடிய திறமையும் பண்பும் பெற்றிருந்த சிறந்த மகான்களான ஸஹாபாக்களே, அக்காலத்தில் 'முஸ்தஹித்', 'ஃபகீஹ்' என்ற பெயர்களால் அழைத்துப் போற்றப்பட்டனர். இவர்களில் வெகு பிரசித்தமாக விளங்கியவர்கள் நால்வர்தாம். அவர்கள் முறையே ஹஜ்ரத் உமர்(ரலி), ஹஜ்ரத் அலீ (ரலி), ஹஜ்ரத் அப்துல்லா ஹிப்னு மஸ்ஊது (ரலி), அப்துல்லா ஹிப்னு அப்பாஸ் (ரலி) ஆகியவர்களாவர். இவர்களுள் ஹஜ்ரத் அலீ (ரலி), அப்துல்லாஹிப்னு மஸ்ஊது (ரலி) ஆகிய இருவரும், பெரும்பாலும் கூஃபாவிலேயே இருந்து வந்ததால்

அந்தப் பகுதியில் இவ்விருவர்களுடைய தீர்ப்புக்களே பரவியிருந்தன. இதுபோன்று ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களும், அப்துல்லாஹிப்னு அப்பாஸ் (ரலி) அவர்களும் ஹரமைனில் (மக்கா, மதீனாவில்) வாழ்ந்திருந்ததால், அங்கே இவ்விருவர்களுடைய தீர்ப்புக்கள் பரவியிருந்தன.

ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்கள் சிறு வயது முதலே எம்பெருமானார் (ஸல்) அவர்களோடு நெருங்கிப் பழகும் பாக்கியம் பெற்றிருந்தார்கள். அதனால், அவர்கள் மற்ற யாரையும் விடப் பெருமானாரின் சொல், செயல்களையும், அவற்றின் அடிப்படைகளையும் வெகு நன்றாக அறிந்து கொண்டிருந்தார்கள். மற்றவர்களைவிட ஹஜ்ரத் அலீ (ரலி) அதிகமான ஹதீஸ்களின் ரிவாயத்துச் செய்தது பற்றி அவர்களிடம் வினவுவேன், அவர்கள் பதிலளிப்பார்கள். சில சமயம் நான் மௌன மாக இருந்தாலும் அவர்களே சொல்வார்கள். அதனால் தான் நான் மற்றவர்களைவிட அதிகமான ஹதீஸ்களைத் தெரிந்து கொண் டுள்ளேன்" என்று பதிலளித்துள்ளார்கள். மேலும் ஹஜ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கு இயற்கையாகவே மிகவும் அதிகமான புத்திக் கூர்மை உண்டாகி இருந்தது. அதனால் "ஓர் இக்கட்டான மஸ்அலா நிகழும் போது அங்கே இறைவன் ஹஜ்ரத் அலீயையும் ஆஜராக்கட்டும்" என்று ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களே சிலாகித்துப் பேசியுள்ளார்கள். "எந்தப் பிரச்சினைக்கும் ஹஜ்ரத் அலீயின் தீர்ப்புக் கிடைத்துவிட்டால் போதும்" என்று ஹஜ்ரத் அப்துல்லாஹிப்னு மஸ்ஊது (ரலி) அருளியுள்ளார்கள்.

ஹஜ்ரத் அப்துல்லா ஹிப்னு மஸ்ஊதும் ஹதீஸ், ஃபிக்ஹு ஆகிய இரண்டு துறைகளிலும் நிபுணத்துவமுடையவர்களாக விளங்கினார் கள். அவர்களும் நபிபெருமானாரோடு மிகவும் நெருங்கிப் பழகி யுள்ளார்கள். அபூ மூஸா என்பவர் சொல்கிறார்; "நாங்கள் யமனி லிருந்து மதீனா வந்து சில நாட்கள் தங்கியிருந்தோம். அப்போ தெல்லாம் அப்துல்லா ஹிப்னு மஸ்ஊது (ரலி), நபி பெருமானாரிடம் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்தார்கள். அதைப் பார்த்த நாங்கள் அவர்களும் நபி பெருமானாரின் குடும்பத்தவர் தாமோ என்று

சந்தேகத்திலானோம்" மேலும், "திருக்குர்ஆனின் எந்த வசனமும் எந்தச் சந்தர்ப்பத்தில், ஏன் இறங்கிற்று என்பது பற்றி எனக்குத் தெரியாமலிராது" என்றும், "திருக்குர்ஆன் சம்பந்தமாக என்னைவிட அதிகமாக யாருக்கும் விஷயங்கள் தெரியாது. இது ஸஹாபாக்கள் அனைவருக்கும் தெரியும்" என்றும் அப்துல்லா ஹிப்னு மஸ்ஊது (ரலி) அவர்களே கூறியுள்ளார்கள்.

அப்துல்லாஹிப்னு மஸ்ஊது (ரலி) அவர்கள் தங்களுக்கே உரிய ஒரு முறையோடு ஹதீஸையும், பிக்ஹையும் போதித்துக் கொண்டிருந் தார்கள். அந்தச் சமயத்தில் அவர்களிடம் அக்காலப் பிரபலஸ்தர்கள் பலர் பாடம் கேட்டனர். அவர்களுள் அஸ்வத், உபைதா, ஹாரித், அல்கமா ஆகியோர் முக்கியமானவர்களாவர். குறிப்பாக இந்த அல்கமா நபிபெருமானாரின் காலத்திலேயே பிறந்து விட்டார்கள்; ஹஜ்ரத் உமர் உதுமான், அலீ, ஆயிஷா, ஸஅத், ஹுதைபா, காலித் பின்வலீத், கப்பாப் போன்ற மாபெரும் ஸஹாபாக்களிடமிருந்தெல்லாம் ஹதீஸ் களைக் கேட்டவர்கள். இவர்கள் அப்துல்லாஹிப்னு மஸ்ஊதுடன் மிகவும் நெருங்கிப் பழகி, சகல விஷயங்களிலும் அவர்களையே அடியொற்றி நடந்தார்கள். அதனால், "அல்கமாவைப் பார்த்தவர்கள் அப்துல்லாஹிப்னு மஸ்ஊதைப் பார்த்தவர்கள் போன்றவர்களே" என்ற பேச்சும் நிலவலாயிற்று. "எனக்குத் தெரிந்ததையெல்லாம் நான் அல்கமாவுக்குப் போதித்துவிட்டேன்" என்று அப்துல்லாஹிப்னு மஸ்ஊதே கூறியுள்ளார்கள். ஸஹாபாக்கள் பலர் பல சந்தேகங்களை அல்கமாவிடம் கூறித் தெளிவு பெற்றுள்ளார்கள். அல்கமாவுக்குச் சமமாக விளங்கியவர்கள் அஸ்வத் ஒருவர் தாம்.

அல்கமா, அஸ்வத் ஆகிய இரண்டு மேதைகளும் காலமானபின், 'பகீதுல் இராக்' (இராக்கின் ஒப்பற்ற செல்வம்), 'ஸைரபில் ஹதீஸ்' (ஹதீஸ்களைச் சேர்த்து வைத்த முதலாளி) என்றெல்லாம் புகழ்பெற்ற மாமேதை இப்ராஹீம் நக்கயி அவர்கள் கலாபீடத்திலமர்ந்து பிக்ஹை வளர்த்து வந்தார்கள் இந்த மாமேதை காலமானபோது, அதைக் கேள்வியுற்ற 'அல்லாமத்துத் தாபியீன்' என்னும் பெயர் பெற்ற இமாம் ஷுஅபியவர்கள், "தனக்கு நிகராக யாரையும் விடாமல் இப்ராஹீம்

போய் விட்டார்களே!'' என்று கூறி வருந்தினார்கள். அப்போது அருகிலிருந்த ஒருவர், "ஏன், ஹஸன் பஸரி, இப்னு ஸீரின் போன்ற பெரியார்கள் இல்லையா?'' என்று கேட்டதற்கு, "ஆம், ஹஸன் பஸரி, இப்னு ஸீரின் என்ன, பஸரா, கூபா, ஸிரியா, ஹிஜாஜ் ஆகிய இடங்களில் எங்கே தேடினாலும் இப்ராஹீமுக்கு நிகர் இப்ராஹீமாகவே இருந்தார்கள்'' என்று ஷுஅபி பதிலளித்தார்கள்.

இப்ராஹீம் நக்கயியின் உதவியால் ஹதீஸ்களையும், ஹஜ்ரத் அலீ (ரலி), அப்துல்லாஹிப்னு மஸ்ஊது போன்ற பெரியார்களின் தீர்ப்புகளையும் ஆதாரமாக வைத்து 'பிக்ஹு மஸ்அலா'க்களின் தொகுப்பு ஒன்று உருவாயிற்று. ஆனால், அது நூலுருவில் எழுதப்படாது இப்ராஹீம் நக்கயி அவர்களின் மாணவர்களுடைய இதயங்களி லேயே பதிக்கப்பட்டிருந்தது. குறிப்பாக, நக்கயியின் தலையான மாணவரும், இமாம் அபூ ஹனீபாவின் குரு நாதருமான ஹம்மாது அவர்களே அதன் பெரும் பகுதியை மனனம் செய்திருந்தார்கள். இதனாலேயே, இப்ராஹீம் நக்கயி காலமானபின், அவர்கள் ஸ்தானத் தில் அமர்ந்து ஃபிக்ஹுப் பாட போதனை புரியும் பொறுப்பை மக்கள் ஹம்மாதின் மீது சுமத்தினர். ஹிஜ்ரி 120ல் அவர்கள் காலமானபோது அந்தப் பொறுப்பு அவர்களிடமிருந்து இமாம் அபூ ஹனீபா அவர்களிடம் வந்து விட்டது. அதுவரை இந்த ஃபிக்ஹு ஒரு சிலர் மட்டும் அறிந்த விஷயமாக இருந்தது. இமாம் அபூ ஹனீபா அதை உலக முஸ்லிம்கள் யாவரும் அறிந்து கொள்ளும் வகையைச் செய்தார்கள்.*

** ஃபிக்ஹின் சரிதையையே சுருக்கமாகக் கூறுவதுபோல் இமாம் அபூ பக்ரின்னஜீபில் காலி என்ற பெரியார் மிகுந்த ரசமாகக் கூறியுள்ளதாவது; "ஃபிக்ஹு எனும் பயிருக்கு அப்துல்லாஹிப்னு மஸ்ஊது (ரலி) விதை தூவினார்கள். அல்கமா (ரலி) அதற்குத் தண்ணீர் பாய்ச்சினார்கள், இப்ராஹீம் நகயி கதிர் அறுத்தார்கள். ஹம்மாது இப்னு அபீ ஸுலைமான் சூடடித்தார்கள். இமாம் அபூ ஹனீபா அதை மாவாக்கினார்கள். காஜீ அபூ யூஸுப் அந்த மாவைக் குழைத்துப் பிசைந்தார்கள். இமாம் முஹம்மது இப்னு ஹஸன் அதை ரொட்டியாகச் சுட்டார்கள். மற்றும் இமாம்கள் அதை விருந்துக்குப் படைத்தார்கள். நாமனைவரும் அதை உண்டு பசி தீர்க்கிறோம்.''*

ஃபிக்ஹை வளர்த்த அபூ ஹனீபா

இமாம் அபூ ஹனீபா தோன்றிய காலநிலையை, சுயநலமே உருவான எண்ணற்ற கூட்டங்களும், கோஷ்டிகளும் தத்தம் நலனுக்காக மார்க்கத்தையே விற்று விடவும் கூடத் துணிந்து நின்றதையும் முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறோம். இத்தகையவர்கள் தத்தமக்கு வசதி தரக்கூடிய முறையில் நாயக வாக்கியங்களை உண்டாக்கி, சாதாரண மக்கள் கண்ணில் மண் தூவலாயினர். உண்மையில் நபி பெருமானாரின் உண்மையான கடைப்பிடிப்புகள் யாவை? அவர்கள் உண்மையிலேயே சொன்னவை யாவை? என்பதை மக்கள் அறிய முடியாத அளவு மக்களிடையே குழப்ப முண்டாக்கப்பட்டிருந்தது. இதனால், அவர்களுடைய வணக்கங்களும், வாழ்க்கை முறையுமே குழப்பமானவையாக ஆகலாயின. எனவேதான், அபூ ஹனீபா துணிந்து முன்வந்து மார்க்கச் சட்டத்தைத் தொகுத்து வழங்க வேண்டிய அவசிய முண்டாயிற்று. இதற்குத் திருக்குர்ஆனையும், ஹதீஸையும் ஆதாரமாகக் கொண்டு அவர்கள் வேலை செய்ய நேர்ந்தாலும் பொய் ஹதீஸ்கள் ஏராளமாகச் சேர்த்து விடப்பட்டிருந்த நிலையில் அவைகளைப் பிரித்தறிய வேண்டிய பெரிய பொறுப்பும் அவர்களுக்கு உண்டாயிற்று. உண்மையான (ஸஹீஹான) ஹதீஸ் களைத் தட்டிப்பார்த்துத் தொகுக்க, இமாமவர்களுக்குப் பின்னர் இமாம் புகாரி (போன்ற ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களின் தொகுப்பாளர்கள்) வர வேண்டுவதிருந்தது. இமாம் அபூ ஹனீபா ஒரு பொதுச் சட்டதைப் பின் பற்றி ஹதீஸ்களைத் தேர்ந்தெடுத்தார்கள். அதாவது, எம்பெருமானார் (ஸல்) அவர்கள் வாழ்க்கை முறையை கவனிப்பவர்கள், அவர்கள் பகுத்தறிவுக்கு முரணான எதையும் கூறியிருப்பார்கள், செய்திருப்பார் கள் என்று கற்பனை கூடச் செய்ய இயலாது. எனவே, இமாம் அபூ ஹனீபா முதலில் பகுத்தறிவுக்கு முரணான ஹதீஸ்களையெல்லாம் ஒதுக்கினார் கள். மற்றவற்றிலும் பலமான ஆதாரமுள்ளவைகளை எடுத்துக் கொண்டார்கள். திருக்குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் தங்கள் முடிவுகளைக் கண்டார்கள். அவர்கள் கண்ட முடிவுகள் ஹனபிகள்

என்று அழைக்கப்படும் பலகோடி முஸ்லிம்களால் பின்பற்றப் படுகின்றன. அவை யாவும் எப்பெருமானாரின் ஒழுக்கத்தையும், திருக்குர்ஆனையும் அடிப்படையாகக் கொண்டவை என்பதை நபிபெருமானாரே ஒப்புக் கொண்டு, இமாமவர்கள் கனவில் அவர்களுக்குத் தங்கள் ஆசியை நல்கியுள்ளார்கள்.

இமாம் அபூ ஹனீபா சுய அனுமானம் (கியாஸ்), செயலுக்குப் பொருந்தும் இயல்பு (இஸ்திஹ்ஸான்) ஆகிய இரண்டின்படியும் பல முடிவுகளை அடைய வேண்டியதாயிற்று. அதாவது, திருக்குர் ஆனிலோ, ஹதீஸிலோ நேரடியாகப் பதில் கிடைக்காத ஒரு பிரச்சினை விஷயத்தில் அதையொத்த, அல்லது அதற்கு நேர் முரணான ஒரு பிரச்சினைக்கு முடிவு காண்பதுதான் 'அனுமானம்' (கியாஸ்) ஆகும். இதற்கு ஆதாரமாக நபிபெருமானார் (ஸல்) அவர்களுடைய காலத்தில் நடந்த சம்பவமொன்று சுட்டிக்காட்டப்படுகிறது. அதாவது ஹஜ்ரத் முஆத் இப்னு ஜபல் (ரலி) அவர்களை, நபி பெருமானார் எமனுக்கு நீதிபதியாக நியமித்தனுப்பினார்கள். அவர்கள் புறப்படும் சமயம் நபிபெருமானார், அவர்களை நோக்கி, "ஒரு பிரச்சினை எழுந்தால் நீர் எப்படி முடிவு செய்வீர்?" என்று வினவினார்கள். "அல்லாஹ்வின் வேதநூலில் (திருக்குர்ஆனில்) சொல்லப்பட்டுள்ளபடி" என்று அவர்கள் பதிலளித் தார்கள். "அல்லாஹ்வின் வேதநூலில் அதற்குப் பதில் கிடையாவிடின்?" என்று நபி பெருமானார் கேட்டார்கள். "அப்படியானால், அல்லாஹ் வின் திருத்தூதரின் முன்மாதிரியை வைத்து முடிவு கட்டுவேன்" என்று முஆத் பதிலளித்தார்கள். "அந்த முன்மாதிரியிலோ, திருக்குர்ஆனிலோ பதில் கிடையாவிடின்?" என்று நபி பெருமானார் கேட்கவே, "அப்படியாயின், தயக்கமின்றி என் சொந்த முடிவுப்படி (அஜ்தஹிது ரை) தீர்ப்பளிப்பேன்" என்று முஆத் கூறினார்கள். உடனே நபி பெருமானார் (ஸல்) அவர்கள் மகிழ்ச்சியுடன் முஆதின் நெஞ்சில் தங்கள் கையால் தட்டியவர்களாக, "அல்லாஹ் வின் தூதரின் தூதர் இவ்வாறு அவருக்கு, (அல்லாஹ்வின் தூதருக்குத்) திருப்தி தருமாறு பதிலளிக்கச் செய்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்!" என்று அருளினார்கள்.

இந்த அடிப்படையிலும், பலர் நினைப்பது போல இமாம் அபூ ஹனீபா தங்கள் சொந்த அபிப்பிராயப்படி தீர்ப்பளித்தவர்களல்லர். திருக் குர்ஆன், ஹதீஸ் தொடர்பின்றிச் சொந்த முடிவுப்படி தீர்ப்பளிப்பதற்குத் தான் 'ரை' என்று பெயர் கொடுக்கப்பட்டது. இவ்விதம் 'ரை'யின் அடிப் படையிலேயே இமாமவர்கள் தீர்ப்பளித்தார்கள் என்று கூறுவது சரியல்ல. இவ்விதமன்றி நாம் முதலில் சொன்னபடி திருக்குர்ஆன் அல்லது ஹதீஸில் ஒரு பிரச்சினைக்கு நேரடியான பதில் கிடைக்கா விடினும், அதற்கு மாற்றமான அல்லது, அதுபோலொத்த ஒரு விஷயத்தில் காணப்படும் பதிலை வைத்துப் முன்னுள்ள பிரச்சினைக்கு முடிவு காண்பது 'கியாஸ்' (அனுமானம்) ஆகும். இதுதான் இமாம் அபூ ஹனீபா கையாண்ட அனுமான முறையாகும்.

'இஸ்திஹ்ஸான்' என்பதும் 'கியா'ஸின் ஓர் அம்சம்தான். ஒரு விஷயம் ஒரு பிரச்சினைக்குப் பொருந்துமா என்று பொருத்தத்தைக் கவனித்து முடிவளிப்பதே 'இஸ்திஹ்ஸான்' ஆகும். உதாரணமாக, கழுவும் ஒரு பொருளைப் பிழிய வேண்டும் என்கிறோம். இது துணி போன்ற பொருள்களின் விஷயத்தில் தான் பொருத்தமாகும். மரம் அல்லது உலோகத்தால் ஆன பொருள் விஷயத்தில் இது பொருந்தாது. இப்பொருட்கள் விஷயத்தில் கழுவியதும் துடைக்க வேண்டும் என்பதே பொருந்தும். அதுவே இவற்றுக்கான 'இஸ்திஹ்ஸான்' ஆகும். ஒருவன் தான் வாங்கும் பொருளைப் பார்க்க வேண்டும் என்பது சட்டம். அதனால், இனித் தயாரிக்கப்படவிருக்கும் ஒரு பொருளை ஒருவன் விலை பேசி விற்பது சட்டப்படி செல்லாது. ஆனால், இது திருக்குர்ஆன், ஹதீஸால் தடுக்கப்படாதது. வர்த்தகர்களிடையே புழக்கத்திலுள்ளது, வாங்குபவனுக்கு இன்றியமையாதது என்றிருப்பின் இப்படி விற்பதும் செல்லும் என்பது இஸ்திஹ்ஸான். இமாம் அபூ ஹனீபாவையன்றி, இமாம் மாலிக்கும் இந்த முறையைச் சில சமயங்களில் கையாண்டுள் ளார்கள். இமாம் அபூ ஹனீபா திருக்குர்ஆன், ஹதீஸுடன், இஜ்மா, கியாஸ் ஆகியவற்றின் அடிப்படையில் ஃபிக்ஹுச் சட்டத்தை ஒழுங்கு படுத்தி உருக்கொடுக்க ஒரு குழுவையே அமைத்துவிட்டார்கள்.

முஸ்லிம் உலகின் பொதுவான சூழ்நிலை ஒரு பக்கமிருக்க, இமாமவர்களுக்குப் பல்வேறு ஊர்களிலுமிருந்து ஏராளமான கேள்விகள் வந்து குவிந்து கொண்டிருந்தன. அத்துடன், அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட காஜிகள் என்ற நீதிபதிகளும் தங்கள் தீர்ப்புகளில் பல பெரிய தவறுகளைச் செய்து கொண்டிருந்தனர். எனவே, பிக்ஹை ஒழுங்குப்படுத்திச் சட்டத்தை உருவாக்கும் வேலையில் இமாமவர்கள் தீவிரமாக ஈடுபட வேண்டியதாயிற்று.

இதுபற்றிப் பல நாட்களாக எண்ணிக் கொண்டிருந்த இமாமவர்களை ஒருநாள் ஒரு சிறிய நீதிபதி அளித்த சிறியதொரு தீர்ப்பு உடனே செயலில் இறங்கத் தூண்டியதாகச் சொல்லப்படுகிறது. இரண்டு மனிதர்கள் குளிக்குமிடம் ஒன்றுக்குச் சென்றனர். அவர்கள் தங்களிடமிருந்த பணத்தைக் குளிப்பறைக் காவல்காரனிடம் ஒப்படைத்து, இருவரும் வந்து கேட்கும் போது அதைத் தரும்படி கூறிவிட்டுக் குளிக்கப் போனார்கள். இருவரில் ஒருவன் முன்பாக வெளியில் வந்து பணத்தைக் கேட்கவே காவல்காரன் பணத்தை அவனிடம் கொடுத்து விட்டான். பின்னர், மற்றவன் வந்து பணத்தைக் கேட்டான். "உன் கூட்டாளி வாங்கிப்போய் விட்டான்" என்று காவலாளி கூறியதை அவன் ஏற்கவில்லை. காவல்காரனை அவன் நியாய ஸ்தலத்துக்கு இழுத்துச் சென்றான். நீதிபதி, "காவலாளி பணத்தை ஒருவனிடம் கொடுத்தது தவறு; எனவே, மீண்டும் அவன் பணத்தைக் கொடுக்க வேண்டும்" என்று கூறிவிட்டார்.

அந்த ஏழைக் காவல்காரன் அழுது கொண்டு இமாமவர்களிடம் வந்து இதை முறையிட்டான். உடனே இமாம் அபூ ஹனீபா அவனிடம், "நீ அந்த மனிதனிடம் அவன் கூட்டாளியை அழைத்து வந்தால் பணம் தந்து விடுவதாகக் கூறு" என்று யோசனை கூறி அனுப்பினார்கள். இருவரும் வந்து கேட்டால் தானே பணம் கொடுக்க வேண்டும்! இந்தச் சம்பவம் நடந்த அன்றுதான், நீதிபதிகள் மட்டுமன்றி சாதாரண மக்கள் கூடத் தவறு செய்யாமலிருக்க வேண்டுமானால் மார்க்கச் சட்டம், மார்க்கத் தீர்ப்புகள் ஒழுங்காக எழுதப்பட வேண்டும்

என்று தீவிரமாக முடிவு செய்து, அதற்கான குழுவையும் அமைத்தார்கள். அந்தக் குழுவில் மொத்தம் நாற்பது பேர்கள் சேர்க்கப்பட்டனர். இவர்கள் யாவருமே திருக்குர்ஆனிலும், ஹதீஸிலும் திறமையான ஆராய்ச்சியுள்ளவர்களாவர். இவர்கள் ஒவ்வொருவருமே அக்காலத்தில் மேதைகளாக யாவராலும் போற்றப் பட்டவர்களாவர். இவர்களுள் இமாமவர்களுடனே சதாவுமிருந்து பல்வேறு பாடங்களிலும் விசேஷத் தேர்ச்சி பெற்றிருந்த யஹ்யா பின் ஜாயிதா, ஹப்ஸு பின் கியாஸ், காஜி அபூ யூஸுப், தாவூதுத் தாயீ, ஹபான் மற்றும் மந்தல், இமாம் ஜஅபர், இமாம் முஹம்மது காஸிம், அஸது, யூஸுப் பின் காலித், ஆபியா அஜ்தி, அபூ அலீ மஹ்ரி ஆகியோர் முக்கியமானவர்களாவர். சபையின் முடிவை எழுதும் பணியை யஹ்யா என்பவர் செய்ததாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் குழு ஹிஜ்ரி 121லிருந்து ஹிஜ்ரி 150 வரை சுமார் முப்பதாண்டுகள் (அதாவது, இமாமவர்கள் மன்சூரால் சிறை செய்யப்பட்ட பின்னரும் கூட) சட்டங்களை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தது.

மஸ்ஜிதின் ஒரு பகுதியில் இமாமவர்கள் பாட போதனை செய்யும் இடத்திலேயே இந்தக் குழு அமர்ந்து வேலை செய்தது. அங்கே இமாமவர்கள் தலைமையில் இரண்டு வரிசைகளில் இந்த நிபுணர்கள் யாவரும் அமர்ந்திருப்பார். முதலில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையை ஒருவர் படிப்பார். அனைவரும் அதற்கான தமது தீர்ப்புகளைக் கூறவேண்டும். யாவருடைய முடிவும் ஒன்று பட்டிருந்தால் அது உடனேயே எழுதிக் கொள்ளப்படும். அங்கத்தினர்கள் இங்கே சர்வ சுதந்திரத்தோடு விவாதிக்கலாம், யாவருக்கும் முழு வாய்ப்புமளிக்கப் பட்டிருந்தது. சில சமயங்களில் வாதப் பிரதிவாதங்கள் நாட்கணக்கில் நீண்டு கொண்டு போனதுமுண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் இமாமவர்கள் பொறுமையோடும், கவனமாகவும் கேட்டுக் கொண்டிருப்பார்கள்; யாவரும் ஏற்றுக் கொள்ளும்படியான ஆதாரங்களுடன் விளக்குவார்கள். சில சமயங்களில் உறுப்பினரில்

யாரேனும் இமாமவர்களுடைய முடிவை ஏற்பதில்லை. அப்பொழுது, அந்தத் தீர்ப்புக்குக் கீழே, "இது சம்பந்தமாக இன்ன உறுப்பினருடைய முடிவு இது" என்று அவருடைய மாறுபட்ட முடிவு குறிக்கப்பட்டிருக்கும் இந்தக் குழுவுக்கு ஒரு முக்கியமான நிபந்தனை என்னவென்றால், அதில் மூன்றில் ஒன்று, அல்லது இரண்டு பங்கு அங்கத்தவர் மட்டும் இருந்தால் போதாது; சபை உறுப்பினர் அனைவரும் வந்தால் தான் விவாதத்தைத் தொடங்கலாம். விவாதம் நடந்து கொண்டிருக்கும் போது யாரேனும் எழுந்து வெளியில் போனால் கூட, அவர் திரும்பி வரும் வரை விவாதம் நிறுத்தப்பட்டிருக்கும். இவ்வாறு வெகு எச்சரிக்கையாக விழிப்போடு முப்பது ஆண்டுகள் பாடுபட்டு ஃபிக்ஹுச் சட்டத்தை ஒரு சரியான அமைப்பில் கொண்டு வந்தார்கள். (இந்தச் சபையில் ஒரு பிரச்சினைக்கு முடிவெடுக்கப்பட்டால், உடனே 'அல்லாஹு அக்பர்' என்று தக்பீர் முழுக்கப்படும் என்றும் சிலர் தெரிவிக்கின்றனர்.)

ஃபிக்ஹுல் அக்பர்

இந்தத் தொகுப்பில் முதல் அத்தியாயத்தில் பாபுத் தஹாரத்தும் (ஒலு, குஸுல், தயம்மும் போன்ற உடல் சுத்தி செய்தல் சம்பந்தமான விஷயங்கள்), இரண்டாம் அத்தியாயத்தில் தொழுகை நோன்பு, மற்று முள்ள வணக்கங்களை விளக்கும் விஷயங்கள் அடங்கியிருந்தன. மூன்றாம் அத்தியாயம் முஆமலாத் (வர்த்தகம், தொழில், பொருளா தாரம் பற்றிய விஷயங்கள்) பற்றியது. பத்தாவது (கடைசி) அத்தியாயம் மீராஸ் (பாகப் பிரிவினை) பற்றியது. இமாமவர்களுடைய காலத்தி லேயே இந்த நூல், அக்கால அறிஞர்கள் பலராலும் போற்றிக் கொண்டாடப்பட்டது. அவர்களோடு பல விஷயங்களில் அபிப்பிராய பேதம் கொண்டிருந்த பெரியார்கள் கூட இந்தத் தொகுப்பை மிகவும் உவந்து படித்து வந்தனர். சுப்யானுத் தௌரி அவர்கள் இதிலிருந்து 'கிதாபுர் ரிஹன்' (அடமானம், ஒத்திவைப்பு) என்ற பகுதியை மட்டும் எப்படியோ பெற்றுப்படித்து, மனப்பாடம் செய்து கொண்டிருந்தார்கள்.

ஜாயிதா என்பவர் சொல்கிறார்: "நான் ஒரு சமயம் பெரியார் சுப்யானைக் காணப் போயிருந்தேன். அப்பொழுது அவர்கள் அபூ ஹனீபாவின் 'கிதாபுர் ரிஹ'னைப் படிப்பதைப் பார்த்துவிட்டு, 'நீங்களும் இமாம் அபூ ஹனீபாவின் கிதாபைப் படிக்கிறீர்களா?" என்று வியப்புடன் வினவினேன். 'அந்தோ, இமாமவர்களின் கிதாபின் முழுப் பகுதியும் எனக்குக் கிடைக்கவில்லையே!" என்று அவர்கள் வருந்தினார்கள்."

இமாமவர்களிலிருந்து மாறுபட்ட கருத்துடைய அக்கால அறிஞர்கள் யாருமே இந்தத் தொகுப்பிலுள்ள விஷயங்களுக்கு மறுப்புக் கொடுக்க முடியவில்லை. இமாம் ராஜி கூடத் தங்களுடைய 'மனாகிபுஷ் ஷாபியீ' என்ற நூலில், "அபூ ஹனீபாவும், அவர்களுடைய குழுவினரும் ஒழுங்குபடுத்தி வெளியிட்டிருந்த ஃபிக்ஹுத் தொகுப்பை அக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த எந்த முஹத்திஸும் சரியில்லை என்று கூறவே இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால், இமாம் ஔஜாயி அவர்கள் இந்தத் தொகுப்புக்கு மறுப்பொன்று எழுதி 'கிதாபுஸ்ஸியர்' என்ற பெயரால் அதை வெளியிட்டார்கள். அதற்குக் காஜி அபூ யூஸுப் மறுப்பொன்று எழுதி ஔஜாயினுடைய மறுப்புக் களெல்லாம் சரியன்று என எடுத்துக் காட்டியுள்ளார்கள்.

இமாம் அபூ ஹனீபாவின் தலைமையில் தொகுக்கப்பட்ட இந்த நூலில் மொத்தம் பன்னிரண்டு லட்சத்துத் தொண்ணூறாயிரம் 'மஸ்அலாக்கள்' இருந்திருக்கின்றன. அதில் ஆறு லட்சம் 'மஸ்அலா'க் களே உண்டு என்பாருமுண்டு. ஆனால், இமாமவர்களின் பிரதான மாணவரான இமாம் முஹம்மது இப்னு ஹஸன் ஷைபானிய்யி அவர்கள் தங்கள் நூற்களில் பன்னிரண்டு லட்சத்துத் தொண்ணூறாயிரம் மஸ்அலாக்கள் இருந்தன என்பதையே ஊர்ஜிதப் படுத்தியுள்ளார்கள்.

இந்த அற்புதமான தொகுப்புக்கு 'பிக்ஹுல் அக்பர்' என்ற பெயர் வைக்கப்பட்டது. ஆனால், முஸ்லிம் உலகின் துரதிருஷ்டம், இது பின்னர் எப்படியோ காணாமல் போய்விட்டது; எங்குமே

கிடைக்கவில்லை. சுமார் அறு நூறு ஆண்டுகளுக்கு முன்பே அது காணாமல் போயிருக்க வேண்டும் என்று, இமாம் ராஜி தரும் தகவல்களை வைத்து முடிவுகட்ட வேண்டுவதாக இருக்கிறது. இது மட்டுமன்றி, அதே காலத்தில் வெளியான இமாம் ஒளஜாயி, இப்னு ஜரீஹ், இப்னு அரூபா, ஹம்மாத் பின் அபீ மஃமான் போன்ற பெரியார் கள் எழுதிய நூற்கள்கூட எதுவுமே கிடைக்கவில்லை; யாவுமே காணாமல் போய்விட்டன. இமாமவர்களுடைய இந்த ஃபிக்ஹுல் அக்பரிலிருந்து, பல்வேறு நூற்களிலும் மேற்கோள் எடுத்துக் கையாளப் பட்டதுதான் இன்று இந்த நூலிலுள்ள விஷயங்களாகப் பார்க்கக் கிடைக்கின்றன. குறிப்பாக, இமாம் முஹம்மது இப்னு ஹஸன் ஷைபானிய்யி, இமாம் அபூ யூஸுப் ஆகிய இரண்டு பிரதம சீடர்களும் அந்த நூலிலுள்ள தீர்ப்புக்களை விளக்கி எழுதியுள்ள நூற்களிலிருந்து, அதிலுள்ள விஷயங்களையும், அவற்றின் சிறப்பையும் அறிந்து கொள்ள முடிகிறது. இந்த இரண்டு பெரியார்களுடைய நூற்களும் இன்றும் கிடைப்பவையாயுள்ளன.(அவற்றுள் இமாம் முஹம்மதின் 'கிதாபுல் அஸ்லு அல்லது அல் மப்ஸூத்', 'ஜாமிஉல் கபீர், 'ஜாமிஉஸ் ஸகீர்' இமாம் அபூ யூஸுபின் 'கிதாபுல் கரஜ்' ஆகியவை முக்கியமான வையாகும். 'பிக்ஹுல் அக்பர்' என்ற பெயரில் இன்று விளங்கி வரும் நூல், பின்னர் உண்டானதாகும், இமாமவர்களால் தொகுக்கப்பட்ட இப்பெயருடைய நூல்தான் காணாமல் போய்விட்டது.) இமாமவர் களுடைய இந்தத் தொகுப்பு நூல் 'முஸ்னது' என்று சில நூற்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது சரியன்று. இமாமவர்களின் தீர்ப்புகளி லுள்ள ஹதீஸ்கள் தொகுக்கப்பட்டு 'முஸ்னது இமாம் அபூ ஹனீபா' என்று வெளியிடப்பட்டுள்ளன. அது பற்றிய விபரம் கீழே வரவிருக்கிறது.

இமாமவர்கள் மறைந்த பின் அவர்களுடைய தலையாய மாணவர்களான இமாம் முஹம்மது இப்னு ஹஸன் ஷைபானிய்யி யும், இமாம் அபூ யூஸுபும் ஹனபி மத்ஹபின் நடை முறைகளை

இமாமவர்கள் விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து ஒழுங்குபடுத்திப் பூரண உருக்கொடுத்தனர். இந்த முப்பெரும் பெரியார்களும் வெளியிட்டுள்ள அபிப்பிராயங்களிடையே, அபிப்பிராயபேதம் காணப்படுவதாகக் குற்றம் சாட்டப்பட்டது, ஆனால், அவை உண்மையில் அபிப்பிராய பேதங்களல்ல, பல்வேறு சந்தர்ப்பங்களில் இமாமவர்கள் வழங்கிய தீர்ப்புக்கள் சிலவற்றில் இரண்டு விதக் கருத்துக்கள் காணப்பட்டதால் வந்த முரண்பாடுதான் அது. முன்னர் ஒரு ஹதீஸின் அடிப்படையில் தீர்ப்பளித்திருப்பார்கள்; பின்னர் அது போன்ற ஒரு பிரச்சனைகளில் வேறு ஒரு ஹதீஸ் புதிதாகக் கிடைத்து, அதன் அடிப்படையில் தீர்ப்பளித்திருப்பார்கள். இரண்டுக்குமிடையில் முரண்பாடு இருக்கும். இமாம் ஷாபியீ அவர்களின் தீர்ப்புக்களிலும் இப்படி நேர்ந்ததுண்டு. இது தவிர்க்க முடியாததாகும்.

ஹதீஸே மூலாதாரம்

இமாமவர்கள் தங்கள் முடிவுப்படி தீர்ப்பளித்ததாகவும், ஹதீஸ் ஆதாரம் வேண்டுமே என்று பொருட்படுத்துவதில்லை என்றும், எனவே அவர்கள் தீர்ப்புக்களில் பெரும்பாலும் ஹதீஸ் அடிப்படை இல்லை என்றும் பலர் குற்றம் சாட்டியுள்ளனர். இது எத்தனை விஷமத்தனமானது, எத்தனை தூரம் உண்மைக்குப் புறம்பானது என்பதை, அவர்கள் தீர்ப்புகள் வழங்குவதற்கு எடுத்துக் கொண்ட எச்சரிக்கைகளையும், அவர்கள் சபை நடத்திய முறையையும்,இமாம் ஜஃபருஸ் ஸாதிக்குக்குத் தந்த பதிலையும் படித்த யாரும் உணரலாம். எந்தத் தீர்ப்பையுமே அவர்கள் ஹதீஸ் ஆதாரத்தை எதிர்பாராமல் வெளியிட்டதில்லை என்பது தான் முழு உண்மையாகும். இவ்வித மறுப்புக்கள் பல்வேறு காலங்களிலும் எழுந்ததால், இமாமவர்கள் தங்கள் தீர்ப்புக்களில் கையாண்டுள்ள ஹதீஸ்களை மட்டும் திரட்டி, அவ்வப்போது தொகுப்பு நூற்கள் வெளியிட்டு வந்துள்ளனர். இத்தகைய தொகுப்புக்கள் 'முஸ்னது இமாம் அபூ ஹனீபா' என்ற பெயரில் விளங்கி வருகின்றன. சுமார் பத்துத் தொகுப்புக்கள் வரை இப்பெயரில்

வெளிவந்துள்ளன. இஃதொன்றே இமாமவர்கள் ஹதீஸ் அடிப்படையை எந்த அளவு மதித்துப் போற்றினார்கள் என்பதை விளக்கப் போதுமானதாகும்.

இமாமவர்கள் வெறும் அறிவு கூர்மையின் அடிப்படையில் அல்லது, திருக்குர்ஆன், ஹதீஸ் ஆதாரத்துக்குப் புறம்பான எந்த ஆதாரத்தின்மீதும் தீர்ப்பு வழங்குவதை வெறுத்தார்கள். அவர் களுடைய வாழ்க்கையின் பிற்காலத்தில் நடந்ததாகச் சொல்லப்படும் சம்பவமொன்று இதை நன்கு விளக்குவதாகும். அது வருமாறு:

மலசுத்தி செய்வதில் எந்த அளவுக்குப் பேணுதல் காட்ட வேண்டும் என்பதை இமாமவர்களிடம் கேட்டறிவதற்காக அவர்கள் வீட்டுக்குச் சிலர் வந்தனர். அப்போது இமாமவர்கள் ஏதோ வேலையாக வீட்டினுள் இருந்தார்கள். அவர்களுடைய வயதான வேலைக்காரி வெளியில் வந்து அவர்கள் என்ன வேலையாக இமாமவர்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்று வினவினாள். வந்தவர்கள் அவளிடம் விஷயத்தைச் சொன்னார்கள். உடனேயே அவள் ''இது தெரியாதா, வழவழப்பு நீங்கி வரவரப்பு (வழவழப்பற்ற நிலை) வரும்வரை கழுவ வேண்டும்'' என்று கூறினாள், ''இது இமாமவர்கள் முன்பே தெரிவித்த பதிலா?'' என்று வந்தவர்கள் கேட்கவே, வேலைக்காரி, ''இல்லை, இது என் வேலையில் கிடைத்த அனுபவம். கொழுப்பு, நெய் முதலியன படிந்த உணவுத் தட்டுகளை நான் கழுவுகிறேன். அவற்றின் மீது சாம்பலைப் போட்டுத் தேய்த்துப் பூசுகிறேன், அவற்றிலுள்ள வழ வழப்பு நீங்கி, என் கையில் 'வரவரப்பு' த் தட்டுப்பட்டதும், தட்டுகள் சுத்தமாகி விட்டதை அறிந்து அவற்றைப் பூசுவதை நிறுத்திக் கழுவி விடுகிறேன்'' என்று விளக்கம் தந்தாள்.

அவள் தன் வேலையைக் கவனிக்கச் சென்று சில நிமிஷங்களுக்கெல்லாம் இமாமவர்கள் வெளியில் வந்தார்கள். அவர்களிடம் தாங்கள் கேட்க வந்த விஷயத்தையும், அதற்கு அவர்கள் வீட்டு வேலைக்காரி தந்த பதிலையும் வந்தவர்கள் தெரிவித்தனர். தங்கள் முகத்தில் புன்னகை படர இமாமவர்கள் அந்த வேலைக்காரி

இப்படி எந்த ஆதாரத்தைக் கொண்டு பதிலளித்தாள் என வினவினார்கள். அவள் சொன்ன உணவுத் தட்டுகள் கழுவும் விருத்தாந்தத்தை இமாமவர்களிடம் தெரிவித்தனர். அவ்வளவுதான், இமாமவர்களின் வதனம் கோபத்தால் சிவந்து விட்டது. அவர்களுடைய உதடுகள் துடிக்கலாயின. உடனே, அந்த வேலைக்காரியை அழைத்து, ''நான் அனுமானம் (கியாஸ்) கொண்டு தீர்ப்பளிக்கிறேன் என்று நீயும் அப்படிச் செய்யத் துணிந்தாயா? உன் நாவைத் துண்டிக்க வேண்டும்'' என்று கடிந்து கொண்டார்கள். பின்னர், சற்று சாந்தமாகி திருக்குர்ஆன், ஹதீஸின் அடிப்படையிலன்றி மார்க்க விஷயங்களில் இவ்விதம் தன் சொந்த அனுபவத்தையோ, அறிவையோ கொண்டு தீர்ப்புக் கொடுப்பது சரியல்ல என்று விளக்கினார்கள். கடைசியில், **''நாம் எந்த அடிப்படையில் பேசுகிறோம் என்பதைத் தெரிந்து கொள்ளாதவர்கள் நம் சொல்லை ஆதாரமாக வைத்துத் தீர்ப்புக் கூறுவது ஹராமாகும்''** என்று மிகத் தெளிவாகக் கூறினார்கள். எனவே, இமாமவர்களின் தீர்ப்புக்கள் வெறும் அறிவின் அடிப்படையில் மட்டும் அமைந்தவை என்று கூறுவது அபத்தமாகும்; உண்மைக்கு மாற்றமான பேச்சாகும். அத்துடன் சுன்னத்தைப் பேணுவதில் அவர்கள் காட்டிய பேரார்வத்தை அவர்கள் உண்டாக்கியளித்த மத்ஹபின் நடைமுறையிலிருந்து நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

ஹனபி மத்ஹப்

இமாம் அபூ ஹனீபாவால் நபிபெருமானார் (ஸல்) அவர்களின் சொல், செயல்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டு, இமாம் முஹம்மது இப்னு ஹஸன் ஷைபானிய்யியாலும், இமாம் அபூ யூஸுபாலும் முறைப்படுத்தப்பட்டு உருவான ஹனபி மத்ஹப், இந்த இரண்டு பெரியார்களுடைய காலத்திலேயே இராக் முழுமையும் பரவிவிட்டது. அப்பாஸியாக் கலீபாக்களின் காலத்தில், இந்த மத்ஹபின்படியே தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. பின்னர், அங்கிருந்து இது குராஸான், புகாரா முதலிய பகுதிகளில் பரவிற்று. ஹிஜ்ரி ஐந்தாம் நூற்றாண்டு வரை ஹனபி மத்ஹப் வடமேற்கு ஆப்பிரிக்காவிலும்

மாலிக்கி மத்ஹபுடன் சேர்ந்து பரவியிருந்தது. பின்னர், துருக்கிய சுல்தான்களின் கிலாபத்தில் ஹனபி மத்ஹப் உன்னதம் பெற்று விளங்கிற்று. அத்துடன் எகிப்து, தூனிஸ் போன்ற இடங்களில் பாதிக்குப் பாதி ஹனபி மத்ஹபைப் பின்பற்றுவோராயினர். மத்திய ஆசியா (அதாவது, ஆப்கனிஸ்தான், துருக்கிஸ்தான், புகாரா, ஸமர்க்கந்து), இந்தியா ஆகிய இடங்களில், இன்று இந்த மத்ஹபைப் பின்பற்றுவோர் மிகவும் அதிகமாவர். இதற்கு இந்தப் பிரதேசங்களை ஆட்சி செய்த முஸ்லிம் மன்னர்களும் ஹனபிகளாக இருந்தது ஒரு முக்கிய காரணமாகும்.

எதேச்சாதிகாரம் செலுத்திய அப்பாஸியாக் கலீபாக்கள் மட்டும் எந்த மத்ஹபையும் பின்பற்றவில்லை. தங்களை 'முஜ்தஹிதுகள்' என்றும், தங்களுக்கு எந்த இமாமையும் பின்பற்றத் தேவையில்லை என்றும் இவர்கள் கூறிக் கொண்டனர். இவர்களுடைய ஆட்சி உச்ச நிலையி லிருந்த காலத்தில் இவ்விதம் அவர்கள் நடந்து கொண்டனர். இவர்கள் கீழ்நோக்கிவரத் தொடங்கிய பின்னரோ இவர்கள் எந்த மத்ஹபைப் பின்பற்றினார்கள் என்பது பற்றியே யாரும் கவலைப் படவில்லை. பின்னர் வந்த அப்பாஸியாக் கலீபாக்கள் சிலர்-குறிப்பாக, அப்துல்லாஹிப்னு முஃதஸிம் - ஹனபிகளாக இருந்துள்ளனர். கஷ்கரிலிருந்து பைத்துல் முகத்தஸ் வரை, கான்ஸ்டாண்டி நோபிளி லிருந்து குஜ் நாடுவரையும் உள்ள பகுதியைப் பன்னெடுங்காலம் ஆட்சிபுரிந்த சல்ஜுக்கிய மன்னர்கள் யாவரும் ஹனபிகள்தாம். மன்னர் மஹ்முது கஜ்னவி ஹனபி மத்ஹபின் மாபெரும் ஆலிமாக விளங்கி, சுமார் அறுபதாயிரம் மஸ்அலாக்கள் கொண்ட 'அந்நபரீத்' என்ற கிரந்தத்தையும் ஆக்கியுள்ளார்.

சிலுவைப் போரில் வெற்றிக்கொடி நாட்டிய சுல்தான் ஸலாஹுத்தீனுக்குப் போர் முறையைப் போதித்தவரும், பைத்துல் முகத்தஸுக்காக நடந்த போரில் முதன் முதலாக வெற்றிப் பாதைக்கு வழி வகுத்தவருமான நூருத்தீன் ஜங்கி என்ற மன்னர் ஹனபியாக இருந்தார். இவர் 'தாருல் ஹதீஸ்' என்னும் கலாசாலையையும்

நிறுவினார். இவருடைய பரம்பரையினர் ஹனபிகளாக இருந்தோடு, ஷாபியீ, மாலிக்கி மத்ஹபுகளின் கண்ணியத்தையும் போற்றிக் காத்தனர். சுல்தான் ஸலாஹுத்தீன் ஷாபியீ மத்ஹபைச் சேர்ந்த வராயினும், இவர் வமிசத்திலுதித்த பலர் ஹனபிகளாக இருந்திருக்கின்றனர்.

பெரும் நிலப்பரப்பை ஆட்சி செய்த தீரர், பேரறிஞர் ஈஸப்னுல் மலிக் என்ற அரசரும் ஹனபி தான். எகிப்தில் ஹிஜ்ரி 405 வரை நாற்பத்தேழு ஆண்டுகள் அரசோச்சி வெற்றிகள் பல கண்ட ஜர்ராக் பரம்பரை மன்னர்கள் அனைவரும் ஹனபிகளேயாவர். மேலும், அவர்களுடைய சட்ட மன்றங்களிலும் ஹனபி மத்ஹபின் தீர்ப்பு களுக்கே முதலிடம் தரப்பட்டு வந்தது. சுமார் அறுநூறு ஆண்டுகள் துருக்கியை ஆட்சி செலுத்திய மன்னர்கள் அனைவரும் ஹனபிகள் தாம். மேலும், இந்தியாவை அரசோச்சிய சுல்தான்களும், அவர்களைத் தொடர்ந்து வந்த மொகலாயச் சக்கரவர்த்திகளும் ஹனபி களாகவே இருந்தனர். இவர்களுடைய நீதி மன்றங்களில் பெரும் பாலும் ஹனபி மத்ஹபின் ஃபிக்ஹுப்படியே தீர்ப்புகள் வழங்கப் பட்டன. இன்றும் இந்திய முஸ்லிம்களில் மிகப் பெரும்பான்மையான வர்கள் ஹனபிகளாகவே இருக்கின்றனர்.

இவ்விதம் பிரபலமான ஆட்சியாளர்களின் ஆதரவைப் பெற்ற இந்த மத்ஹபின்படி ஆங்காங்கே தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. எனவே, ஹனபி மத்ஹபைப் பற்றி ஆயிரக் கணக்கான ஆசிரியர்கள் சட்ட நூற்கள் வெளியிடலாயினர். அவ்விதம் ஹனபி மத்ஹபைப் பற்றி வெளிவந்துள்ள நூற்களையும், பத்வாக்களையும் ஒன்று திரட்டினால் அவை அனைத்தையும் வைக்கப் பல மாடிகள் கொண்ட ஒரு மிகப் பெரிய கட்டடமே தேவைப்படும்.

ஹனபி மத்ஹபின் பழைய முறைப்படி சட்ட விளக்கம் செய்தவர்களுள் கஸ்ஸாப், தஹாவீ, ஹாகிம், அபுல்லைதுல் ஸமர்க்கந்தி, குதூரி, ஷம்ஸுல் ஜம்மல் சரக்ஸீ ஆகியோர் குறிப்பிடத்

தக்கவர்களாவர். ஹனபி மத்ஹபின் சட்ட திட்டங்கள் பற்றி புதிய பாணியில் விளக்கம் செய்தவர்களுள் 'ஹிதாயா' எழுதிய மர்கீனானீ, 'கன்ஸுத் தகாயிக்' எழுதிய நஸபீ, 'துர்ருல் ஹுக்காம்' எழுதிய முல்லா குஸ்ரு, 'முல்தகாவுல் அபுர்' எழுதிய ஹலபி ஆகியோர் வெகு பிரபல மான ஒரு சிலராவர். கடைசியில் பிரஸ்தாபித்துள்ள நூலுக்கு ஹஸ்காபீ என்பவர் எழுதிய 'துர்ருல் முக்தார்' என்ற விரிவுரை நூல் யாவரும் நன்கு அறிந்ததாகும். இது போன்று இந்த நூல்கள் ஒவ்வொன்றுக்கும் நூற்றுக் கணக்கான வியாக்கியான நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஹனபிச் சட்டத்தைச் சரியானபடித் தொகுப்பதற்கு அஹ்மது ஜவதத் பாஷாவின் தலைமையில் (துருக்கி கிலாபத்தில்) ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டி வெளியிட்ட சட்டத் தொகுப்பு நூல் 'மஜல்லீ'யும், அதற்கு அலீ ஹைதர் என்பவர் துருக்கி மொழியில் எழுதிய விரிவுரை நூல் 'துர்ருல் ஹுக்கா'மும் குறிப்பிடத் தக்கவையாகும்.

ஹனபி மத்ஹபின் பத்வாக்களின் தொகுப்புக் கடலில் மிகவும் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கே பிரஸ்தாபிக்கலாம்; புர்ஹானுத்தீன் இப்னு மாஜா எழுதிய ஸகீரதுல் புர்ஹானிய்யா, காதீகான் எழுதிய 'கானிய்யா' ஸிராஜுத்தீன் சஜாவந்தீ எழுதிய 'ஸிராஜிய்யா' இப்னு அலாவுத்தீனின் 'தாதார்கானிய்யா' பஜ்ஜாஜீயின் 'பஜ்ஜாஜிய்யா' இப்னு நுஜைமின் ஜைனிய்யா, ஹமீது அபந்தியின் 'ஹமீதிய்யா, கைருத்தீனுல் பாருக்கியின் கைரிய்யா, ஔரங்கஜேப் பாதுஷாவின் கட்டளைப்படி தயாரிக்கப்பட்ட 'பதாவா ஆலம்கீரிய்யா' முதலியனவாம். மேலும், உஸூல் (மூலச் சட்டம்) சம்பந்தமான நூல்களும் எண்ணற்ற வைகளாகும்.